ஒரு மகன் சொன்னான். 'நான் இரண்டு சீப்புகள் புத்த மடாலயத்திற்கு விற்றேன்'. வியாபாரி கேட்டான். 'எப்படி?'. 'புத்த பிக்குகளிடம் இந்த சீப்பை முதுகு சொறியவும் உபயோகிக்கலாம் என்று சொல்லிப் பார்த்தேன். இரண்டு புத்த பிக்குகளுக்கு அது சரியென்றுபட்டது. அதனால் அவர்கள் இருவரும் இரண்டு சீப்புகள் வாங்கினார்கள்'.இன்னொரு மகன் சொன்னான். 'நான் பத்து சீப்புகள் விற்பனை செய்தேன்' வியாபாரி ஆச்சரியத்துடன் கேட்டான். 'எப்படி?'. 'வழியெல்லாம் காற்று அதிகமாக உள்ளதால் மலை மேல் உள்ள அந்தப் புத்த மடாலயத்திற்குப் போபவர்கள் தலைமுடியெல்லாம் பெரும்பாலும் கலைந்து விடுகிறது. அப்படிக் கலைந்த தலைமுடியுடன் புத்தரை தரிசிக்க பக்தர்கள் செல்வது புத்தருக்குச் செய்யும் அவமரியாதையாகத் தோன்றுகிறது என்று புத்த மடாலயத்தில் சொன்னேன். ஒரு பெரிய கண்ணாடியும் சில சீப்புகளும் வைத்தால் அவர்கள் தங்கள் தலைமுடியைச் சரி செய்து கொண்டு புத்தரை தரிசிக்க செல்வது நன்றாக இருக்கும் என்ற ஆலோசனையும் சொன்னேன். ஒத்துக் கொண்டு பத்து சீப்புகள் வாங்கினார்கள்' வியாபாரி அந்த மகனைப் பாராட்டினான். மூன்றாம் மகன் சொன்னான். 'நான் ஆயிரம் சீப்புகள் விற்பனை செய்தேன்'. வியாபாரி ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்றான். 'எப்படி?' அந்த புத்த மடாலயத்திற்கு ஏராளமானோர் வந்து பொருளுதவி செய்கிறார்கள். அவர்கள் உதவியை மெச்சி புத்தரின் ஆசிகள் அவர்களை வழிநடத்தும் வண்ணம் அவர்களுக்கு ஏதாவது ஒரு நினைவுப் பரிசு வழங்கினால் அது மேலும் பலரும் புத்த மடாலயத்திற்கு உதவி செய்யத் தூண்ட உதவும் என்றேன். என்ன நினைவுப் பரிசு தரலாம் என்று மடாலயத் தலைவர் கேட்டார். நான் புத்தரின் வாசகங்களைப் பதித்து வைத்திருந்த சில சீப்புகளை நீட்டினேன். அந்த சீப்புகளை தினமும் உபயோகிக்கும் பக்தர்களுக்கு அந்த உபதேசங்களைத் தினமும் காணும் வாய்ப்பும் கிடைக்கும், அந்த உபதேசங்கள் அவர்களைத் தினமும் வழிநடத்துபவையாகவும் இருக்கும் என்று தெரிவித்தேன். அது நல்ல யோசனை என்று நினைத்த மடாலயத்தலைவர் உடனடியாக அப்படி புத்தரின் வாசகங்கள் பதித்த ஆயிரம் சீப்புகள் வாங்க ஒப்புக் கொண்டார்'. அந்த வியாபாரி எந்த மகனிடம் தன் வியாபாரத்தை ஒப்படைத்தார் என்று சொல்ல வேண்டியதில்லை.

மொட்டை பிக்குகளிடம் சீப்பு விற்கப் போவது கண்டிப்பாக ஆகாத வேலை என்று நினைப்பது தான் பொதுவாக நாம் காணக்கூடிய மனோபாவம். விதி சில சமயங்களில் நம்மைக் கொண்டு சேர்க்கும் சூழ்நிலையும் கிட்டத்தட்ட இதே போலத் தான் இருக்கும்.ஆனால் அதை ஒப்புக்கொண்டு முடங்கி நிற்போமானால் நாம் தோல்வியை ஒப்புக் கொண்டு விட்டோம் என்பது பொருள்.

அந்த வியாபாரியின் மகன்கள் ஏதாவது முயற்சி செய்ய வேண்டும் என்று தீர்மானித்தது புத்தி சாலித்தனமான செயல். நாமும் நாம் இருக்கும் அந்த மோசமான சூழ்நிலைக்குத் தீர்வே இல்லை என்று ஆரம்பத்தில் தோன்றினாலும் ஏதாவது செய்து நல்ல தீர்வைக் காண வேண்டும் என்று தீர்மானிப்பதுவே அறிவு.முயற்சிகளிலும் பலவகை உண்டு என்பதற்கு வியாபாரியின் மூன்று மகன்களின் முயற்சிகளே உதாரணம். ஒரு மகன் புத்த பிக்குகளிற்குத் தலை வார சீப்பு பயன்படா விட்டால் வேறெதற்காவது பயன்படுமா என்று யோசித்ததன் பலனாக இரண்டு சீப்புகள் அவனால் விற்க முடிந்தது. புத்த பிக்குகளுக்கு சீப்பு பயன்படாமல் போனாலும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு சீப்பு பயன்படுமா என்று இன்னொரு மகன் யோசித்ததால் அந்த புத்த மடாலயத்தின் முன்புறம் சில சீப்புகள் வைத்து பக்தர்கள் தலைமுடியை முறையாக வாரிக்கொண்டு உள்ளே உழைய உதவியாக பத்து சீப்புகள் விற்க முடிந்தது.

ஆனால் இந்த இரண்டு மகன்களுடைய முயற்சியாலும் தொடர்ந்து அந்த புத்த மடாலயத்திற்கு சீப்பு விற்க வழியில்லை. அவர்களுடைய விற்பனை ஒரு முறையோடு முடிந்து போய் விட்டது. மூன்றாம் மகன் கூட இரண்டாம் மகன் போலவே புத்த பிக்குகளுக்குப் பயனில்லா விட்டாலும் அவர்களுடன் சம்பந்தப்படும் மற்றவர்களுக்குப் பயன்படுமல்லவா என்கிற சிந்தனையைத் தான் செய்தான். அந்த வெறும் சீப்பை புத்தரின் உபதேசங்களைச் செதுக்கி அதை அவர்கள் விரும்பும் வண்ணம் உயர்த்தி அதை நன்கொடை வழங்கும் பக்தர்களுக்கு புத்தரின் ஆசியாக மாற்றி விற்பனை செய்தான். அவனுடைய வித்தியாசமான சிந்தனை அதற்காக அவன் எடுத்துக் கொண்ட உழைப்பு எல்லாம் மற்றவர்களை மிஞ்சும் வண்ணம் வெற்றி பெற்றது. மேலும் மற்ற இருவரைப் போல் இவனுடைய விற்பனை ஒரு முறையோடு முடிகிற விற்பனை அல்ல. புத்த மடாலயத்திற்கு நன்கொடைகள் தருகிறவர்கள் அதிகரிக்க அதிகரிக்க இவன் விற்பனையும் அதிகரிக்கும்.

ஒரு சூழ்நிலையை ஒரே நேர்கோணத்தில் பார்ப்பது இரண்டு சீப்பு விற்ற மகனைப் போல அற்ப விளைவுகளையே ஏற்படுத்தும். பார்வையை சற்று விரிவுபடுத்தி வேறு கோணங்களிலும் சிந்தித்து செயல்படுவது பத்து சீப்பு விற்றவன் முயற்சி போல நல்ல விளைவுகளை அதிகரிக்கும். மேலும் பல கோணங்களிலும் சிந்தித்து, தன் திறமையையும் உழைப்பையும் சேர்த்து முயற்சி செய்பவன் அடையும் நன்மைகள் ஆயிரம் சீப்புகள் விற்பனை செய்தவன் முயற்சியைப் போல பலமடங்கு அதிகரிக்கும். ஆரம்பத்தில் வழியே இல்லை என்று தோன்றியது போய் புதிய பிரதேசங்களுக்கு நம்மை அழைத்துச் செல்லும் வாய்ப்பாக அமையும்.

எனவே எந்தவொரு கடினமான சூழ்நிலையிலும் மனம் துவண்டு விடாதீர்கள். முடியாது என்று தோன்றும் ஆரம்ப அபிப்பிராயத்திற்கு அடிபணியாதீர்கள். சில சிறிய மாற்றங்களால் பெரிய விளைவுகளை ஏற்படுத்த முடியுமா என்று யோசியுங்கள். பொறுமையுடனும், நம்பிக்கையுடனும், துடிப்புடனும் முயன்றால் அந்தக் கடினமான சூழ்நிலையே நீங்கள் அடையப் போகும் அளப்பரிய வெற்றிகளுக்கு அஸ்திவாரமாக அமையக்கூடும்.

*- என்.கணேசன்*

# விடுதலைக்காக சங்கக்கார சொன்னதும் சொல்லாததும்...



கோபி
ஒரு பேப்பர்

கிரிக்கட் விளையாட்டின் தாய்வீடு என அழைக்கப்படும் Lords கிரிக்கற் மைதானத்தின் காப்பாளர்களான Marylebone Cricket Club (MCC) வருடாந்தம் "Cowdry Lecture" என்ற தலைப்பில் நடாத்தும் விரிவுரை இம்மாதம் 4ம் திகதி வழங்கப்பட்டது. இம்முறை இந்த உரையை வழங்கியவர் சிறிலங்கா கிரிக்கற் அணியின் முன்னாள் தலைவரும், அவ்வணியின் நட்சத்திர விளையாட்டு வீரருமான குமார் சொக்சாண்ட சங்கக்கார.

மேல்தட்டு கனவான்களுக்கு வழங்கப்படும் இவ் விரிவுரையை சிறிலங்கா கிரிக்கற் அணியிலிருந்து ஒருவர் ஆற்றுவது இதுவே முதல்தடவை என்பதனால், இவ்வாய்ப்பினையிட்டு சிறிலங்கா பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் உலக அரங்கில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் மீது ஏற்பட்டுள்ள வெறுப்பினை சாதுரியமாக திசைதிருப்பவும், வேறுவிதமான வியாக்கியானங்கள் வழங்கவும் இவ்வாய்ப்பு நன்கு பயன்படுத்தப்பட்டுள்ளமையை, அரசியலில் ஆர்வங்கொண்டுள்ள தமிழர்கள்கூட கண்டு கொள்ளத் தவறிவிடுகிறார்கள்.

சங்கக்கார வழங்கிய உரையை உன்னிப்பாக அவதானிப்பவர்கள், அவரை நேர்மையான மனித நேயமிக்க, விளையாட்டின் அறங்களையிட்டு அக்கறை கொண்டுள்ள ஒரு விளையாட்டு வீரர் என எண்ணலாம். அவர் பதின்ம வயதின் இறுதிப்பகுதியில் உள்ள ஒரு பாடசாலை மாணவராக, தனது உள்ளத்துணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் தனது உரையினை அமைத்துக் கொண்டிருந்தால், அவரை நாம் பாராட்டியே ஆகவேண்டும். ஆனால் முப்பத்திநான்கு வயதுடைய சங்கக்கார, ஊழலும் அரசியலும் நிறைந்த (அவரது பேச்சில் இதனை வெளிப்படுத்தியிருந்தார்) சிறிலங்காவின் கிறிக்கற் அணியினினைச் சேரந்த ஒருவர் என்பதால் அவரது உரையின் பின்புலத்தை நாம் அவதானிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

'தேசிய, சர்வதேசிய அரசியலை அவற்றின் அரசியற் பொறிமுறைக்கூடாக விளங்கிக்கொள்ள வேண்டுமே தவிர ஆட்சியாளர்களின் அறிக்கைகளுக்கும் தோற்றப்பாடுகளுக்கும் ஊடாகவல்ல' என அரசியல் அறிஞர் மு.திருநாவுக்கரசு அவரது 'சமஸ்டியா, தனிநாடா' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். பிரபலங்களின் நடவடிக்கைகள் விடயத்திலும் இத்தகைய அணுகுமுறை இருக்க வேண்டும் என்பது எனது துணிபு.

சங்கக்காரவின் உரையில் காணப்பட்ட முக்கிய விடயங்களைப் பார்ப்பதற்கு முன்னால், சிறிலங்கா தொடர்பில் சர்வதேச அபிப்பிராயம் எப்படியிருக்கிறது என்பதனை நோக்குவோம். சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய "Sri Lanka's Killing Fields" விபரணம் அது ஒளிபரப்பப்பட்டதன் நோக்கத்தை கனகச்சிதமாக நிறைவேற்றி வருகிறது எனக்கூறுவது ஒரு மிகைப்படுத்தப்பட்ட கருத்தல்ல. பிரித்தானிய பொதுமக்கள், குறிப்பாக மத்தியதர வர்க்கத்தினர் மத்தியில், சிறிலங்கா தொடர்பில் அவர்களுக்கிருந்த அபிப்பிராயத்தை இவ்விவரணம் மாற்றியுள்ளது. மக்கள் மத்தியில் கருத்துருவாக்கத்தை ஏற்படுத்துவதில் ஊடகங்களே பெரும் பங்கு வகிக்கின்றன என்ற வகையில், சிறிலங்கா விவகாரத்தில் பிரித்தானியா எத்தகைய நடவடிக்கைகளை எடுத்தாலும் அதனை மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் ஒரு அடித்தளத்தை இங்குள்ள ஊடகங்கள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

யூலை 4ம் திகதி, அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (ABC), பார்வையாளர்களின் அபிமானம்பெற்ற அதன் Four Corners நிகழ்ச்சியில் சனல் 4ன் விபரணத்தை ஒளிபரப்பியது. பிரித்தானிய மக்களைப் போலவே அவுஸ்திரேலிய மக்களும் தமது அதிர்ச்சியை வெளியிட்டார்கள். இவ்வொளிபரப்பினைத் தொடர்ந்து, 'சிறிலங்கா விடயத்தில் அவுஸ்திரேலியா நடவடிக்கை எடுக்க வேண்டுமா?' என 3AW வானொலி இணையவழி கருத்து கணிப்பு ஒன்றினை நடாத்தியது. இதில் கலந்துகொண்டவர்களில் தெண்ணூற்று ஐந்து விழுக்காட்டினர் ஆம் என வாக்களித்திருந்தனர் என்பதிலிருந்த ABC நிகழ்ச்சியின் தாக்கத்தினை உணர்ந்து கொள்ளலாம்.

அதனைத் தொடர்ந்து, இம்மாதம் 7ம், 8ம், 9ம் திகதிகளில் 'இந்தியா ருடே' ஊடகக் குழுமத்தின் ஆங்கில செய்தித் தொலைக்காட்சியான "Headlines Today" மேற்படி விபரணத்தினை தமிழ் இனப்படுகொலை (Tamil Genocide) என விளம்பரப்படுத்தி ஒளிபரப்புச் செய்தது. மேலும் இது தொடர்பில் ஒரு கருத்தரங்கினை சென்னையில் நடாத்தி அதனையும் நேரலையாக ஒளிபரப்புச் செய்தது. பிரித்தானியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் ஒளிபரப்புச் செய்யப்பட்டமையில் எத்தகைய முக்கியத்துவமிருந்ததோ அதனைவிட இரட்டிப்பு முக்கியத்துவம் இந்தியாவில் ஒளிபரப்பியமையில் இருந்தது.

இந்திய நடுவண் அரசின் அனுமதியில்லாமல் இந்தியா ருடே குழுமம் இத்தகைய முயற்சியில் இறங்கியிருக்க முடியாது. இதன் மூலம் ஆங்கிலத்தை விளங்கிக்கொள்ளக் கூடிய இந்தி மத்தியதர வர்க்கத்தினருக்கும், அறிவுச் சமூகத்திற்கும் இந்திய மைய அரசு என்ன செய்தியினை தெரிவித்திருக்கிறது என்பதனை புரிந்து கொள்ளலாம்.

Headlines Today விபரணம் பற்றி இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் நிருபமா இராவ் அவர்களிடம் 'இந்தியா ருடே' செய்தியாளர்கள் வினவிய போது, அவர் கருத்துக்கூற மறுத்துவிட்டார். முன்னரைப்போல் சிறிலங்காவின் பக்கம் நின்று கருத்துக்கூற நிருபமா முயலவில்லை என்பதனை நாம் நேர்மறையான விடயமாகவே எடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விவரணம் வெளிப்படுத்திய செய்திகள், முன்னர் இவ்விடயங்களையிட்டு கரிசனம் கொண்டிருக்காத இந்தியாவிலுள்ள மேற்தட்டு, உயர் மத்தியதர வர்க்க மக்களை சென்றடைந்துள்ளது எனபதனை அங்கிருந்து வெளியாகும் செய்திகளிலிருந்து அறிய முடிகிறது.

வடஅமெரிக்காவில் ஆங்காங்கே இவ்விபரணம் ஒளிபரப்பப்பட்டாலும், தொலைக்காட்சிகளில்? இன்னமும் ஒளிபரப்பப்படவில்லை எனினும் உலகில், ஆங்கிலம் பேசும் மக்கள் மத்தியில் சிறிலங்கா தொடர்பான நிலைப்பாடு மாறிவருகிறது.

இப்போதுள்ள நிலவரத்தின்படி, சிறிலங்காவில் மிகமோசமான முறையில் மானிடத்திற்கு எதிரான குற்றங்கள் நடந்துள்ளன. அவை தொடர்பில் ஒரு சுயாதீனமான விசாரணை நடாத்தப்பட்டு, குற்றவாளிகளைத் தண்டிக்கவேண்டும் என்பதில் ஒரு பொதுவான கருத்துருவாக்கம் ஏற்பட்டுவருகிறது என்பதனைக் குறிப்பிடலாம்.

இருப்பினும், இலங்கைத்தீவில் ஒரு இனப்படுகொலை நடைபெறுகிறது என்பதனையோ, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றியோ இங்கு கவனத்தில் எடுக்கப்படவில்லை. மாறாக இலங்கைத்தீவில் ஒரு ஆட்சிமாற்றத்தை (regime change) ஏற்படுத்துவதன் மூலம், அங்கு அமைதியையும், உறுதித்தன்மையையும் ஏற்படுத்தலாம் என்ற நிலைப்பாடே இன்னமும் இருந்து வருகிறது.

ஆட்சிமாற்றத்தை வலியுறுத்துபவர்களின் கருத்தை நியாயப்படுத்தும்வகையில், மேற்குலக மக்களால் வெறுக்கப்படுகிற ஒருவராகவே மகிந்த ராஜபக்ச உருவாகி வருகிறார் (அல்லது உருவாக்கப்பட்டு வருகிறார்). மூன்றாம் உலக நாடொன்றினை ஆட்சி செலுத்தும் ஒரு காட்டுமிராண்டி தலைவராகவே அவர் தென்படுகிறார். அவரது பேச்சும், ஆடை அணிகலங்களும் அதற்கு தோதாக அமைந்துள்ளது.

இந்நிலையில் மாற்றத்தினை ஏற்படுத்துவது என்பது அவரது ஆலோசகர்களினால் இயலாத ஒன்றாக இருக்கிறது. போதாக்குறைக்கு, மகிந்தவின் ஆலோசகரும், தாராண்மை வாதியாக அறியப்பட்டவரும், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றவருமான ரஜீவ விஜயசிங்க போன்றவர்கள்கூட தாராளவாத ஜனநாயக அரசாங்கங்கள் மீது வெளிப்படையாக குற்றம் சுமத்துவதன் மூலம் மேற்குலக மக்களிடமிருந்து மேலும் அந்நியப்படுகிறார்கள்.

உள்ளூர் வாக்குவங்கியை மாத்திரம் நம்பியிருக்கிற இராஜபக்ச சகோதரர்கள் இதையிட்டு அலட்டிக் கொள்ளாமல் அகப்பட்டதை சுருட்டிக் கொண்டிருந்தாலும், இதுவிடயத்தில் சிங்கள மேட்டுக்குடியினர் மிகுந்த கவலை கொண்டுள்ளனர். பாத்திரம் சூடேறுவது தெரியாமல் அதனுள் உள்ள தண்ணீரில் நீந்திக் கொணடிருக்கிற நண்டின் நிலையில் மகிந்த இராஜபக்ச இருப்பதாக சிங்கள பத்தி எழுத்தாளர் திசாராணி குணசேகர, அவரது அண்மைய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய பின்னணியிலேயே நாம் சங்கக்காரவின் உரையைபார்க்க வேண்டியிருக்கிறது. சங்கக்கார தனது உரையில் சிறிலங்காவின் கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையில் உள்ள ஊழல், விளையாட்டும் அரசியலும் கலந்திருப்பது பற்றியெல்லாம் குறிப்பிடுகிறார். சமூகப் பொறுப்புள்ளவர் போன்று தோற்றம் காட்டுகிறார். ஆயுத வன்முறை மக்களுக்கு தீங்கு விளைவிப்பதனால், அதனை இல்லாதொழிக்க வேண்டும் என்ற வகையில் சிறிலங்காவின் இனவழிப்பு நடவடிக்கைகளை நியாயப்படுத்துகிறார்.

ஜே.வி.பி, விடுதலைப்புலிகள் போன்ற அமைப்புகள் மக்களை துன்புறுத்தியதாக குறிப்பிடுகிறார். இராணுவம் நாட்டுப்பற்றுடன் நடந்ததாக தெரிவிக்கிறார். இலங்கைத் தீவில் உள்ள மக்கள் இனி வன்செயல்கள் பற்றி வரலாற்று நூல்களில்தான் படிக்கமுடியும் என நடைமுறைக்கு புறம்பான கற்பனை உலகிற்கு அழைத்துச் செல்கிறார்.


அரசியலில் ஆளுமையற்றவராக, வீரியமற்றவராக (impotant) கருதப்படும் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒப்பிடும்போது, சங்கக்கார மேற்கின் சிறந்த தெரிவாகவே தென்படுகிறார். இழந்துகொண்டிருக்கும் சிறிலங்காவின் பெயரை தூக்கி நிறுத்தக்கூடிய அதன் தூதுவராக அவர் இருக்கிறார் என்பதிலிருந்து இதிலுள்ள அபாயத்தினை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

மகிந்த இராஜபக்ச ஒக்ஸ்போர்ட் யூனியனில் சொல்ல விழைந்ததை, சற்று மாற்றி சங்கக்கார MCC இல் சொல்லியிருக்கிறார். ஆனால் மகிந்தவிற்கு போர்க்கொடி காட்டியவர்களில் சிலர் சங்கக்காரவின் பேச்சில் மயங்கிக் கிடக்கிறார்கள் என்பதுதான் சோகம்.

ஒரு பேப்பர்
கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| **New Malden** | |
| Ayngaran | 020 8949 6734 |
| Megaa Superstore | 020 8336 0061 |
| Vaaniyan | 020 8605 0434 |
| Murugan Kovil | 020 8942 4475 |
| Vaishna Superfoods | 020 8399 4488 |
| Stoneleigh Amman | 020 8393 8147 |
| **Tooting** | |
| Yhaal House | 020 8767 8585 |
| Sharon | 020 8672 9353 |
| Amman Kovil | 020 8795 4258 |
| Niru Con.Store | 020 8672 3200 |
| Prime Foods | 020 8682 3777 |
| Ayngaran | 020 8540 1500 |
| Suvai Aruvi | 020 8543 6266 |
| Adchaya | 020 8540 8192 |
| Spice way | 020 8685 1122 |
| **Croydon** | |
| Best Foods | 020 8684 6269 |
| Haran Bros | 020 8686 2552 |
| Chennai dosa | 020 8665 9192 |
| Eelam Video | 020 8664 8351 |
| Spice Land | 020 8667 1700 |
| **Lewisham** | |
| Chandra | 020 8333 8680 |
| Eelam Shop | 020 8690 6545 |
| Katpagam | 020 8694 8810 |
| AJ Video | 020 8691 8888 |
| Sivan Kovil | 020 8318 9844 |
| KRS | 020 8297 9432 |
| **Eastham** | |
| Seelans | 020 8471 5733 |
| Sakthi Cash & Carry | 020 8394 4560 |
| Murugan Temple | 020 8478 8433 |
| Station Super Store | 020 8503 4711 |
| Best Food | 020 8552 9578 |
| Akilan Enterprise | 020 8548 0033 |
| **Ilford** | |
| Vinnayagar Kovil | 020 8911 8934 |
| Nathan | 020 8514 1744 |
| Angels | 020 8553 0490 |
| Sri Supermarket | |
| **Edmonton** | |
| New Kannan Stores | 020 8884 4979 |
| Sayas | 020 8805 9529 |
| Nagapoosani Temple | 020 8884 3333 |
| **Walthamstow** | |
| Vinayagar Kovil | 020 8527 3819 |
| Kumarans | 020 7609 1912 |
| Prabas | 020 8509 3322 |
| **Harrow** | |
| Tsk food & Wine | 020 7622 4258 |
| Eelavan | 020 8863 6160 |
| Prabhas | 020 8866 0977 |
| South Harrow F&W | 020 8423 6321 |
| Best foods | 020 8423 9933 |
| Sambal Express | 020 8799 7171 |
| **Wembley** | |
| Malar Super Market | 020 8795 5797 |
| Ganapathy C & C | 020 8795 4627 |
| Best foods | 020 8900 0100 |
| Vahizan Disc | 020 8795 0648 |
| **Ealing** | |
| Amman kovil | 020 8810 0835 |
| **Greenford** | |
| Ambiha | 020 8813 0967 |
| **South hall** | |
| Thamilini C & C | 020 8606 9900 |
| Duvaraka C & C | 020 8813 9126 |
| Ruby Food Store | 020 8813 9663 |
| Ruby restaurant | 020 8574 4087 |
| Luxmys C & C | 020 8571 4599 |
| Tamilan C & C | 020 8561 8174 |
| Lady Margret | 020 8571 4434 |

# HAPPY DAYS




# LION BEERS HALF PRICE !!

At selected stockists, including:

**Grocers**


AJ Foods Lewisham. Anglo Asian Wembley. Belmont Supermarket Harrow. Best Food Hounslow. Best Foods South Harrow. Chandra Stores Catford. Ganapathy C/C Wembley. Harran Brothers Croydon. High Street Convenience Store East Ham. KRS Foods Lewisham. Malar Supermarket Wembley. Mega Superstore Tooting. Rayners Wine Harrow. South Harrow Food & Wine Harrow. Sharon Tooting. Stop & Go East Ham. VVN Sons Southall.

**Restaurants**

Gana Cafe Harrow. Gana Cafe Wembley. Hop & Spice Balham. Hopper Hut Wembley. Jaffna House Tooting. Palm Beach Wembley. Palm Palace Southall. Papaya Ealing. Papaya Harrow. Prince of Ceylon Hendon. Sambal Kitchen & Diner Harrow. Sarasas Rest. Southall. Serendip Indo Sutton. Spicy Island New Malden. Spicy Palace Southall. Watch Me Rest Wimbledon. Yaal Rest. East Ham.

Check with individual outlets for promotion dates or phone the promotion hotline: 0208 795 5224

# விடுதலையடைந்த தென்சூடான் எதிர்கொள்ளும் சவால்கள்.




8.26 மில்லியன் மக்களையும், 644,329 சதுர கிலோமீற்றர் பரப்பளவையும் கொண்ட புதிய தேசமொன்று, இம்மாதம் ஒன்பதாம் திகதியன்று ஆபிரிக்கக் கண்டத்தில் உதயமாகியிருக்கிறது.

1.5 மில்லியன் மக்களைப் பலிகொண்டு இத்தேசம் உருவாகியுள்ளது.

1993ஆம் ஆண்டு, எத்தியோப்பியாவிலிருந்து எரித்திரியா உருவான பின்னர், அக்கண்டத்தில், இந்த நூற்றாண்டில் தோன்றிய புதிய நாடாக தென்சூடான் இடம்பெற்றிருக்கிறது குறிப்பிடத்தக்கது.

சுதந்திரப் பிரகடன நிகழ்வில், பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் உரையாற்றிய இப் புதிய தேசத்தின் அதிபர் சல்வா கீர் அவர்கள் 'விதையாகிப் போன மாவீரர்கள் சிந்திய இரத்தம் வீணாகிப் போய் விடவில்லையென்றும் ,இந்தக் கணத்திற்காகவே தாம் 56 வருடங்கள் காத்திருந்தோம்' எனக் கூறினார்.

ஜூலை 2005இல், உலங்கு வானூர்தி விபத்தொன்றில் கொல்லப்பட்டதாகக் கருதப்படும், போராட்டக் குழுவின் தலைவர் ஜோன் கராங் அவர்களின் உடலம் புதைக்கப்பட்ட நினைவு மண்டபத்திற்கு அருகிலேயே, இச் சுதந்திரப் பிரகடன நிகழ்வு நடைபெற்றது.

சூடான் அதிபர் ஒமர் அல் பசீர், இந்நிகழ்வில் கலந்துகொண்டு, புதியதேசத்திற்கு தனது வாழ்த்தினைத் தெரிவித்தார்.இதில் ஆச்சரியமான விடயம் என்னவென்றால், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் டாபூரில் நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கான காரணகர்த்தாவாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அதிபர் அல் பசீர் இருந்த மேடையிலே ஐ.நா சபையின் பொதுச் செயலாளர் பான்.கீ மூன் அவர்களும் இருந்துள்ளார்.

தென்சூடான் மக்கள் விடுதலை இயக்கமானது, ரோம் சாசனத்தில் கைச்சாத்திடாததால், இனப்படுகொலையாளர் அல்பசீரின் வருகையை எதிர்க்க முடியாமல் போய்விட்டதென்கிற காரணத்தை சிலர் கூற முன்வரலாம்.

2005இல், சூடான் மக்கள் விடுதலை இராணுவத்திற்கும் (SPLA) அல் பசீருக்குமிடையே, முழுமையான சமாதான உடன்படிக்கை (CPA) உருவான பின்னர், சூடான் மக்கள் விடுதலை இயக்கத்தின் தலைமையில் சுயாட்சி அடிப்படையிலமைந்த நிர்வாகக் கட்டமைப்பொன்று தென் சூடானில் நிறுவப்பட்டது.

அன்றிலிருந்து, பிரிந்து செல்வதற்கான சர்வஜன வாக்கெடுப்பு ஜனவரி 2011 நடைபெறும் வரை எண்ணெய் வளச் சுரண்டல் குறித்தான வல்லரசுகளின் போட்டி உச்சம் பெற்றதெனலாம்.

தற்போதய தென்சூடான் பகுதியில் உற்பத்தியாகும் எண்ணெய் ஆனது முழு சூடானின் உற்பத்தியில் 80 சதவீதமாகும்.

ஆனாலும் இதன் 50 விழுக்காட்டிற்கான வருமானத்தையே, தென் சூடானிற்கு ஒதுக்கினார் அதிபர் ஒமர் அல் பசீர்.

அதேவேளை கடந்த ஆறு வருடங்களில், அமெரிக்க அரசு நிறுவனங்களின் கணிசமான நிதியுதவியை தென்சூடான் நிர்வாகம் பெற்று வந்ததை குறிப்பிட வேண்டும்.

தென்சூடானின் தலைநகரான யூபாவை (JUBA) மையமிட்டு, நடைபெறும் ஆட்சியின் கீழ் 150,000 இலிருந்து 200,00 வரையான இராணுவத்தினர் இயங்குகின்றனர்.

அதேவேளை எண்ணெய் வருவாயிலிருந்து பெறப்படும் பெருமளவு நிதி, இந்த இராணுவத்தினரிற்கான பராமரிப்புக்குச் செலவிடப்படுவதாக குற்றச்சாட்டு நிலவுகிறது.

நாளொன்றுக்கு 5 இலட்சம் பீப்பாய்கள் எண்ணெய் உற்பத்தி செய்யும் சூடானின் மூன்றில் நான்கு பங்கு எண்ணெய் யூபாவிலிருந்து பெறப்படுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அதிகளவிலான எண்ணெய் வருவாயினை, படைத்துறைக்கு செலவிடுவதை மட்டுப்படுத்துவதற்கு அதன் இராணுவ எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைக்க வேண்டுமென ஐ.நா சபை வலியுறுத்துவதை கவனிக்க வேண்டும்.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் குறித்து எட்டுப்பக்க அறிக்கையொன்றினை அண்மையில் வெளியிட்ட அமெரிக்காவின் காங்கிரஸ் ஆய்வுதேவையானது(CS), ஜூலை முதலாம் திகதியன்று, புதிதாக உருவாகப்போகும் தென் சூடான் குடியரசு எதிர்கொள்ளப்போகும், சவால்கள் குறித்து நீண்ட அறிக்கை ஒன்றினை வெளியிட்டது.

இவை தவிர 'அரசியல் விஞ்ஞானத்திற்கான சூடானிய சமூகம்' என்கிற அமைப்பின் தலைவர் பேராசிரியர் ஹசன்-அல்-சவ்ரி (Hassan Al-Saoury) அவர்கள், புதிய தேசம் பற்றிக் குறிப்பிடும் போது, 'அமெரிக்கா , உகண்டா மற்றும் கென்யா நாடுகளுடனான வெளியுறவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது' என்கிறார்.

**அரசியல் பார்வை**

**இதயச்சந்திரன்**

இதில் உகண்டா, கென்யா பற்றியதான இவரின் பார்வையில், உற்பத்தியாகும் எண்ணெய் வட சூடானிற்கூடாக கொண்டு செல்வதைவிட, கென்யாவினூடாக குழாய்களை அமைத்து அமன் மொம்பாசா துறைமுகத்தை ஏற்றுமதிக்கான மையமாகத் தெரிவு செய்யலாமென்பதை சுட்டிக் காட்டுவது போல் தெரிகிறது. இருப்பினும் இரண்டு பாரிய சவால்களை இப்புதிய தேசம் எதிர்கொள்கிறது.

ஏற்றுமதி வருமானத்திலும், முழுத் தேசிய உற்பத்தியிலும் எண்ணெயிலே தங்கியிருக்கும் தென்சூடான் குடியரசு தடங்கலற்ற பாதைகளை உருவாக்க வேண்டிய தேவையை உணர்கிறது.

அதேவேளை இது நிலப்பரபினால் சூழப்பட்டுள்ள நாடு என்பதால், துறைமுகங்களைக் கொண்ட அண்டைய நாடுகளுடன் சுமுகமான உறவினையும் அதற்கான சமரசமான சமன்பாட்டினையும் கொண்டிருப்பது அவசியம். அத்தோடு மத்திய கிழக்கு நாடுகளில் தமது இராஜ தந்திர உறவாடல்களை உருவாக்கும் முனைப்பில் ஈடுபட, தென் சூடான் அரசு முயல்கிறது.

டொலர் முதலீட்டிற்கான மையமாக, ஐக்கிய அரபுக் குடியரசினை(UAE) தேர்ந்தெடுக்கும் வகையில் அங்கு தனது வணிகத் தூதரகத்தை ஆரம்பிக்கப்போகிறது.

பட்டினி தேசமாகவிருக்கும் தென் சூடானில், உள் கட்டுமானங்கள் மிகக் குறைவு. அரசியல் முறைமையானது, ஒரு கட்சி ஆளுமைக்குள் முடக்கப்பட்டுள்ளது.

**51 சதவீத மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றார்கள் 83 சதவீத மக்களின் வாழ்வு கிராமப்புறங்களில் முடங்கிக் கிடக்கிறது. படிப்பறிவுள்ள வயதானோரின் சதவீதம் 27 ஆகும்.**

இதில் ஆச்சரியமான இன்னொரு புள்ளிவிபரமொன்று உண்டு. ஒரு வீதமான தென்சூடான் மக்களிடமே வங்கிக்கணக்கு இருக்கிறதாம்.

அரச நிர்வாக உட்கட்டமைப்பும், மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கான வழங்கல்கள் போன்றவை சீர்குலைந்த நிலையில் அந்நாட்டினைக் கட்டியெழுப்புவது பெரும் சவாலாக அமையப் போகிறது.

குறைந்த பட்சம் ஏழ கிளர்ச்சிக்குழுக்கள், தென்சூடானில் இன்னமும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவை புதிதாகப் பல நெருக்கடிகளை அங்கு உருவாக்கும்.

இவை தவிர எல்லைகளைத் தீர்மானிப்பது, சூடானின் கடன்சுமையைப் பங்கிடுவது, எண்ணெய் வளத்தை பிரித்தெடுப்பது போன்ற விடயங்கள் இன்னும் தீர்மானிக்கப்படாத விவகாரங்களாகும்.

எல்லைப் பகுதியிலுள்ள பிரச்சினைக்குரிய எண்ணெய் வளம் கொண்ட பிரதேசங்களான அபியெய் (Abyei) தென் கொர்டொபான் (South Kordofan) குறித்து, எந்த விதமான உடன்பாட்டிற்கு இன்னமும் இருதரப்பும் வரவில்லை.

இப்பிரதேசங்கள், வடசூடானுடனோ அல்லது தென்சூடான் குடியரசுடனோ, இணைந்து கொள்வது என்பது குறித்து, இவ்வருட இறுதிக்குள் வாக்கெடுப்பு ஒன்று நிகழும் என் எதிர்பார்க்கப்படுகிறது.

சீனாவினால் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த எண்ணெய் வயல்களின் எதிர்காலம் குறித்து, தென் சூடான் குடியரசு தீர்மானிக்குமா அல்லது பிரிவினைக்கு வெளிப்படையாக ஆதரவளித்த அமெரிக்கா தீர்மானிக்குமா வென்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

அடக்குமுறைகளிலிருந்து விடுதலை பெற்ற இத்தேசம் சர்வதேச வல்லாண்மைச் சக்திக்கெதிரான புதியதொரு போராட்டத்திற்கு முகம் கொடுக்கப் போகிறது.

Kerala Ayurveda
Special Offers!!
Herbal facial £15
TRADITIONAL KERALA AYURVEDIC MASSAGE THERAPY
Our unique Ayurveda Pancha Karma therapy
Reduces aches and pains
Reduces stress and tension
Cleanses body toxins
Refreshes the skin, deep cleans & moisturises
Helps Skin allergy and eczema
Improves sleep patterns
Release muscle tensions
Relieve migraine
Relieve nasal and sinus blocking
A Herbal Remedy
Full body massage starts from £ 20
Call: 020 8907 8990
241, Kenton Lane, Kenton, Harrow HA3 8RP (Between Belmont roundabout & Kenton Library)

# சுமார் சட்டத்தரணிகளும் வழக்குக் கோப்புகளும்

சுகி
(ஒருபேப்பருக்காக)

பிறந்த வளர்ந்த நாட்டைவிட்டு வெளியேறுவது என்பது ஒரு துன்பகரமான நிகழ்வு. புலம்பெயர் தமிழனுக்கு அதனைக் கட்டாயமான தாக்கியது, இலங்கையில் உள்ள இனப்படுகொலை அரசாங்கமும், அரசியல் சூழ்நிலையும் தான். எவ்வளவோ சிரமங்களுக்கு அப்பால், அகதியாக வந்து வெளிநாட்டில் காலடி வைத்ததும் இங்கு நீக்கமற நிறைந்திருக்கும் தமிழ் சட்டத்தரணிகளைக் கண்டு மன நிம்மதி அடைந்து, முதலில் காணவிளைவதும் அவர்களையே.

அங்கு போனதும் அவர் முதலில், வந்த சரித்திரத்தை எழுதிக்கொண்டுவரும்படி சொல்லுவார். நீங்களும் உங்கள் மூளையை பிழிந்து தேதிவாரியாக நினைவுபடுத்தி எல்லாவற்றையும் எழுதிக்கெண்டு போக, உங்கள் சட்டத்தரணியும் என்ன இப்படி எழுதிக்கொண்டுவந்திருக்கிறீர் என்று அங்க இஞ்ச தட்டி நிமிர்த்தி மெருகு படுத்தி அனுப்பி வைப்பார். ஒருமாதிரி வதிவிட அனுமதி கிடைத்து, அவர்களும் சரி என்று ஊதியத்தை எடுத்துக்கொண்டு, அந்தப் பத்திரங்களைக் கொடுத்து விட்டார்கள் என்றால் அத்தோடு சுபம் என்று முடிந்து விடும். ஆனால் பல சந்தர்பங்களில் அப்படி சுலபமாக முடிந்து விடுவதில்லை.

பல காரணங்களுக்காக Home Office க்கும் சட்டத்தரணிக்கும் இடையில் பந்து போல அடிபடவேண்டிருக்கும். சில நேரங்களில் sur name, first name இடம்மாற்றம், மனைவி, பிள்ளைகளை கூப்பிட வேண்டும், திருமணம் செய்தவர்கள் அவர்களின் வாழ்கை துணைகளைக் கூட்டிவரவேண்டும் எனப் பிரச்சனைகள் புதிது புதிதாக முளைத்தவண்ணமே இருக்கும். இதில் பலவிடயங்களை நாமாகவே Home Office க்கு எழுதித் தீர்த்துக்கொள்ளலாம்.

ஆனால் நாம் இயல்பாகவே நூறு சதவிகிதம் சரியாக வரவேண்டும் என்ற விருப்பத்தில் அப்படி எல்லாம் செய்வதில்லை, சட்டவாளர்களை நாடுகிறோம். எமது சட்டத்தரணியிடம் போனால் உமது ஃபைலை (கோப்பு) காப்பகத்தில் (Archive) வைத்து விட்டோம். இனி ஆளைவிட்டுத்தான் தேடிப்பார்க்க வேண்டும். எல்லோரும் சரியான வேலைப்பளுவில் உள்ளார்கள்.

ஒரு இரண்டில் இருந்து பத்து நாள் தாரும். அத்தோடு இதற்கு ஒரு நூற்றியம்பது வரை முடியும் என்பது. அவர்கள் சொல்வதைப் பார்த்தால் ஏதோ புதையலைத் தேடிக்கண்டு பிடித்துத்தர புதைபொருள் ஆராய்ச்சியாளரை வேலைக்கு அமர்த்த வேண்டும்? என்பதுபோல தொனிக்கும். நீங்கள் கற்பனையில் ஏதோ ஓலைச்சுவடி ஒன்றை கண்டுபிடித்து வாசிக்கும்படி கேட்டது போன்ற உணர்வில் இருப்பீர்கள். இதைக்கூட அவசரமாக சொல்லிவிட்டு எனக்கு நிறைய வேலையிருக்கிறது. கெதியில சொல்லும் இல்லையென்றால் பிறகு அடியும் என்பார்கள்

உண்மையில் உங்களது ஃபைலை எப்படி பேணுவது என்பது பற்றிய பயிற்சி அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கும். நூல்நிலையத்தில் புத்தகங்களை அடுக்குவது போன்ற ஒருமுறையில் உங்கள் ஃபையிலும் அடுக்கப்பட்டிருக்க வேண்டும். கையை வைத்தால் ஃபைல் வராவிட்டால் அது அவர்களின் நிர்வாக திறனில் உள்ள பிரச்சனை உங்கள் பிரச்சனை அல்ல. பையில் தேட என காசு கேட்கிறார்கள்? ஆனால் அதற்கு பற்றுசீட்டு தருவதை சௌகரியமாக மறந்து விடுவார்கள். ஏதோ உண்மையாக வரும் தொகையைவிட தாம் அரைவாசிதான் அறவிடுவதுபோல வேறு கதை விடுவார்கள்.

இதைவிட உங்களின் சட்டத்தரணியின் செயற்பாடு பிடிக்காமல், நீங்கள் இன்னுமொரு சட்டத்தரணியிடம் உங்களது கோப்புகளை மாற்றப்போகிறீர்கள் அல்லது நீங்களே கையாளப்போகிறீர்கள் என்றால் அதை நீங்களாகவே ஒரு கடிதத்தில் எழுதி கொடுத்து, உங்களது கோப்புகளை குறித்த சட்டத்தரணியிடம் இருந்து விடுவித்துக் கொள்ளலாம். இதற்கு அவர்கள் Photocopy எடுக்கும் கட்டணத்தை தவிர வேறு எந்த கட்டணமும் அறவிடத்தேவையில்லை. நீங்கள் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய ஊதியத்தில் எதாவது நிலுவை இருந்திருந்தால் அதை அவர்கள் உங்களது கோப்புகளை விடுவிக்கும் முன் அறவிட்டுக் கொள்ளலாம்.

ஆனால் நடைமுறையில் சில சட்டத்தரணிகள் இதை ஒரு தன்மான பிரச்சனையாக எடுத்துக் கொண்டு, வரிந்துகட்டிக் கொண்டு ஒரு சன்னதமே ஆடிவிடுவார்கள். இன்னும் சிலர் ஒருபடி மேல் போய், இதுவரை தாம்தான் அவர்களின் சட்டத்தரணி என்பதையும் மறந்து அவர்களைப் பற்றி Home Officeக்கு எழுதிப்போடப்போவதாகக் கூட மிரட்டுவார்கள். ஆங்கில அறிவு குறைந்த, வெளி நாட்டு நடப்பு தெரியாத, அங்கிருந்து அகதியாக மிகவும் நொந்து போய் வந்தவர்கள், இங்கும் ஏன் பிரச்சனையை வளர்ப்பான் எனக் கேட்டத்தை கொடுப்பார்கள் அல்லது சட்டத்தரணியை மாற்றப்பயத்தில் பேசாமல் இருப்பார்கள். இப்படியான மனஉளைச்சலில் உழல்வதை விட்டு Citizen Advice Bureau, சமூக நிறுவனங்கள் போன்றவற்றில் நீங்கள் ஆலோசனைகளைப் பெறலாம்.

உங்களது அகதி விண்ணப்பம் மார்ச் 2007 க்கு முன்னதாக கோரியிருந்தால், அதை மீள் சரிபார்ப்பதற்கென தனியான பிரிவு ஒன்று HomeOffice ஆல் அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் பழைய விண்ணப்பங்களை மீள்சரிபார்த்து விரைவாக முடிவுக்கு வர விளைகிறார்கள்.

நீங்கள் இந்த நாட்டுக்குள் நுழையும் போது அகதி அந்தஸ்தை கோரியிருந்தால், அதில் உங்களுக்காக வடிகட்டல் செயலாக்கத்தை (screening process) ஒரு சின்ன நேர்முகம், கடவுச்சீட்டு, அடையாள அட்டை, கைரேகை பதிவு போன்றவற்றின் முலம் செய்வார்கள். நீங்கள் மொழிபெயர்பாளர் தேவையெனில் கோரலாம். இதில் உங்களுக்கான ARC card (application registration card) வழங்குவார்கள். இதையே நீங்கள் உள்ளே நுழைந்த பின் கோருவதாக இருந்தால் நீங்கள் குறைடனில் உள்ள asylum screening unit க்கு போகவேண்டும்.

நீங்கள் மார்ச் 2007 க்கு பின் அகதி விண்ணப்பம் கோரியிருந்தால் உங்கள் அகதி கோரிக்கையைக்கவனிக்கவென முதலில் இருந்து முடிவுவரை Home office ஆல் Case Owner என்று அழைக்கப்படும் உத்தியோகத்தவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பார். அவர் கூடியவரை ஆறுமாதங்களுக்குள் உங்கள் அகதி கோரிக்கைக்கான பதிலைத்தர விளைவார். அவ்வுத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு, ஒரு வாரத்திற்கு பிறகு உங்களை அகதி தஞ்சத்திற்கான நேர்முக பேட்டிக்கு அழைப்பார்கள். இதில் நீங்கள் ஏன் அகதி தஞ்சம் கோருகிறீர்கள் என்பதையும், ஏன் உங்கள் நாட்டுக்கு திரும்பி போக முடியாது என்பதையும் தக்க ஆதாரத்தோடு விரிவாகவும், முழுமையாகவும் சொல்ல வேண்டும். தேவையாயின் முற் கூட்டியே மொழிபெயர்பாளருக்கு விண்ணப்பிக்கலாம். நீங்கள் இதற்கு உங்கள் சட்டதரணியையும் கூட்டிச்செல்லாம். ஆனால் அவர் உங்களுக்கான சட்ட உதவிப்பணத்தை எடுப்பவராக இருந்தால் சிலவேளைகளில் சமூகமளிக்க இயலாமல் இருக்கும். அதை முற்கூட்டியே தெளிவுபடுத்திக்கொள்வது நல்லது. உங்கள் சார்பில் சட்டத்தரணிகள் பங்கேற்காத நிலையில் நீங்கள் பதிவுநாடவில் பதிவுசெய்து தரும்படி கேட்கலாம். ஆனால் அந்த வேண்டுகோளை நீங்கள் ஒருநாள் முன்னதாக விடுத்திருக்க வேண்டும். உங்கள் சட்டத்தரணி சமூகமளிக்காமல் விட்டால் அதற்காக பிற்போடப்பட மாட்டாது. இதன் பிறகு நீங்கள் உங்கள் அகதி தஞ்சகோரிகையின் பதிலை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டும்.

மொத்தத்தில் உங்கள் சட்டத்தரணி என்பவர், உங்கள் தலையெழுத்தல்ல அவரை மாற்றமுடியாமல் பிரச்சனைப் படுவதற்கு.

SRI KOLKATTA KALI MATHA ASTROLOGER



Andaman, Nicobar (India)
FAMUS ASTROLOGER
PANDITH
G.V. RAMAN BANDARI
உலக மாந்திரீக சக்தி



The PUNDIT can read the Past, Present and Future by hand Prediction, Name Date of Birth, Horoscope relating to love education, money and Are you Suffering with financial Matters Job, Family Problems, Love, Education, Marriage problems, Health, Children Problems, Depression, Enemy Problems, Evil Spirit problems. The Holy spirit will guide you to meet and convince you. I will remove and destroy all bad, witchcraft, jealousy and black magic permanently with superior strength & holy given power to protect you and your family from evil things.

100% guarantee Removal of Evil Spirits & Black Magic of all Religion & Communities by Performing Special type of Pooja's & Prayers

Address : OFF LICENSE CONVENIENCE STORE
EELAM ENTERPRISES.164 B, MITCHAM ROAD, TOOTING.
LONDON. SW17 9NJ (OPP St BONIFACE CHURCH)
(11 AM TO 8PM. 7 DAYS WEEK)
MOBILE : 07438188606 | 07961378737
(ALL TYPES OF BLACK MAGIC REMOVED IMMEDIATELY)

UNIVERSAL ESTATES
www.universal-estates.co.uk
LANDLORDS
Ombudsman
WE OFFER GUARANTEED RENTS
• WE CAN LET YOUR PROPERTY IN 24 HOURS
• HASSLE FREE RENTAL SERVICE
• PROFESSIONAL AND COMPANY LETS
• 0% COMMISSION
30 years experience
Properties required in Tooting, Streatham, Brixton, Battersea, Clapham, Balham, Mitcham, Croydon, Norbury, Thornton Heath, Dulwich, Lewisham and Harrow.
For a free valuation Call 020 8764 6444

# "Hard talk" ஒரு பேப்பரும் ஒல்லி பீரிசும்



வ.கணேஸ்
(ஒருபேப்பருக்காக)

**ஒரு பேப்பர்** : பேராசிரியர் பீரிஸ் அவர்களே நீங்கள் **ஒரு பேப்பர்** இன் Hard talk Office க்கு வந்ததில் மகிழ்ச்சி.

*பீரிஸ் : எனக்கும் மகிழ்ச்சி நீங்கள் ஆரம்பிக்கலாம்.*

ஒரு : நீங்கள் இதுவரை எத்தனை கட்சிகளில் இருந்ததுண்டு.

*பீரிஸ் : இரண்டு கட்சிகளில்*

ஒரு : எத்தனை தடவைகள் இரண்டு கட்சிகளிலும்?

*பீரிஸ் : எக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அக்கட்சியில் இருப்பேன்.*

ஒரு : வெக்கமில்லையா இதைச்சொல்வதற்கு

*பீரிஸ் : நான் வெக்கப்பட்டிருந்தா நாடு துண்டுபட்டிருக்கும்.*

ஒரு : நீங்கள் தான் நாட்டைப் பாதுகாக்கிறீர்களா?

*பீரிஸ் : மூளைவளத்தால் முன்னிரிமை எனக்குத்தான்*

ஒரு : உங்களது படைகள் தமிழரை படுகொலை செய்தது ஞாயமா?

*பீரிஸ் : நாட்டைப் பாதுகாக்க வேண்டுமாயின் ஞாயப் படுத்தித்தான் ஆகவேண்டும்.*

ஒரு : ஆனால் இறந்தது அப்பாவிப்பொதுமக்கள்

*பீரிஸ் : ஆனாலும் புலிகளோடு நின்ற மக்கள்*

ஒரு : அதனால்தான் அவர்கள் கொல்லப்பட்டார்களா?

*பீரிஸ் : இராணுவத்தினரின் பக்கம் வந்திருந்தால் தப்பியிருப்பார்கள்*

ஒரு : யுத்தமற்ற பிரதேசத்தை அறிவித்தது நீங்கள் தானே?

*பீரிஸ் : அது பொதுமக்களுக்கு மட்டும்.*

ஒரு: இராணுவத்தினருக்கு பயந்துதானே பொதுமக்கள் புலிகளோடு போனார்கள்

*பீரிஸ் : பயப்பட்டிருக்கத் தேவையில்லை*

ஒரு : அகோரமாக குண்டுகள் வீசினால் பயப்படாமல் என்ன செய்வார்கள்.

*பீரிஸ் : குண்டுகள் மேலாக வீசப்பட்டன. மக்கள் கீழாக வந்திருக்கலாம்.*

ஒரு : நீங்கள் சண்டைகளுக்குள் எப்போதாவது அகப்பட்டதுண்டா?

*பீரிஸ் : மனைவியோடு மட்டும் தான்*

ஒரு : மகிந்தவைப்பற்றி நீங்கள் நினைப்பது என்ன?

*பீரிஸ் : உண்மையை சொல்லமுடியாது ஆனால் அவரைக்காப்பாற்ற பாடுபடுகிறோன்.*

ஒரு : எஞ்சிய தமிழரை என்ன செய்வதாக உத்தேசம்

*பீரிஸ் : கொஞ்சம் கொஞ்சமாக துடைத்தெறிவோம்.*

ஒரு : தமிழ் மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் பயிற்சி அளிப்பதுபற்றி?

*பீரிஸ் : எதிர்காலத்தில் அரசுக்கெதிராக அவர்கள் மாற வேண்டும் என்பதற்காக*

ஒரு : இது முட்டாள்தனமாக இல்லையா?

*பீரிஸ் : இல்லை எஞ்சிய தமிழரைத் துடைத்தெறிய இன்னொரு காரணம் தேவை*

ஒரு : இந்தியாவில் அயலுறவுக் கொள்கைகளை எப்படிப் பார்க்கிறீர்கள்.

*பீரிஸ் : சீனாவையும் பாகிஸ்தானையும் பற்றிப்பேசினால் பயப்பிடுகிறார்கள்.*

ஒரு : லக்ஸ்மன் கதிர்காமரைப் போட்டது யார்?

*பீரிஸ் : யார் போட்டிருந்தாலும் அவரது இழவால் பல நன்மைகள் நாட்டுக்கு*

ஒரு : அப்படி எதைத்தான் சாதித்தீர்கள்

*பீரிஸ் : உலக நாடுகள் ஒட்டுமொத்தமாக புலிகளை வெறுத்தனர். எம்மை ஆதரித்தனர்.*

ஒரு : லண்டன் தமிழர்கள் உங்களைத் துரத்தியடித்தது பற்றி?

*பீரிஸ் : நாகரீகமற்ற செயல்*

ஒரு : நீங்கள் மட்டும் நாகரீகமாக நடக்கின்றீர்களா?

*பீரிஸ் : உள்நாட்டில் இல்லாவிட்டாலும் வெளிநாடுகளில் நாகரீகம்தான்.*

ஒரு : ஐ. நா. நிபுணர் குழு அறிக்கை உங்களை எந்தளவிற்கு பாதித்திருக்கிறது.

*பீரிஸ் : அது ஐ.நா. அறிக்கை கிடையாது. தருஸ்மன் அறிக்கை*

ஒரு : ஏதோ ஒன்று ஆனால் இதன் பின்விளைவு எப்படியிருக்கப்போகிறது,

*பீரிஸ் : இந்தியாவை ஏமாற்றியே இதிலும் தப்புவோம்.*

ஒரு : கோட்டாவின் இராணுவ அதிகாரம் எந்தளவிற்கு இருக்கிறது.

*பீரிஸ் : அதி உச்சம்.*

ஒரு : நீங்கள் ஆலோசனை கூறுவதில்லையா?

*பீரிஸ் : கெடுகுடி சொற்கேளாது*

ஒரு : கருணாநிதியின் தோல்வியால் உங்களுக்கு ஏதாவது தாக்கம் உண்டா?

*பீரிஸ் : அவருடைய தேவைகளை நாம் ஏற்கனவே பெற்றுவிட்டோம்*

ஒரு : ஜெயலலிதாவின் அதிரடி தீர்மானங்களால் ஆகப்போவது என்ன?

*பீரிஸ் : மாநில அரசால் ஒரு மண்ணும் செய்ய முடியாது.*

ஒரு : கோட்டாவும் பசிலும் கோடிக்கணக்கில் சுருட்டுகிறார்களாமே?

*பீரிஸ் : ஆசியாவில் அதுவொன்றும் பெரிதல்ல*

ஒரு : அமைச்சர்களின் ஊடகப்பேச்சாளர் கெகலிய பேசுவதெல்லாம் உண்மையா?

*பீரிஸ் : உண்மை போல் பேசக்கூடியவன்.*

ஒரு : ஜெயலலிதாவிற்கான வாழ்த்துச்செய்தியில் என்ன எழுதியிருந்தீர்கள்?

*பீரிஸ் : நான் எழுதியது என் கையெழுத்து மட்டும்தான்.*

ஒரு :அப்போ அதை எழுதியது யார்?

*பீரிஸ் : சோனியா*

ஒரு : எஸ்.எம்.கிருஸ்ணாவோடு நீங்கள் சேர்ந்துவிட்ட அறிக்கை

*பீரிஸ் : அறிக்கை விட்டதோடு அதுசரி*

ஒரு : அப்போ அவை எதையும் நீங்கள் நடைமுறைப்படுத்தப் போவதில்லையா?

*பீரிஸ் : இந்தியாவோடு செய்து கொண்ட ஒப்பந்தம் எதையும் நாங்கள் நடைமுறைப்படுத்தியதேயில்லை.*

ஒரு : அப்போ யாரை ஏமாற்ற அந்த அறிக்கை

*பீரிஸ் : தமிழ்நாட்டின் ஈழ ஆதரவைத் தணிப்பதற்காக*

ஒரு : பசிலும் கோட்டாவும் தமிழர் நிலங்களை அபகரிக்கிறார்களே

*பீரிஸ் : அப்படியானவர்களுக்கு வேறு காணிகள் கொடுப்பார்கள்*

ஒரு : தமிழர்களுடன் ஆட்சியைப் பகிர ஏன் தயக்கம்

*பீரிஸ் : இது ஒரு சிங்கள நாடு*

ஒரு : விஜயனின் வருகைக்கு முன்னரே தமிழர்கள் அங்கே வாழ்ந்தார்களே

*பீரிஸ் : மகா வம்சத்தில் மாறியெல்லே இருக்கிறது*

ஒரு : புத்தர் தமிழர்களைத்தரையில் வைத்து தண்ணீரில் தள்ளிவிட்டதாக உங்கள் சரித்திரம் சொல்வது உண்மையா?

*பீரிஸ் : பிக்குகள் பொய் எழுதியிருக்க மாட்டார்கள்*

ஒரு : அப்போ முடிவாக தமிழர்களுக்கு முடிவே இல்லையா?

*பீரிஸ் : திராவிடர்களுக்கு ஏன் ஆட்சியும் அதிகாரமும்*

ஒரு : போர் முடிந்து இரண்டு வருடங்கள் கடந்தும் யாழில் கடந்த ஐந்து மாதத்திற்குள் எட்டு கொலைகள் எப்படி நடந்தது

*பீரிஸ் : இது டக்ளசிடன் கேட்கவேண்டிய கேள்வி*

ஒரு : இளம் பெண்கள் பாழடைந்த கிணற்றில் மிதப்பது பற்றி

*பீரிஸ் : இதுவும் அவர்களிடமும் பாதுகாப்பு பிரிவினரிடமும் கேட்கவேண்டியது*

ஒரு : K.P. ஐ என்ன செய்வதாக உத்தேசம்

*பீரிஸ்:வேள்விக்காக காத்திருக்கிறார்.*

ஒரு : வட கிழக்கு தமிழர்களில் உங்களிற்கு பிடித்த தலைவர்

*பீரிஸ் : வேலுப்பிள்ளை பிரபாகரன்*

ஒரு : காரணம்

*பீரிஸ் : அவர் மண்மீட்க போராடியதால் தான். ஆயிரக்கணக்கான தமிழர்களை அக்கரைப்படுத்தவும் அழிக்கவும் முடிந்தது*

ஒரு : உங்கள் நாட்டில் ஊடகத்துறையினரைக் கொல்வது யார்?

*பீரிஸ் : இதைச்சொன்னால் எனக்கும் சூடு விடும்*

ஒரு : உங்கள் நிதித்துறை தமிழர்களுக்கு ஞாயமாக நடக்கிறதா?

*பீரிஸ் : அவர்களுக்கு சிங்களம் மட்டும் தான் தெரியும்*

ஒரு : பீரிஸ் அவர்களே. இறுதியாக தமிழர் கூட்டமைப்புடன் உங்களின் தீர்வும் பேச்சும் எவ்வளவு காலம் மட்டும் தொடரும்

*பீரிஸ் : அவர்கள் சலிக்கும் மட்டும்*

நன்றி பீரிஸ் நன்றி..

SALE
Birmingham இல் Petrol Station & Convenience store விற்பனைக்குள்ளது.
மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்
Tel : 07958049729

Serendip Children's Home
GIVING IN MOTION
BBQ - A GREAT SUCCESS!

- Serendip is a charity dedicated to helping the orphaned children and widows in northern Sri Lanka. Apart from having fun the BBQ helps raise money for vital projects.One such is our Care in Community programme which helps provide finance to individual orphans to help with their education.Serendip also has some exciting new projects to launch so all the monies we raise will go to a good cayse. We have so far raised or been promised nearly £1,500 from the event but you can help to increase this further by making a one-off donation! Please go to this site http://www.justgiving.com/serendipchildrenshome and give the charity a donation.
- Our next Newsletter will report on some of the new projects, for example, Putiya Paathai (New Route) for which we will be providing widows with start-up finance for small businesses. Also a School Scholarship scheme which will provide financial assistance to orphaned but talented students.
- Thanks to all who attended Serendip's annual BBQ and helped make it a great success. Special thanks go to Trisha, Yvonne, Phil, Graham, Rav and Ahalya plus many others for making it happen.



Serendip Children's Home
34, Brightling Road
Brockley London SE4 1SQ
Phone: 07799 756 158
Phone: 020 8314 0527

அரங்கேற்ற மலர்கள்
விழா மலர்கள்
அழைப்பிதழ்கள்
நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள்
தமிழ் தட்டச்சு மற்றும் அனைத்து அச்சு வேலைகளுக்கும் அழையுங்கள்....



Call : 020 7043 4319

RAJ SCIENCE TUITION
LIMITED SEATS ONLY AVAILABLE
ENROLL NOW
Contact :
07903501336
07794424147
Science subjects ONLY from Grade 8 to GCSE
WE OFFER
- Exam Preparation
- Supplementary Lessons
- Model Question Paper



Tutor Profile : Master in Physiotherapy (MPT) with 12 years' experience and currently working in King's Hospital.
3 YEARS TUTORING EXPERIENCE IN SCIENCE SUBJECTS.

Meera Arnold & Co
for all your accounting needs...
pay roll
Accountancy
Auditing
book keeping
company formation
45 Chandos Ave, N14 7ES, Tel: 020 8882 2363

# ராகுல்காந்தி : இந்தியாவின் தலைவனா? தலைவலியா? தலைவிதியா?



**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

ராகுல் காந்தியின் அம்மா சோனியா காந்தி தற்போதைய இந்தியப் பிரதம மந்திரியைப் பெருவிரலின் கீழ் வைத்திருப்பவர். அப்பா இந்தியாவின் முன்னாள் பிரதம மந்திரி. அப்பம்மா இந்தியாவின் முன்னாள் பிரதம மந்திரி. பாட்டன் இந்தியாவின் முன்னாள் பிரதம மந்திரி. இதனால் உலகெங்கும் உள்ள பத்திரிகைகள் ராகுல் காந்தியை 'காத்திருக்கும் பிரதம மந்திரி' (Prime minister-in-waiting) என்று சொல்கின்றனர். தற்போதைய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் விரைவில் ராகுல் காந்தி பிரதமராவார் என்று சூசகமாக அறிவித்துள்ளார்.

**ராகுல் ஆன Raul became Rahul**

ராஜீவ் காந்தி தனது பெயரை றொபேர்ட்டோ என்று மாற்றி கத்தோலிக்கரான சனியோ மரினோவைத் திருமணம் செய்து பியங்கா என்னும் மகளையும் ராஉல் என்னும் மகனையும் பெற்றார். ராகுல் காந்தி 19-06-1970இல் பிறந்தார். அவர் அரசியலுக்கு வந்த போது அவர்கள் பெயர்கள் பிரியாங்கா என்றும் ராகுல் என்றும் இந்திய மயப்படுத்தப்பட்டது.

**பெரிய குடும்பத்துத் தங்க மகன்**

ஜவகர்லால் நேரு தந்தை பெயர் தெரியாத பிள்ளைகளை உருவாக்குவதில் வல்லவர் என்று விமர்சிக்கப்பட்டவர். இந்திரா காந்தி தந்தையின் அந்தரங்கச் செயலாளருடன் அந்தரங்கமாகப் பழகியவர். தாயின் 'நெருங்கிய நண்பனை' திருமணம் செய்தவர். ரவீந்திர நாத் தாகூரால் பல்கலைகழக்த்தில் இருந்து நீக்கப்பட்டவர். பிரபல சட்டவாளரும் இந்தியப் பாராளுமன்ற உறுப்பினருமான ராம் ஜெத்மாலினி காந்தி குடும்பத்திற்கு சுவிஸ் வங்கியில் பணம் உண்டு என்று தான் நம்புவதாக 22-02-2011இலன்று தெரிவித்தார். 1991 நவம்பரில் சுவிசில் இருந்து வெளிவரும் இலஸ்ரே என்னும் சஞ்சிகை ராஜிவ் காந்தி சுவிஸ் வங்கியில் இரண்டரை பில்லியன் சுவிஸ் பிராங்குகளை வைப்பிலிட்டதாகக் குற்றம் சாட்டியது. இதை காந்தி குடும்பம் இதுவரை மறுக்கவில்லை.

அந்தப் பணம் இப்போது இந்திய நாணயப் பெறுமதியில் நாற்பத்தி இரண்டாயிரத்து முன்னூற்று நாற்பத்தைந்து கோடிகளாக வளர்ந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இலக்கத்தில் போட்டால் 423,450,000,000 ரூபாக்கள். ஸ்ஸ்ஸபா...இப்பவே கண்ணைக் கட்டுதே !!!! சுப்பிரமணிய சுவாமி இந்தியப் பிரதமருக்கு 29-04-2011இலன்று எழுதிய கடிதத்தில் சோனியா காந்தியின் சகோதரிகள் இந்தியா பிரான்சிடம் இருந்து வாங்க முடிவு செய்திருக்கும் போர் விமானங்கள் சம்பந்தப்பட்ட நடவடிக்கையில் பிரான்சிடம் இருந்து பெருந்தொகைப்பணம் இலஞ்சமாக வாங்கியமைக்கான நம்பகரமான ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாகச் சொல்லியுள்ளார். இத்தகைய உன்னத் குடும்பத்தில் உதித்த தங்க மகன் ராகுல் காந்தி.

**கல்விமான் ராகுல்**

இந்தியாவின் பிரபல கல்லூரிக்ளில் ஒன்றான சென்ற் ஸ்ரீஃபன் கல்ல்லூரியில் நுழைவுத் தேர்வு கடினமானது. அங்கு ராகுல் காந்திக்கு விளையாட்டுத்துறையில் வல்லவர் என்ற அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது. அதுவும் கைத்துப்பாக்கி சுடும் விளையாட்டு. அவர் அந்த விளையாட்டில் வல்லவராக இருந்தாரா என்பதும் கேள்விக்குறி. ராகுலின் அப்பா ராஜீவ் போபஸ் பீரங்கியில் நிறையச் 'சுட்டவர்' என்பது எல்லோரும் அறிந்தது. அங்கு அவரால் ஒரு வருடத்திற்கு மேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. பின்னர் அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள ரொலின்ஸ் கல்லூரியில் ராஉல் வின்சி என்னும் இத்தாலியப் பெயரில் ராகுல் காந்தி கல்வி பயின்றாராம். ராகுலுடன் நெருங்கிப் பழகியவர்கள் அவர் ஒரு மந்தமான சிந்தனையாளர் என்கின்றனர்.

**வெரோனிக்காவின் காதலன்**

2004-ம் ஆண்டு ஏப்ரல் 28-ம் திகதி ராகுல் காந்தி தனக்கு வெரோலிக்கா என்ற ஸ்பானியப் பெண் காதலி இருக்கின்றார் என்றார். இப்போது அவர்கள் பிரிந்துவிட்டார்கள். பின்னர் ராகுலுக்குத் திருமணம் செய்ய முயற்ச்சிகள் நடந்தன. இதுவரை திருமணம் நடக்கவில்லை.

**அரசியலில் இருந்தும் அனுபவம் இல்லாமல் இருக்கிறார்.**

ராகுல் காந்தி அரசியலில் 2004-ம் ஆண்டில் இருந்து ஈடுபட்டுவருகிறார். இருந்தும் அவர் இதுவரை இந்தியாவின் தலையாய பிரச்சனைகள் ஒன்றைக்கூடக் கையாண்டதில்லை. அவரை அப்படிக் கையாளவிடுமிடத்து அவரது பலவீனங்கள் வெளிப்பட்டுவிடும் என்று அவரைச் சார்ந்தவர்கள் கருதுகிறார்கள். ஒரு பெரிய பேட்டி கூட அவர் இதுவரை கொடுத்ததில்லை. அவருக்கு மந்திரிப் பதவி கூட வழங்கப்படவில்லை. அவருக்கு தலைமைத்துவப் பண்புகள் எதுவும் இல்லை என்பதை அவரைச் சார்ந்தவர்கள் அறிவர். டிசம்பர் 2010இல் தமிழ் நாட்டுக்கு வந்த ராகுல் காந்தி இலங்கைத் தமிழர் பிரச்சனையில் தானே நேரில் தலையிட்டு தீர்வு காண முடிவு செய்துள்ளேன் என்றார். ஆனால் அவரிடம் இதுவரை அந்தப் பிரச்சனையை கையாளும்படி கையளிக்கப்படவில்லை. ஊழலற்ற பொருளாதாரம், பாக்கிஸ்த்தான், காஷ்மீர், சீனப் பெரும் வளர்ச்சியின் சவால் போன்ற பெரும் பிரச்சனைகளைக் கையாளக் கூடிய திறமையை எப்படி ராகுலிடம் வளர்ப்பது என்பது பெரும் பிரச்சனையாக இருக்கிறது. இதனால் இவரை ஒரு ஏழை பங்காளனாகச் சித்தரிக்கும் முயற்சிகள் பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன.

பட்டி தொட்டிகளுக்கெல்லாம் இவரை அழைத்துச் சென்று குடிசைவாசிகளுடன் பழக வைப்பது தொடர்ந்து நடந்து வருகிறது. பாராளுமன்ற உறுப்பினரான ராகுல் ஒரு தடைவ கூட அங்கு மற்றவர்களை தனது வாதத்தால் கவரவில்லை.

**பிஹார் தேர்தலில் காங்கிரசை மண் கவ்வ வைத்த ராகுல்**

பிஹார் தேர்தலில் காங்கிரசுக் கட்சியை ராகுல் கையாண்ட திறமையால் காங்கிரசுக் கட்சி 234 இடங்களில் 4 இடங்களில் வெற்றி பெற்றது. சில எதிர்க்கட்சியினர் ராகுலுக்குப் பாராட்டும் தெரிவித்தனர் தம்மை வெல்ல வைத்தமைக்கு. இதனால் தமிழ்நாடு சட்ட சபைத்தேர்தலில் ராகுலை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காங்கிரசுக் கட்சி பயன்படுத்தியது. இருந்தும் அவர் அமைத்த இளைஞர் அணி காங்கிரசுக் கட்சியின் குழுச் சண்டையை மேலும் மோசமாக்கி காங்கிரசின் தோல்விக்கு வழிவகுத்தது.

**ராகுல் காந்தியைப்பற்றி விமர்சகர்கள்**

ராகுல் காந்தியில் அரசியல் திறமை அவரை எங்கும் இட்டுச் செல்லாது என்கிறார் காந்தி குடும்பத்தைப்பற்றி புத்தகம் எழுதும் ஆர்த்தி ராமச்சந்திரன். அருண் சர்மா என்பவர் ராகுல் இதுவரை எந்த ஒரு பிரச்சனையிலும் தனது திறமையைக் காட்டவில்லை என்கிறார். காந்தி குடும்பத்தைப் பற்றி ஆய்வு செய்யும் ரஷீட் கிட்வாய் என்பவர் ராகுல் காந்தி தனது பெயருடன் ஏதாவது சாதனைகளை இணைக்க வேண்டும் என்கிறார். இன்னொருவர் ராகுல் தொட்டியில் வளர்ந்த மீன். அவருக்கு இந்தியா என்னும் கடல் பற்றிய அறிவு மிகவும் குறைவு என்கிறார். ராகுல் இதுவரை எதையும் கிழிக்கவில்லை என்பதுதான் உண்மை.

**தன் வாயால் கெடும் தவளை.**

2011-ம் ஆண்டு தேர்தலை எதிர் நோக்கும் உத்தரப் பிரதேசத்தில் நடந்த விவசாயிகளின் போராட்டத்தில் தானும் பங்கு கொண்டு தனக்குப் பெயர் சேர்க்க முயன்றார் ராகுல் காந்தி. அவரும் விவசாயிகளுடன் சேர்ந்து போராடினார். அவர் கைது செய்யப்பட்டு விடுதலையும் செய்யப்பட்டார். அவரை இந்தியாவே ஒரு முறை திரும்பிப் பார்த்தது. அத்துடன் வாயை மூடிக்கொண்டிருந்தால் ஒழுங்காக இருந்திருக்கும். பின்னர் டில்லிக்குப் போனவர் மாநிலத்தில் மக்கள் கொல்லப்பட்டுக் கொன்று எரிக்கப்பட்டுள்ளனர். மக்கள் எரிக்கப்பட்ட எழுபது அடி சாம்பல் மேட்டை நான் பார்த்தேன் என்றார். உடன் அங்கு விரைந்து சென்ற காவல் துறை ராகுல் குறிப்பிட்ட சாம்பல் மேட்டில் பழைய இரும்புப் பொருட்களும் குப்பைகளும் சாணிகளுமே கொழுத்தப்பட்டிருந்தன என்று சாம்பலைப் பரிசோதனை செய்தபின் அறிவித்தனர். இது ராகுலிற்கு ஒரு பலத்த அடியாக அமைந்தது. பின்னர் ராகுல் தன்னிடம் உள்ளூர் மக்கள் கூறியவற்றைத்தான் தான் கூறியதாகச் சொல்லித்தப்பித்துக் கொண்டார். பாக்கிஸ்தானை இரண்டாகப் பிரித்தமை தனது குடும்பத்தால் மட்டும்தான் முடியும் என்று சொல்லி பலரின் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளானார் ராகுல். இந்தியாவிற்கு இஸ்லாமியத் தீவிரவாதிகளிலும் பார்க்க இந்துத் தீவிரவாதிகளால் அதிக அச்சுறுத்தல் உள்ளது என்று கூறியும் மாட்டிக் கொண்டார் ராகுல். இப்படிப்பட்ட செய்கைகளால் ராகுலின் அரசியல் வாழ்வு பறக்க முன்னர் ஓடுபாதையில் விபத்தைச் சந்திக்கவிருக்கும் விமானம் போன்றது என்கின்றார்கள் சில அரசியில் விமர்சகர்கள்.

**முன்னாள் 'வருங்காலப் பிரதம மந்திரி'**

ராகுலின் தொடர் தவறுகளால் அவரை விமர்சிப்பவர்கள் இப்போது அவரை முன்னாள் வருங்காலப் பிரதம மந்திரி என்று அழைக்கத் தொடங்கி விட்டனர். காந்தி குடும்ப ஆலோசகர்கள் சிலர் இவன் வேலைக்கு ஆக மாட்டான் பேசாமல் பிரியங்காவை அரசியலுக்கு கொண்டு வாருங்கள் என்று ஆலோசனை சொல்கின்றனர்.

**இம்சைப் பிரதம மந்திரி**


இந்தியாவின் பிரதமர் என்பது ராகுல் காந்தியின் 'பிறப்புரிமை'. இந்திய அரசியலைப் பொறுத்தவரை அவரது டிஎன்ஏ இல் இந்தியப் பிரதமர் என்று பதியப்பட்டுள்ளது. அவர் பிறந்த போதோ இந்திய மக்களின் தலையில் அவர் அடுத்த இந்தியப் பிரதம மந்திரியாக எழுதப்பட்டு விட்டது. வேகமாக வளர்ந்து வரும் நாடு, வருங்கால வல்லரசு. வருங்கால பணக்கார நாடு என்றெல்லாம் கூறப்படும் இந்தியா இன்னொரு மொக்கை காந்தியால் ஆளப்பட வேண்டியது அதன் தலைவிதி. மொத்தத்தில் ராகுலை இம்சைப் பிரதமர் ஐந்தாம்-நேரு-மூன்றாம் காந்தி என்று சொல்லலாமா?



BAR - RESTAURANT - BANQUETING
FUSHIA
HAPPY HOUR!
5.00 PM TO 7.00 PM
40% DISCOUNT
ON ALL FOOD AND DRINKS
Orders must be taken before 7.00 pm
Monday to Sunday
3 Brighton Road, South Croydon, CR2 6EA
www.fushiauk.com
Tel: 020 8680 8833

Perma Shipping
பிரேமா விமான, கப்பல் பொதி சேவை
யாழ், வன்னி,
வவுனியா, மன்னார,
மட்டகளப்பு, திருமலை,
அம்பாறைக்கு விரைவான
மலிவான சேவை!
Air Freight World Wide
Collection, Packing & Crating
Urgent, Documents, Parcels Door Delivery
Customs Clearance By Sea/Air
Delivery to anywhere in Srilanka
தொடர்புகளுக்கு சிவம் (Sivam)
G14, Big Yellow,
1-3 Wyvern Industriial Estates,
Beverely Way, New Malden, Surrey KT3 4PH
Tel: 02086465222 Mob: 07939550397
Email: info@permainternational.co.uk
Web: www.permainternational.co.uk
உங்கள் பொருட்களை
இங்கு வந்து பொதி செய்து
கொள்ளலாம். உங்கள்
இல்லம் வந்து பெற்று
அனுப்பும் சேவையும் உண்டு

# Rajapaksa's PSC – No Market Outside Shrinking Sinhala Constituency



Nobody can fool everybody, all the time, unless everyone is Sinhala and the "nobody" is a Rajapaksa. That seems the philosophy of Mahinda Chinthana.

The Rajapaksa's thus try to fool the Sinhala South again, but not the neighbours next door who know how many times the "lie" was taken home to Delhi, for want of diplomatic subtleties and not the Tamil Diaspora either, who are determined to square off with this Rajapaksa regime on war crimes first, before political solutions are spoken of.

Yet this Rajapaksa regime continues with the same naïve approach in avoiding a pragmatic political solution to the Tamil problem, for no apparent advantage. They fail to understand that any political compromise on a broadly consented solution could only benefit them more than any other, with social stability, unity and international confidence that should help ward off advocacy for investigations on war crimes and crimes against humanity. Perhaps also with its own, a more robust apparatus than the deflated Lessons Learnt and Reconciliation Commission (LLRC).

Why then, the new Rajapaksa ploy in proposing a Parliamentary Select Committee (PSC)? Will it be acceptable by international groups and organisations who keep pushing the Rajapaksas towards a rough and a blank wall? Will India concede to another round of un-ending, open-ended talks that have no tangible proposal for a solution, either from the Rajapaksas or from any of its allies? At least a sketch on President Rajapaksa's much pampered "home grown" solution? For once, the Rajapaksa is being called a bluff by the two main Opposition parties, while the TNA hangs around the government with a timid "no," even after being hammered into insulting and humiliating suppression by an armed gang in uniform at Alaveddy, (*which is yet to be serious investigated*). It's probably a gut feeling that the Southern Opposition could be bullied with a Sinhala hand to sit in the PSC, that the Rajapaksas are counting on. But why does this regime want such wasteful carnivals that don't even provide entertainment?

## No game plan

There seems one, a very strong reason why the Rajapaksa's react with such negative initiatives. It's that they don't have any constructive economic proposal for development in a country that has left the rural society out of economic sustainability since independence from British rule in 1948. Whatever Cabraal says, the fact remains, all citizens except those in Colombo and Gampaha districts, are without much economic opportunities. Insulting it should be for even the Sinhala rural youth, when Secretary to the Treasury tells the 12th Sri Lanka Economic Summit in Colombo last Monday, that the government has identified modelling and fashion designing as a priority sector for economic growth on par with medicine, legal and accountancy sectors. It's a hugely discriminating and awfully corrupt economic growth these pundits are talking of.

In the Western province itself, disparity and discrimination is evident. The monthly "mean household income" in the Colombo and Gampaha districts are, Rs. 51,070 and 48,870 respectively during the year 2009-2010 according to a survey carried out by the Census and Statistics Department (C&SD). This in the Kalutara district, is only, Rs. 35,780 during that period. The difference in the monthly "mean household income" between Colombo and Kalutara is Rs. 15,000 while the monthly household incomes in the districts of Matara (Rs. 30,980), Kegalle (Rs. 29,342), Ampara (Rs. 24,721) and Moneragala (Rs. 22,161), show a significantly low income, compared to the Colombo centred accumulation of national wealth.

## Rural economy

The rural economy hardly grows. Based on agriculture, the rural economy only provides for low incomes, as compared to the Western Province and urban centres that have employment with monthly wages fixed. The same survey by the C&SD shows the "mean monthly income" in the agriculture sector is as low as Rs. 5,238 while in urban employment, it is more than double, at Rs. 12,434.

> Will India concede to another round of un-ending, open-ended talks that have no tangible proposal for a solution, either from the Rajapaksas or from any of its allies?

Figures are long skirts that show little. Many disadvantaged and discriminated social layers struggle for a living even within the privileged Colombo and Gampaha districts. In such a discriminated country, all mega projects this government talks of, are empty and heavy construction work, from the Hambantota sea port to the Commonwealth Games 2018 with Mathtala airport and international cricket stadiums also brought in as hollow projects. Yet there are heavy kickbacks for those involved. This regime has also proved it only looks into plundering capacities of any project, be it Sri Lanka Cricket or Mihin Air, a private company funded from public funds to run at a loss of Rs. 8,879 million during the past four years. The Rajapaksa's, despite Dr. Jayasundera's words and Nivad Cabraal's numbers, have no panacea for its economic bungling.

It is not easy to keep people pacified, with economic burdens growing. Bus fares have been raised and fuel prices are set to go up, everything from electricity to transport and therefore consumer life would keep to costly, dizzy heights. University teachers getting on the streets wanting fair and justifiable answers to their salary demands and the Katunayake FTZ workers kicking the "Employees' Pension Fund Bill" out of a parliament have shaken the regime's belief that it could do anything with its two thirds majority. With proof that their "holier than thou" image was torn and stripped by FTZ workers, the Rajapaksa's themselves have come to feel the carpet beneath their feet shifting, even without the political Opposition challenging them.

This PSC is thus an attempt the Rajapaksa's have resorted to, in holding back the tide and it defines the Sinhala orientation, the Rajapaksa's would not and can not shed. They have yet again decided to fall back on their trusted strength, the Sinhala voter base, that satisfy their war heroes. The argument is therefore developed on the line, this government should not give into any thread on power sharing that the army brutally and heroically defeated. For those Sinhala elements holding forth in this Rajapaksa regime which do not exclude the Rajapaksas themselves, even the 13th Amendment to the Constitution has been defeated politico – militarily, with the conclusion of the war.

## The APRC

The All Party Representative Committee (APRC) therefore is an uncomfortable consensus, after the war was declared over. The APRC consensus based on power sharing with a firm proposal for constitutional reform, was reached while the war was being brutalised and waged. Today, wit the war won and the LTTE crushed, the same JHU, the JVP and loners like MP Dinesh Gunawardena, seem to think they should not get exposed through their agreement on power sharing and constitutional reforms within the APRC report. These Sinhala elements have the advantage of having in their fold, stranded and retired "leftist" cops, who would not utter a word that would make Rajapaksa stare hard at them. Thus the PSC, instead of the solution that is in hand, as the APRC report.

The unanswered question yet is, how strong is this Sinhala constituency now, that would buy the PSC to keep the Rajapaksa regime strong? Workers who from the Sinhala rural society and did not in any way want to challenge the Sinhala Rajapaksa, tore down his tallest image in town, in broad daylight. University dons who kept to themselves during the war and some who even went to the extent in providing a socialist theory for the "war against separatism" now walk the streets asking for no compromise on their salary demands. The urban middle class that awaited a prosperous, peaceful Sri Lanka after "Tamil separatist insurgency" was defeated, is now restless after two years. They feel slapped right across their faces with mega corruption and with no trust on law and order enforcement.

The very attempt by sections of extreme Sinhala elements to prop up their eroding Sinhala Buddhist nationalist base with "Arsenic and God Naatha" have pushed the regime into further crisis. That Sinhala Buddhist "anti imperialism" would further alienate rural agriculture from this starving economy and would pitch the rural polity also against the regime. As one rural society activist said, "God Naatha cannot create for them a profitable market in a dwindling agricultural economy, with a good enough income for the people to live."

The crisis that's brewing is not one that Sinhala Buddhist voters can help Rajapaksa to avert. That Sinhala market is gradually and surely shrinking. Even if the Opposition can not get their act together, people would not always live on a hay diet of "Sinhala with Rajapaksa's" forever.

The Indians are also waiting on the winds to take off on their own agenda. After PM Singh accepted the SL Tamil people have legitimate grievances that have to be provided with acceptable solutions, Nirupama Rao was quoted as having said, the Delhi government can not ignore the sensitivities of Tamil Nadu government and its people. Someone from far across the seas and known to this Rajapaksa regime sent me an e-mail asking, whether "the noose is tightening." What could I say? "Not right now. But would, with time – Warm(?) regards."

***Courtesy: Sunday Leader***


கடன் சுமையால்
கஷ்டப்படுகிறீர்களா?
தனிநபரோ... வியாபாரமோ...
கடன்/Credit Card க்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
Bankruptcy யை தடுக்க அல்லது தவிர்க்க...
வியாபாரத்தை பலப்படுத்த...
TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...




BBK PARTNERSHIP
www.bbkca.com
Chartered Accountants and Business Recovery Professionals
- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Bookkeeping

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS
R3

BARNET 020 8216 2520
CROYDON 020 8150 9950
CITY OF LONDON 020 7 183 2696
CAMBS 01354 707 911

# Sport cannot turn a blind eye




**By Peter Roebuck**

IF THIS column has contributed anything to the game it has been to push it towards recognising a wider responsibility.

Sport is not a trivial distraction but part of our daily lives. It is not an escape but an embrace. Cricket, especially, has an opportunity to advance racial and religious tolerance. Have not these causes united all men and women deemed great?

Alas, it has mostly preferred to bury its head in the sand. Cricket mostly ignored the state-sponsored slaughter of the Tamils in Sri Lanka and Ndebele in Zimbabwe in the 1980s. Few officials or reporters condemned the West Indies' refusal to appoint a black captain, a policy that lasted deep into the 1950s.

> Barack Obama has espoused a policy of intervening in countries only when they start killing their own.

Not that any game ought to involve itself in local affairs. Legitimate politics provides a choice between legitimate parties. Sovereign nations are entitled to determine their own fates. Tyranny is another matter. Barack Obama has espoused a policy of intervening in countries only when they start killing their own. His dividing line is well drawn and sport ought to heed it. In the past 40 years, cricket has known two clear tyrannies, apartheid and Zimbabwe's ruling party ZANU-PF.

> The regime in Colombo carried out these atrocities, chased away reporters and blocked the UN's attempts to investigate.

Almost alone among English cricketers of the era, I was a member of anti-apartheid groups and wrote columns to that effect. Eventually the progressives prevailed and the world celebrated. Next came the violence let loose upon the Zimbabwean people by a ruthless and latterly illegitimate government.

Several victims of ZANU torture squads now live in my South African home; another escaped from a burning house as the militia tried to kill his family. The idea of shaking hands with the perpetrators makes my stomach churn. But cheated opposition parties decided that compromise was the only way forward, and they are the people on the ground. Accordingly, I support cricket contact with Zimbabwe.

> Sri Lanka is dangerous for journalists. Not so long ago a friend of mine, the editor of The Sunday Leader, was assassinated.

Now cricket has been forced to confront another serious issue. Following a devastating documentary, recently aired in Australia, Michael Atherton wrote that England ought to consider its position before undertaking its tour to Sri Lanka. Footage was shown of soldiers executing Tamils, prisoners of war and civilians alike. Women were raped, children abused, hospitals bombed, and no questions asked.

The former England captain described the sights as the most shocking seen on television since the Ethiopian food crisis.

The regime in Colombo carried out these atrocities, chased away reporters and blocked the UN's attempts to investigate. Sri Lanka is dangerous for journalists. Not so long ago a friend of mine, the editor of The Sunday Leader, was assassinated.

Atherton compares the Sri Lankan regime to that of Robert Mugabe and challenges his community to reflect upon its differing responses.

Inconsistency is widespread. My African contingent includes a Congolese student who saw soldiers burning alive defeated opponents. Yet his country mostly escapes scrutiny.

Now Sri Lanka is in the spotlight. The next step is to insist upon an independent inquiry. It is vital to establish the facts.

Clearly the Australian players are entitled to have as much information as possible at their disposal before making any decision to visit any country. They are scheduled to tour Sri Lanka next month. I will be going to Sri Lanka because that is the job of journalists.

Already one leading player has said the documentary made him feel sick and that he had been having nightmares since. Another observer has raised the issue of a boycott.

It's not a straightforward matter because the government appears to have been legitimately elected. After decades of civil war the country is ostensibly at peace.

Cricket can be uplifting. It has seen a black man captaining the West Indies, a Muslim playing for Australia, another leading India and a Tamil taking 800 Test wickets for his country. But it also needs to recognise reality and deal with it in a mature manner.

*(Courtesy: The Age, Australia)*

# காலாசார நாள்



**பரதன்**
*(ஒரு பேப்பருக்காக)*

**காலம்: 1985 ஆம் ஆண்டு ஆரம்ப காலம்?**

**ஸ்ரீலங்கா அரசுக்கெதிராக தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டம் மிகத் தீவிரமடைந்துகொண்டிருந்த காலம்.**

**இடம் : யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்?**

மாணவர்களுடன் பல்வேறு போராட்ட அமைப்புகளும், இயக்கங்களும் சந்திக்கும், விவாதிக்கும் அல்லது தர்க்கிக்கும் இடம் இது.

அப்பொழுது அங்கே கல்வி பயின்ற சில மாணவர்கள் இந்தப் போராட்டத்தை எவ்வாறு மக்கள் மத்தியில் கொண்டுசெல்வது? எவ்வாறு மக்களைப் போராட்டத்துடன் இணைப்பது? போராட்டத்தை எப்படி மக்கள் மயப்படுத்துவது? என்று சிந்தித்தார்கள்.

அதன் விளைவாக கலை இலக்கியங்களை பயன்படுத்தி மக்களிடம் போராட்டத்தை எடுத்துச் செல்ல முனைந்தார்கள்.

1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் 'கலாசார நாள்' என்ற ஒரு நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது. இந் நிகழ்ச்சியில் 'மண் சுமந்த மேனியர்' என்ற நாடகம், 'இந்த மண்ணும் எங்கள் நாட்களும்' என்ற கவிதா நிகழ்வு, 'பாவெல்' என்ற குறும்படம் மற்றும் சில கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

மண் சுமந்த மேனியர் என்ற நாடகம், சாதாரண தமிழ் மக்கள் அரச பயங்கரவாதத்தால் எவ்வாறு துன்பங்களை அனுபவிக்கின்றனர், இதற்கு அவர்கள் என்ன செய்யலாம் என்ற தொனிப்பொருளில் இடம் பெற்றது.

இந்த மண்ணும் எங்கள் நாட்களும் என்பது இசையுடன் கூடிய பாடல்களும் உரைகளும் நடிப்பும் கொண்டதாக தாயக விடுதலையின் தேவையை வலியுறுத்தும் விதத்தில் நிகழ்த்தப்பட்டது. இது 'கவிதா நிகழ்வு' என்னும் புதிய கலை வடிவமாக அறிமுகமாகியது.

பாவெல் என்பது ஒரு பல்கலைக் கழக மாணவன் அரச பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டு எவ்வாறு ஒரு போராளியாகின்றான் என்பது குறித்த ஒரு குறும்படம். இதுதான் தமிழீழத்தின் முதற் குறும்படம்.

பெருமளவு மக்கள் நிகழ்ச்சிகளை பார்வையிட்டனர் பலருக்கு இடம் கிடைக்காத காரணத்தால் அடுத்த இரண்டு நாட்களும் மீண்டும் மீண்டும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இதன் பின்னர் பலரது வேண்டுதலால் கிராமம் கிராமமாக நூறு தடவைக்குமேல் இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

நூறு பொதுக் கூட்டங்களை விட நூறு கருத்தரங்குகளை விட ஒரு கலைப்படைப்பு காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது என்பது எல்லோராலும் உணரப்பட்டது.

இவற்றின் தொடர்ச்சியாக, தங்களது கருத்தை அல்லது தாங்கள் சொல்ல விரும்பும் செய்தியை வெளிப்படுத்த பலரும் கலைப் படைப்புக்களை பயன்படுத்த ஆரம்பித்தார்கள்.

கலை வடிவங்களின் வல்லமையை அதன் தாக்கத்தை சரியாக உணர்ந்தமையால் தமிழீழ விடுதலைப் புலிகளால் நிதர்சனம், புலிகளின் குரல், கலை பண்பாட்டுக் கழகம் என்பனவெல்லாம் உருவாக்கப்பட்டன. அவை ஆயுதப் போராட்டத்துக்கு மேலும் வலுச்சேர்த்தன.

**காலம்: 2009 மே யின் பின்னர்?**

**இடம்: புலம்பெயர் தேசங்கள்?**

இன்று ஆயுதப் போராட்டம் மௌனித்துவிட்டது. எம்மிடம் இருப்பதெல்லாம் கலை என்னும் ஆயுதம் மட்டுமே.

அதனை நாம் உச்ச அளவில் பயன்படுத்தினால்தான் நாம் எமது இலக்கை நோக்கி பயணிக்கலாம். நாம் அவ்வாறு உச்ச அளவில் பயன்படுத்துகின்றோமா என்பது கேள்வி.

சில நல்ல கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. சில குறும் படங்கள் வந்துள்ளன. ஆயினும் இவற்றையெல்லாம் பரவலாக வெளிப்படுத்தவும், புதிதாக கலைப் படைப்புகளை உருவாக்கவும் நாங்கள் மிப் பெரிய அளவில் சிந்திக்க வேண்டும் என்பது எனது கருத்து.

நடன நிகழ்ச்சிகள் பல நடைபெறுகின்றன கண்ணன் குழலூதுவதை மீண்டும் மீண்டும் பார்க்கின்றோம். ஏன் இசைப் பிரியாவைப் பற்றிய ஒரு நடனத்தை எம்மால் நடத்த முடியவில்லை?

முள்ளிவாய்க்கால் அவலத்தை சனல் 4 மட்டும்தான் காட்ட முடியுமா? அதனை ஒரு நடனமாகவோ நாடகமாகவோ அல்லது ஒரு குறும் படமாகவோ எம்மால் காட்டமுடியும். ஆனால் நாம் முயற்சிப்பது குறைவு.

இவ்வாறான படைப்புகளை தனி ஒருவரால் செய்வது முடியாது கூட்டு முயற்சி தேவை.


புலம்பெயர் மக்களின் பலம் பெரியது. புலம்பெயர் இளையோரின் பலம் அதனை விடப் பெரியது. நாங்கள் எல்லோரும் நினைத்தால் பல தரமான கலைப் படைப்புக்களை உருவாக்கலாம்.

1985 இல் கலாசார நாள் அமைப்பாளர்களிடம் இருந்ததெல்லாம் நிகழ்ச்சியை வெற்றிகரமாகச் நடாத்தி முடிக்கவேண்டும் என்ற மன உறுதி மட்டுமே, அவர்களிடம் பணமும் இல்லை பலமும் இல்லை. 1985 இல் அவர்கள் இருந்ததைப்போல் பல்லாயிரம் மடங்கு பலத்துடனும் வளத்துடனும் நாங்கள் இப்பொழுது இருக்கின்றோம். எங்களிடம் அறிவும் ஆற்றலும் உள்ள இளையோர் பலர் உள்ளனர், தொழில்நுட்ப வல்லுனர்கள் பலர் உள்ளனர், கலை அனுபவமும் ஆற்றலுமுள்ளவர்கள் பலர் இருக்கின்றனர். இவ்வாறான நிகழ்ச்சிகளுக்கு அனுசரனை வழங்கக்கூடிய பலர் இருக்கின்றனர். எங்களால் முடியும்!


இவ்வாறான படைப்புகளை தமிழில் மட்டுமல்லாது, மற்றைய மொழிகளிலும், அல்லது மற்றய இன மக்கள் விளங்கிக்கொள்ளக் கூடியதாகத் தயாரிப்பதும், மற்றய இனத்தவர் மத்தியில் காட்சிப்படுத்துவதும் முக்கியம்.

நாங்கள் என்ன செய்யப் போகின்றோம்?


எங்களுக்கு கண்ணன் குழலூதுவது மட்டும் போதுமா? அல்லது இசைப்பிரியா பற்றிய நடனமும் தேவையா? நீங்களே முடிவுசெய்யுங்கள்.




By: ASWIN KRISHNAMOOTHY




By: VIGAASHAN ASOKAN




RAJIKA ROGESWARAN




THARSHANAH

## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | R | S | M | R | D | V | F | T | N |
| G | E | Q | Y | Z | A | I | U | W | S |
| T | O | H | I | B | M | A | M | M | A |
| A | P | P | A | N | A | J | E | U | O |
| N | P | T | H | A | M | P | I | P | C |
| K | A | X | T | U | I | K | A | R | S |
| A | T | O | P | C | X | T | U | K | L |
| I | T | M | R | D | V | F | T | N | G |
| U | I | F | U | N | B | R | A | I | N |
| W | S | O | H | I | Q | Y | Z | A | I |

**Hidden Words:**
**Subject: Relation the house in Tamil**
AMMA, APPA, THAMPI, TANKAI, PATTI, MAMI

RAJIKA ROGESWARAN



By: Varjitha



By: Rajika




By: Deborah



By: Rehashan



By: Vigaashan



By: Lakkia

My Dad

1) My Dad is Sinthel
2) He is 35 years old.
3) He is vegetarian.
4) He loves me and I love him too.
5) He is my real Hero
6) He is working very hard for our need.
7) He is playing with me like a friend.
8) His favourite job is photography.
9) Dad is take caring everyone in my family.
10) I am very proud of my Dad. thank to God

Pruthuveen
year 1

By : Pruthuveen

## Colouring




Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

***Last issue winner is*** **Deborah**

**Dear Kids...**

Do you like to draw? Send in a picture of your favourite animal and write a few words on why it's your favourite and send it (with your photo) to ORU PAPER and you could be the lucky winner of a new stationary kit!



## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| N | I | L | A | M | P | U | L | I | A |
| P | O | D | A | E | L | M | J | E | U |
| A | E | S | D | R | S | A | M | R | D |
| V | R | I | U | F | T | D | N | G | E |
| Q | U | N | Y | Z | P | U | N | A | I |
| A | M | G | I | U | W | S | O | H | I |
| B | A | A | N | J | E | U | O | P | C |
| X | I | M | T | U | K | A | R | S | O |
| P | C | X | T | U | K | L | M | R | D |
| V | F | T | N | G | U | F | U | N | B |

**Hidden Words:**
**Subject: Animals in Tamil**
Madu, Aadu, Punai, Singam, Erumai, Puli



அன்றைய நாட்களில் நீங்கள் தாயகத்தில் சுவைத்த அதே சுவையை
இங்கு உங்கள் நாவில் தரமாகவும் சுவையாகவும் மீட்டுகிறோம்...
Tolworth இல் தற்போது புதிதாக உதயமாகியுள்ளது!
New
Dosa
Express
1st Sri Lankan & South Indian
Take Away
OPENING SPECIAL OFFER
SPECIAL THALEY
(Only Friday)
£3.99
*While offer last
Sweets Available
Free Delivery
0208 337 6593
078 2812 4661, 074 0491 7111
No. 34, Tolworth Rise South Surbiton KT5 9NN
நாவில் சுவையூறும் விதம்
விதமான உணவு வகைகளை
பெற்றுக்கொள்ள நீங்கள் உடனே
நாடவேண்டிய இடம்
3 வடை
£ 1.00
மட்டுமே!
Buy any 3 Kottu
Get 1 Veg Kothu
Free
Out Door Catering
Birthday
Wedding
Other orders welcome
HALAL
Veg. & non Veg.
Minimum order £15 within 3 miles
Payment by: Cash / Credit / Debit Card




12 நாள் சுற்றுலா
மார்கழி திருவெம்பாவை தேர்த்திருவிழா
மற்றும் அறுபடை வீடு தரிசனம்
£999 மட்டுமே
நினைக்க முக்தி திருவண்ணாமலை, தரிசிக்க முக்தி சிதம்பரம், பிறக்க முக்தி திருவாரூர், இறக்க முக்தி காசி இடங்களுக்குச் சென்று வர எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. அவ்வாறானதொரு வாய்ப்பை இச்சுற்றுலா மூலம் ஒழுங்கு செய்துள்ளோம். அறுபடை வீடும் சிவ ஸ்தலங்களையும் முறையாக தரிசனம் செய்ய 14 நாட்கள் கொண்ட ஒரு ஆன்மீகச் சுற்றுலா.
• திருத்தணி • பழமுதிர்சோலை • தஞ்சாவூர் • திருப்பதி
• ராமேஸ்வரம் • சுவாமிமலை • மதுரை மீனாட்சி • திருச்செந்தூர் • பழநி
• பிள்ளையார்பட்டி • திருப்பரங்குன்றம் • கன்னியாகுமரி
June 22ம் திகதி புறப்பட்டு July 09ம் திகதி திரும்பும் சுற்றுலாவில் கலந்து கொள்ளுங்கள்.
ஆலப்புழை செல்பவர்களுக்கு அறுபடை வீடு தரிசனம் இலவசம்
ஆலப்புழை படகு சவாரி
கன்னியாகுமரி, திருச்செந்தூர், திருவண்ணாமலை, மதுரை, பழனி, திருப்பரங்குன்றம், திருச்சி, Chennai (Shopping)
£999 மட்டுமே
A/c வாகனம், A/c தங்குமிட வசதி, சுத்தமான சைவ உணவு மற்றும் குடிநீர், எல்லாவகையான வசதிகளும் செய்து தரப்படும்.
41 வருட அனுபவம்
மார்கழி மாத சுற்றுலாவுக்கு பதிவு செய்யப்படுகிறது. உங்கள் இருக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
முருகன் TRAVELS
அழையுங்கள் 020 7043 4319



இன்றே
வாங்குங்கள்
நிருவின் இயற்கைச்
சுவையுடைய டின் மீன்களை....
Niru BRAND
Niru BRAND
NATURALLY LOW IN FAT AND RICH IN
Omega 3
JACK MACKEREL
IN BRINE
இப்பொழுது
உங்கள் அபிமான
தமிழ்க் கடைகளில்
கிடைக்கின்றது
www.niru.co.uk

# எமக்கான இந்தியக் கம்யூனிஸ்டுகளின் ஆதரவு

பாகம் 96

முள்ளிவாய்க்கால் படுகொலைகள் தொடர்பான சனல்-4 காணொளி உலகம் முழுவதும் காட்டப்பட்டு விட்டது. இந்தியாவிலும் அது காட்டப்பட்டுள்ளது. அது தொடர்பான விவாதமொன்றில் கலந்துகொண்ட இலங்கையரசின் இராணுவப் பேச்சாளர், பங்குபற்றிய ஏனையோர் கேட்ட கேள்விகளுக்கு சொதப்பலான பதில்களைக் கூறிக் காரியத்தைக் கெடுத்துவிட்டதாக வேறு விமர்சிக்கப்படுகிறது. ஆகமொத்தத்தில் இலங்கையரசு நடத்தியிருக்கும் அராஜகங்களையிட்ட வாதங்களும் பிரதிவாதங்களும் தொடர்ந்து கொண்டிருக்கின்றதேயொழிய, அவ்வராஜகங்களை நடத்திய மனித வர்க்கத்திற்கெதிரான நாகரீகமற்ற காட்டுமிராண்டிகள் இதுவரை கைது செய்யப்படவுமில்லை விசாரிக்கப்படவுமில்லை.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தம்மால் முடிந்தவரை ஆர்ப்பாட்டங்களையும், மனிதவுரிமையமைப்பு களுடனான தொடர்பாடல்களையும் நடத்திக் கொண்டிருந்தாலும், நமது தாயகத்தில் நமக்கெதிராக நடத்தப்பட்ட குரூரத்தனமான கொடுஞ் செயல்களுக்கெதிராக யாரும் வாய்திறக்கும் நிலையிலில்லை. இராணுவ அடக்குமுறைக்குள் ஒடுங்கிக் கிடக்கும் எமது உறவுகள் 'ஹூம் என்றால் சித்திரவதை ஏனென்றால் படுகொலை' என்ற ஆபத்தான நிலையில் வாழ்ந்துகொண்டு எதைத்தான் செய்ய முடியும்?

நடந்தது நடந்தாகிவிட்டது. அநியாயக்காரர்கள் தண்டிக்கப்படலாம் தண்டிக்காமல் விடவும் படலாம். தண்டிக்கப்பட்டாலும் படாமல் விடப்பட்டாலும், 'அதனால் ஆவதென்ன? இழக்கப்பட்ட உயிர்களை மீளப் பெறமுடியுமா? அதனால், நடத்தப்பட்டுள்ள கொடுமைகளுக்கு உரிய தண்டனையைத் தீர்மானிக்கும் பொறுப்பை உலகிடம் விட்டுவிட்டு ஆகவேண்டியதைக் கவனிப்போம் என்ற மனப்பாங்கில், தமிழர் தரப்பினர் குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக அரசுடன் பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எதைப் பற்றி? அது தான் பெரிய புதிராக இருக்கிறது. யாருக்கும் இப்படி வருடக்கணக்காக என்ன விடயம் பற்றிப் பேசப்படுகின்றது என்பதில் போதிய தெளிவில்லை.

'அதிகாரப் பரவலாக்கத்திட்டத்தின் கீழ் வடகிழக்கு மாகாண சபைகளை ஒன்றிணைத்து 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துதல், விசேட பொலீஸ், காணியதிகாரங்களை வழங்குதல், கொஞ்சம் மிஞ்சிப் போனால் சமஷ்டி அமைப்பின் கீழான தேசிய சுயநிர்ணய உரிமை' என்ற விடயங்களைத் தவிர வருடக்கணக்காகப் பேசப்படும் விடயங்கள் வேறு என்னவாக இருக்க முடியும்?

அரசாங்கமும் அதில் அங்கம் வகிக்கும் பேரினவாதக் கட்சிகளும் மேற்குறித்த விடயங்கள் எதையும் தரத்தயாரில்லை என்கின்ற போதும், மீண்டும் மீண்டும் கூடிக் கூடி எதைப் பேசுகிறார்களென்றே தெரியாமலிருக்கிறது. போதாததற்கு இந்தியா வேறு வருடக்கணக்காக இலங்கையுடன் பேசிக்கொண்டேயிருக்கிறது. அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான சட்டமூலங்களிலுள்ள ஒவ்வொரு வசனத்தையும் பற்றிப் பேசி முடிவெடுக்க வேண்டியிருந்தாலும்கூட இத்தனை எண்ணிக்கையான பேச்சு வார்த்தைகள் தேவைப்பட்டிருக்காது. ஆனால் மூடுமந்திரம் போல எதைப்பற்றிப் பேசுகிறோம் என்பதையே வெளிப்படுத்தாமல் தொடர்ந்து பேசிக்கொண்டேயிருப்பது அரசாங்கம் மட்டுமல்லாது தமிழர் தரப்பினரும் சேர்ந்து காலத்தைக் கடத்துவதற்கான உத்தியாகவே தெரிகிறது.

'பிச்சையெடுத்ததாம் பெருமாள் அதைப்பறித்ததாம் அனுமார்' என்பதைப்போல, இலங்கையரசும் தமிழர் தரப்பும் எதையோ பேசி முடிவுக்கு வந்துவிடுவார்கள் என்ற நப்பாசையில் இருக்கும்போது இந்தியாவிலிருந்து சிவசங்கர் மேனன் வேறுவந்து காரியத்தைக் கெடுத்துவிட்டுச் சென்றிருக்கிறார். பதிதாகவோர் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை உருவாக்க இந்தியப் பிரதிநிதியின் சமீபத்தைய விஜயம் துணைபோயிருக்கிறது. இனி இன்னும் எத்தனை வருடங்கள் இந்தத் தெரிவுக்குழுவைச் சாட்டாக வைத்துக்கொண்டு கடத்தப்படப் போகின்றனவோ தெரியவில்லை.

இந்த அரசியல் பித்தலாட்டங்களுக்கு மத்தியில் உருப்படியானவோர் செய்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழருக்கு ஆதரவு கோரி டெல்லியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினரால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கான ஆதரவுக் கூட்டங்கள் தமிழகத்தைக் கடந்து ஆந்திர மற்றும் கேரள மாநிலங்களிலும் நடத்தப்பட்டிருப்பது பெருமகிழ்ச்சியளிக்கிறது. ஆர்ப்பாட்டத்தோடு நின்றுவிடாமல், உலகெங்கிலுமுள்ள கம்யூனிஸ்ட்டு இயக்கங்களுடனும் தொடர்பு கொண்டு எமது பிரச்சனை தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இன்று வரை எம்மை ஆதரிக்காத சீனா, ரஸ்யா போன்ற நாடுகளின் சினேகப் பார்வை எம்மீது படக்கூடிய விதத்தில் அந்நாடுகளின் தூதரகங்களூடாக வேண்டுதல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அலசுவாரம்**

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

இந்த நிலையில் ஈழத்தமிழர்களாகிய நாம் செய்யவேண்டியவை நிறைய இருக்கின்றன. உலகச் செல்வாக்குமிக்க கம்யூனிச இயக்கங்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பான சூழல் உருவாகும்போது தமிழர்களாகிய நாம் அதனை எமது தேசிய இன அங்கீகாரத்திற்கான படிக்கல்லாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும். எம்மை ஆதரிக்கும் இந்திய கம்யூனிஸ்டுகளையும் அவர்களது உலகத்தொடர்பையும் முழு அளவில் எமது ஈழ ஆதரவுக்குப் பயன்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுவதன்மூலம் சீனா ரஸ்யா போன்ற நாடுகளின் சினேகத்தையும் பெற்றுக் கொள்ள முடியும். எமது நாடுகடந்த தமிழீழ அரசு உட்பட பல்வேறு தமிழர் அமைப்புகளும் இதற்கான யதார்த்த பூர்வமான செயற்பாடுகளில் இறங்குவார்களானால் இன்று சீனாவாலும் ரஸ்யாவாலும் முட்டுக்கொடுக்கப்பட்ட நிலையில் அகம்பாவத்துடன் இருக்கும் சிங்கள வல்லாண்மை வாதத்தை விழுத்தி இலங்கையின் பல்தேசியத் தன்மையை நிலைநிறுத்த முடியும். இலங்கை சிங்களவருக்கேயென்ற பேரினவாதத்தை கம்யூனிச நாடுகள் ஏற்றுக் கொள்ளாத நிலைவரும்போது சிங்களம் தமிழர் தேசியத்தை எதிர்த்து முரண்டுபிடித்துக் கொண்டு நிற்கமுடியாது. எமது மக்களுக்கான அரசியல் சுதந்திரம் வழங்கப்பட்டேயாக வேண்டும்.

நாம் இதுவரை காலமும் ஆயுதப் போராட்டத்தின் மூலம் எமது தமிழ்த் தேசியத்தை நிறுவி விடலாமென்ற எண்ணத்துடன் போராடினோம். எமது தமிழீழநாட்டின் உள்ளேயே எதிரி நிலைகொண்டிருக்கையில் அதனைப் பொருட்படுத்தாது தமிழீழக் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டோம். முடிவில் எடுத்த முயற்சிகள் அனைத்தும் வீணாகிப் போயின. தமிழர் தேசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற நிலை உருவாகியது. ஆனாலும் எமது போராட்டத்தின் ஆத்ம வலு இன்னும் அழிந்து விடவில்லை. இந்தியாவிலும் உலகிலும் எமது தேசியவுணர்விற்கான ஆதரவு நாம் ஆயுதத்தை நம்பியிருந்த காலங்களைவிட தற்போது வலுப்பெற்று வருகிறது என்றே கூறவேண்டும். நாம் பலமான நிலையிலிருந்த போது எமக்குக் கிடைக்காத ஆதரவு பலமிழந்து வீழ்ந்து கிடக்கும் போதுதான் கிடைத்திருக்கிறது. அளவுக்கு மீறிய தன்னம்பிக்கையுடன் உலகின் ஆதரவைப் பற்றிய எவ்வித கவலையுமின்றி நடத்தப்பட்ட எமது போராட்டம் வீழ்ச்சியடைந்தது.

நமது விடுதலையை நாம்தான் போராடிப் பெறவேண்டும் வேறு யாரும் உதவ முன்வரமாட்டார்கள் என்பது சரியேயானாலும், எமது எதிரி தனக்குப் பக்கத்துணையாக உலகை

(தொடர்ச்சி 26ம் பக்கம்)




இந்நிதியானது எமது தாய்நாட்டில் மீள் குடியேறியுள்ள மக்களுக்கான சுயதொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கவும், கிளிநொச்சி இராமநாதபுரத்தில் அமைக்கப்பட்டு வரும் எமது உறவுக் குழந்தைகளுக்கான 'அன்பின் சகோதரிகள் இல்லம்' கட்டுமாணப் பணிக்காகவும் சேகரிக்கப்படுகிறது.

*உதவும் கரங்கள்...*

- 1989இல் நோர்வேயில் ஆரம்பிக்கப்பட்ட இவ் அமைப்பு கடந்த ஏழு வருடங்களாக இங்கிலாந்தில் இயங்கி வருகிறது.
- இவ் அமைப்பினால் அக்கரைப்பற்று விபுலானந்தர் இல்லத்தில் தாய் தந்தையரை இழந்த 120 சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள்
- தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் தலா 10 ஏக்கர் நிலம் இவ் அமைப்பினால் வழங்கப்படுகிறது. இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்புக்கள் அமைகின்றன.
- கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு கோழி வளர்ப்புக்காக ஒவ்வோர் குடும்பங்களுக் காகவும் தலா 25,000 ரூபா வழங்கப்படுகிறது.



இராமநாதபுரத்தில் உதவும் கரங்கள் ஆதரவில் உருவான 'கோழிப்பண்ணை

Further Details:
Mohan: 07828 103 365
Kumaran: 07960 761 606
Dr Mathy: 07969 333 445
Bala: 07985 391 617



விபுலானந்தர் இல்லத்தில் பராமரிக்கபடும் சிறுவர்கள்

விளம்பர அனுசரணை:
நல்லூர்க் குமரன் ரெக்ஸ்ரைல் & Spicy Land

# மகாகும்பாபிஷேகம்-ஈலிங் அம்மன் ஆலயம்



ஈலிங் அருள்மிகு ஸ்ரீகனகதுர்க்கை அம்மன தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிசேக நிகழ்வுகள் அண்மையில் ஆரம்பமாகின போது எடுக்கப்பட்ட படங் களையே மேலே காண்கிறீர்கள்.

# வருடாந்த மகோற்சவ நிகழ்வுகள்



உயர்வாசற் குன்று (highgate hill) அருள்மிகு முருகன் ஆலய வருடாந்த மகோற்சவ நிகழ்வுகள் அண்மையில் ஆரம்பமாகின. முதலாம் திருவிழாவான கொடியேற்றத் திருவிழாவின் போது எடுக்கப்பட்ட படங்களையே நீங்கள் மேலே காண்கிறீர்கள்.

*- படங்கள் : மனோரஞ்சன்*

# GTF இன் வரவேற்பு வைபவம்



லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட உலகத்தமிழர் பேரவையும், தமிழ் மக்களுக்கான விசேட (பிரித்தானிய) பாராளுமன்றக் குழுவும் இணைந்து யூலை 5ம் திகதி பிரித்தானிய பாராளுமன்ற வளாகத்தில் ஒரு வரவேற்பு வைபவ மொன்றை நடாத்தியது. ஆசிய. ஆபிரிக்க விவகாரங்களுக்கான வெளி விவகார அமைச்சர் அலிஸ்ரர் பட், வர்த்தகத்துறை துணை அமைச்சர் எட் டேவி, நிழல் வெளிவிவகார அமைச்சர் டக்ளஸ் அலெக்சாண்டர், முன்னாள் வெளி விவகார அமைச்சர் டேவிட் மிலிபான்ட், உட்பட பல பாராளுமன்ற உறுப்பி னர்களும், பிரித்தானியா மற்றும் அமெரிக்க வெளியுறவுத்துறைகளைச் சேர்ந் தவர்களும் இவ்வரவேற்பு வைபவத்தில் கலந்து கொண்டனர்.

அங்கு உரை நிகழ்த்திய உலகத்தமிழர் பேரவையின் தலைவர் அருட்திரு இமா னுவல் அடிகளார் தமிழ்மக்களை இன்றய நிலையிலிருந்து அவர்களைப் பாதுக்காக சர்வதேசமட்டதிலான சுயாதீன விசாரணை மேற்கொள்ளபடுவத ற்கு பிரித்தானிய பாரளுமன்றமும் ஏனைய உலக நாடுகளும் உதவிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

பிரபுக்கள் சபை அங்கத்தவர்கள், ம்னிதவுரிமை அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப்பலர் இவ்வரவேற்பு வைபவத்தில் கலந்து கொண்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.


## COMPUTER REPAIRS

**உங்கள் கொம்பியூட்டர்**

- Slow வாக வேலை செய்கிறதா?
- அடிக்கடி இறுகிப் போய் நிற்கிறதா?
- வைரஸ் ஏதும் பூந்திட்டுதா?
- Error மெசேஜ் வருகிறதா?
- Internet க்கு போனா அறுபத்தி எட்டு windows திறக்கிறதா?

**எல்லாம் சரி செய்யலாம்**

அழையுங்கள் NO FIX - NO FEE

**020 7043 4318**

## DATA RECOVERY

**உங்கள் கொம்பியூட்டர்**

- Hard disk இறுகிப் போய்விட்டதா?
- மிக முக்கியமான data மாட்டிக் கொண்டதா?
- பிள்ளைகளின் முக்கியமான படங்கள் அழிந்து போய் விட்டதா?

**பிரச்சனைக்கு முடிவு கட்ட**

அழையுங்கள் NO FIX - NO FEE

**020 7043 4318**

## IT SUPPORT

**FOR YOUR BUSINESS**

- PC / Server Maintenance
- Wireless / Wired Networking
- OS / Software (re)Installation
- Regular Data Backup
- Anti-Virus / Firewall Setup
- Block unwanted website visits, safe valuable staff time
- Broadband Supply

CALL US ON

**020 7043 4318**

FREE CONSULTATION

# வெள்ளிவிழா நிகழ்வுகள்











தென் லண்டன் தமிழர் நலன் நிறை அமைப்பு தனது வெள்ளிவிழாவை யூன் மாதம் 25ம் திகதி Archbishop Lanfranc school மண்டபத்தில் கொண்டாடியது.

வணக்கத்திற்குரிய குறைடன் Mayor Collr. Craham Bass, மேட்டன் பிரதி Mayor Collr. Chris Edge அவர்களோடு Collr. Edith Joan Macauley, Maxi Martin, Logie Lohendran, Krishna Suresh, Sasikala Suresh ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள். தலைவர் டாக்டர் ஆறுமுகராசாவின் வரவேற்புரையைத் தொடர்ந்து பல்வேறு கலைகலாச்சார நிகழ்வுகளுடன் இவ்விழா நிறைவுபெற்றது. இவ் நிறுவனம் கடந்த இருபத்தைந்து வருடங்களாக தமிழ் மக்களுக்கு இலவசமாக சேவையாற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**JUNE 17 SUNDAY**

மகோற்சவப் பெருவிழா

திருவருள்மிகு என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலய 7ம் வருட மகோற்சவ நிகழ்வுகள்.

இடம்: 61-65 Church Lane, Edmonton, London, N9 9PZ.

தொடர்புகளுக்கு: 020 8884 3333

**JULY 17 SUNDAY**

பழைய மாணவர் சங்க ஆண்டு விழா

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஆண்டு விழாவும், பிரித்தானிய மாகாராணியால் கௌரவிக்கப்பட்ட திரு செல்லையா யோகமூர்த்தி அவர்களைச் சிறப்பிக்கும் நிகழ்வும்.

நேரம்: மாலை 05:00 முதல் 10:00 மணி வரை

இடம்: Wallington hall 3, Stafford Road, Wallington, SM 6 9 AQ.

தொடர்புகளுக்கு: 07802746779, 07423533452

**JULY 17 SUNDAY**

தமிழர் மெய்வல்லுனர் போட்டிகள்

மூன்றாவது வருடமாக நடைபெறும் மாபெரும் தமிழர் மெய்வல்லுனர் போட்டி

நேரம்: காலை 09:00 மணி முதல்

இடம்: LEA VALLEY ATHLETICS CENTER 61 Meridian Way, London N9 0AR

**JULY 23 SATURDAY**

உதவும் கரங்கள் இன்னிசை மாலை-2011

தாயகத்தில் மீளக்குடியமர்ந்திருக்கும் எம் மக்களுக்கான சுய தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கவும் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வரும் 'அன்பின் சகோதரிகள் இல்லம்' கட்டுமானப் பணிகளுக்காகவும் நிதி சேகரிக்க இடம்பெறும் இன்னிசை விழா.

இடம்: Whitgift School Hall, Haling Park,(Nottingham Road) South Croydon, CR2 6YT.

நேரம்: மாலை 05:30 மணி முதல் 11.00 மணி வரை

# கடற்கரையில் ஒரு நாள்...

நண்பர் ஒருவரிடம் தற்போது இளவேனில் காலம் என்பதால் ஒரு சிறு சுற்றுலாவுக்கு ஒழுங்கு செய்யலாமே என்றேன். பழமைபடைக்குள் தலைகீழாக நின்று சுற்றுலா பற்றித் தேடியலுத்து மாலையே தொலைபேசினார். அவரிடம் தொடர்ந்து பேசினால் நான் விரும்பாத இடத்துக்கு அழைத்துப்போவாரோ என்ற நிலை நெருங்கிக் கொண்டிருந்ததால், நாம் மீன் பிடிக்கப் போனால் என்ன என்றேன்.

Google க்குள் தலையைவிட்டு தேடியபோது அவரிடம் ஒஸ்லோவை சுற்றி மீன் பிடிப்பதற்கான 9 இடங்கள் இருந்தன. அதில் இடத்தை தேர்வு செய்வதை என்னிடம் தந்தார். ஆண்கள் தனியே போவது என்றே நாம் பேசியிருந்தோம். அவரின் நண்பர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட, விடுக்கப்பட்ட அழைப்பு உடனேயே பாதகமான பதிலுடன் திரும்பிவந்தது. குடும்பசகிதமாக வருவதானால் தாம் வருவதாக அவர்களுக்கு கட்டளையிடப்பட்ட விதத்தில் எழுதப்பட்டிருந்தது அதில். நாம் மகிழ்ச்சியாக இருக்கத்தானே அழைத்தோம். ஏன் இப்படி புரியாமல் பேசுகிறார்கள் என்று எமக்குப் புரியவில்லை. இருப்பினும் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டோம்.

எனக்கு சனக்கூட்டமான இடத்தில் மீன்பிடிப்பது சம்மதமில்லை. எனவே ஒஸ்லோவில் இருந்து ஏறத்தாள 60- 70 கி.மீ. அப்பாலிருந்த இரு அமைதியான இடத்தை தேர்ந்தெடுத்தேன். மீண்டும் கூகிலாண்டவரின் உதவியுடன் நாம் செல்லவிருக்கும் இடத்தினை படங்களினூடாகவும் பார்த்து வழியினையும் குறித்துக்கொண்டோம்.

காலை 8 மணிக்கு குறிப்பிட்ட ஒரு இடத்தில் கூடி பின்பு ஊர்வலமாய் செல்லலாம் என்பதால் குறிப்பிட்ட இடத்தில் கூடினோம். 4 குடும்பங்கள். அனைவரும் நாமிருவர் நமக்கிருவர் விதிகளை மீறியவர்களாய் இருந்தார்கள். நாம் கூடிய இடத்திலேயே அவர்களின் கும்மாளம் ஆரம்பித்தது. எல்லோரும் நேரத்தை புனிதமாக மதிப்பவர்களாகையால் நாம் ஏறத்தாள 2 மணிநேர தாமதத்துடன் ஊர்வலத்தை ஆரம்பித்து குறிப்பிட்ட இடத்தை அடைந்த போது நேரம் 11ஐ நெருங்கியிருந்தது.

வாகனங்களை விட்டு இறங்கியதும் குழந்தைகள் கடற்கரைக்கு ஓட, தாய்மார் அப்பா, பிள்ளைகள் தண்ணிக்குள்ள போகுதுகள்? என்ற போது ஒரு கணவர் என்னை தண்ணியடிக்கவும் விடமாட்டாய் பிள்ளைகளை தண்ணிக்குள் போகவும் விடமாட்டாய் என்றபோது பதிலாய் கிடைத்த பார்வையின் உக்கிரம் தாங்காமல் அடங்கிக் கொண்டார்.

தூண்டில்கள் ஆயத்தம் செய்யப்பட்டன. எல்லாமாக ஆறு தூண்டில்கள் மீன் வேட்டையில் இறங்கியிருக்க, நண்பர் முதல் தரம் தூண்டிலை வீச அது அவருக்கு அருகில் இருந்த மனைவின் கூந்தலில் சிக்கியது. "தள்ளி நில்லடி" என்றார் நண்பர்.

"எறியுற தூண்டில கடலுக்குள்ள எறியுங்க, எனக்கேன் தூண்டில் போடுறீங்க" என்றார் தர்மபத்தினி. "உனக்கு தூண்டில் போட்டத போல ஒருமோட்டுவேலை இனி ஒருஜென்மத்திலயும் செய்யமாட்டேன்" என்றுநண்பர் கூறியதுநல்லவேளை அவர் மனைவிக்கு கேட்கவில்லை.

அடுத்த முறை தூண்டிலை நண்பர் எறிய அது அவருக்கு முன்னால் 4 அடி தள்ளி விழுந்தது. நண்பரின் முகத்தில் பெருமிதம் பொங்க மனைவியைப் பார்த்து "எப்படி" என்று கண்ணால் கேட்க அவர் "உதுக்கு தூண்டில் தேவையே, கையாலயே தூக்கிப் போடலாமே" என்றார். கணவனின் சுய நம்பிக்கை கீழே விழுந்து முட்டை போலாகியது.

சில முயற்சிகளின் பின் நண்பர் தூரத்திற்கு எறியப் பழகிக் கொண்டார். மனைவியோ ஒவ்வொரு முறையும் நண்பர் தூண்டிலை எறியும் போதும் "எனப்பா! இன்னும் மீன் பிடிபடேல்லயோ" என்று ஏகத்துக்கும் நண்பரை உசுப்பிக் கொண்டிருக்க, நண்பர் ரொம்பவும் சூடாகி "இந்தா நீ பிடி" என்று சொல்லி தூண்டிலை மனைவியிடம் கொடுத்துவிட்டு நகர, அங்கு நின்றால் என்னை கடலுக்குள் குதிக்க வைத்து விடுவார் நண்பரின் மனைவி என்பதால் நானும் நண்பருடன் சேர்ந்து வேறு இடத்திற்கு மாறினோம்.

நானும் நண்பரும் நான்கு அடி வைக்க முதல் நண்பரின் மனைவி "இங்காருங்கோ, இங்காருங்கோ! மீன், மீன்" என்று கத்தியதால் திரும்பிப் பார்த்தேன். தூண்டில் ராமனின் நாண் ஏற்றிய வில்லுபோல வளைந்திருப்பது தெரிந்தது. நண்பரின் மனைவி பெரும் பாடு பட்டு தூண்டிலை இழுத்துக் கொண்டிருக்க எனக்கும் சந்தேகம் வர அவரிடம் இருந்து தூண்டிலை வாங்கிக் கொண்டேன்.

நண்பரின் மனைவி "இண்டைக்கு பின்னேரம் இடியப்பமும் மீன் தலை சொதியும் வைக்கலாம்" என்றபடியே அருகில் இருந்த கத்தியை எடுத்து மீனை வெட்ட ஆயத்தமானார். நானோ தூண்டிலுடன் போராடி அதை கரைக்கு இழுத்த போது அது பெரும் பாசி ஒன்றை இழுத்து வந்திருந்தது. "என்ட மீனை நீங்கள் விட்டு விட்டீர்கள்? என்று அவர் சொல்ல... நண்பர் "எனப்பா இரவைக்கு இடியப்பமும் பாசிச் சொதியும் வைக்கலாமே" என்றார். மனைவி ஆச்சரியமாய் அடங்கிப் போனார்.

தூண்டில் எறிவதிலேயே நேரம் போய்க் கொண்டிருந்தது. ஒரு மீனும் அகப்படதாயில்லை. இதற்கிடையில் ஒரு உள்ளூர் நோர்வேஜியன் வந்தார். வந்து சில நிமிடங்களில் ஒரு மீன் பிடித்தார்.

நான் மூன்று மணிநேரமாக நிற்கிறோம் அவன் இப்போது தான் வந்தான் அவனுக்கு மீன் பிடிபடுவது நியாயமில்லாதது என்று நண்பர் தனது மனநிலையை காட்டிக் கொண்டிருந்தார்.

அப்போது எமக்கருகால் ஒரு நோர்வேஜிய மனிதரும் அவருடன் இரு துண்டு உடுப்புடன் நமீதாவை மிஞ்சிய கவர்ச்சியுடன் தமது சிறிய கட்டலில் சென்றனர். அப்பெண் எம்மைப் பார்த்து கையசைத்து "ஹாய்" என்ற போது தேவைக்கு அதிகமாய் உணர்ச்சிவசப்பட்ட நண்பன் மாலைப் பொழுதை நினைத்து நினைத்துநானும் நண்பரும் சிரித்துக்கொண்டு பார்நாப்பட்டோம்.

கடலுக்குளித்த குழந்தைகளுக்கு பசியெடுக்க உணவு பரிமாறப்பட்டு உணவு உண்ட பின்பும் மீன் அகப்பட்டதாய் இல்லை. இதற்கிடையில் ஒரு பெண் மட்டும் தூண்டில் இல்லாமல் மீன் பிடிக்கும் இடங்களுக்கு அலைந்து கொண்டிருந்தார். தன்னை மீன்கள் கண்டால் தாவி வந்து காலடியில் விழும் என்று நினைத்தாரோ என்று நண்பரும் நானும் பேசிக்கொண்டோம். சிலருக்கு ஏனோ அதீத சுயநம்பிக்கை இருக்கிறது.

முன்பொருகாலத்தில் எனதுதந்தையார் நாம் அக்கரைப்பற்றில வாழ்ந்திருந்த காலங்களில் மீன் பிடிக்க முயற்சித்தார். ஏறத்தாள ஒரு வருடமாய் மீண்டும் முருக்கை மரத்தில் ஏறிய விக்கிரமாதித்தன் போல் தினமும் மீன் பிடிக்கப் போவார்.

வெறுங்கையுடன் திரும்பிவருவார். இறுதியாக நாம் அங்கிருந்து புறப்படுவதற்கு முன்னான நாள் கடல் அவர் மேல் இரக்கப்பட்டு ஒரு மீனைக்கொடுத்தது.

அவரின் மகிழ்ச்சிக்கு அளவிருக்கவில்லை. எனக்கு எப்படி தூண்டிலை தலைக்கு மேலால் சுற்றி வீசுவது என்று லெக்சர் வேறு அடித்தார். நாம் புறப்படுவதற்கு முன் நண்பரின் மனைவி ஒரு மீன் பிடித்தார். அதைக் கண்டவுடன் அவர் நடுங்கத் தொடங்கிவிட்டார். ஒரு விதமாக அம் மீனை கரைக்கு இழுத்து கழுத்தை வெட்டினேன். நண்பரோ "நல்லா கழுத்தை வெட்டுறான்" என்றார்.

அடுத்து எனக்கு இரு மீன்கள் பிடிபட்டன. திடீர் என எனது மவுசு ஏறியது. குழந்தைகள் என்னை சூழ்ந்து கொண்டார்கள். சிலர் அதை மீண்டும் கடலில் விடக் கேட்டார்கள். சிலர் விரிந்த கண்களுடன் மீனை சுத்தப்படுத்துவதைப் பார்த்து "அவர் ஒரு மோசமான மாமா, பாவம் மீன்" என்றார்கள். நண்பர் ஒருவர் மீன்களை எடுத்துப் போய் பொரிக்கலானார்.

மாலை ஏழு மணிபோல் 3 பொரித்த மீன்களை ஏறத்தாள 15பேர் பிரித்து உண்டோம். எதையோ சாதித்தது போலிருந்தது. மகிழ்ச்சியான நாள். வீடு திரும்பிக் கொண்டிருந்த போது மீண்டும் மீன் பிடிப்பதற்கான நாளை யோசித்துக் கொண்டிருந்தோம் நண்பரும் நானும்.

விசுவன்

# தாக்கும் நேட்டோவும் தாக்குப்பிடிக்கும் கடாஃபியும்..!




**வேல்தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

அரபு நாடுகளின் மல்லிகைப் புரட்சி லிபியத் தலைவர் கடாஃபிக்கு எதிராக பெப்ரவரி 16-ம் திகதி கிளர்ந்த போது மேற்குலக நாடுகளின் பிரதிபலிப்பு துனிசியா, எகிப்து, பாஹ்ரெய்ன், சிரியா ஆகிய நாடுகளின் மக்கள் கிளர்ச்சிக்கான பிரதிபலிப்பிலும் பார்க்க வேறுபட்டே இருந்தது. கிளர்ச்சிக் காரர்களுக்கு ஆதரவாக ஜக்கிய நாடுளின் பாதுகாப்புச் சபை கூட்டப்பட்டது. லிபியாமீது நடவடிக்கை எடுக்க தீர்மானம்-1973 நிறைவேற்றப்பட்டது.

2011 மார்ச் 24-ம் திகதி ஃபிரெஞ்சு வெளிநாட்டமைச்சர் லிபியத் தலைவர் மும்மர் கடாஃபியின் படைபலம் சில நாட்கள் அல்லது வாரங்களுக்குள் நொருக்கப்பட்டுவிடும் என்றார். ஆனால் கடாஃபி இன்றுவரை தாக்குப் பிடிக்கிறார். பெப்ரவரி 21-ம் திகதி பிரித்தானிய வெளிநாட்டமைச்சர் கடாஃபி வெளி நாட்டுக்குத் தப்பி ஓடிவிட்டார் என்றார். கடாஃபி இன்றும் லிபியாவில்தான் இருக்கிறார்.

68 வயதான மும்மர் கடாஃபிக்கு ஏழு மகன்களும் ஒரு மகளும் உள்ளனர். இவர்களில் சயிஃப்கடாஃபியும் சாதிகடாஃபியும் தீவிரவாதத்தில் நம்பிக்கை குறைந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. மற்றவர்கள் தீவிரப்போக்கு உடையவர்கள் என்றும் நம்பப்படுகிறது. இவர்களுக்கிடையிலான போட்டியை மும்மர் கடாஃபியே உருவாக்கி தனது பதவி பாதுகாப்பாக இருக்கவும் மகன்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தன்னைப்பதவியில் இருந்து விலக்காமல் இருக்கவும் தந்திரமாகச் செயற்பட்டார் என்றும் சில ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்ததுண்டு.

### தனக்காக எதையும் செய்யும் கடா:பி

இப்போது உள்ள அரச தலைவர்களில் மிக நீண்ட காலம் பதவியில் இருப்பவர் லிபியத் தலைவர் மும்மர் கடாபி. 1969-ம் ஆண்டு ஓர் ஆயுதப் புரட்சி மூலம் அப்போது அரசராக இருந்த இட்றிஸை பதவியில் இருந்து அகற்றி ஆட்சியைக் கைப்பற்றியவர் மும்மர் கடாபி. அப்போது அவருக்கு வயது 27. அப்போது அவர் சிறந்த புரட்சியாள்ராகவும், புதிய சேகுவேராவாகவும் மதிக்கப்பட்டார். ஆனால் லிபியாவின் பொருளாதார முன்னேற்றம் மற்ற எண்ணெய் வள நாடுகளுடன் ஒப்பிடுகையில் பின் தங்கியே இருந்தது.

### கடா:பியின் தவறு

ஒரு சிறந்த எண்ணெய் வளம் மிக்க நாடு லிபியா. ஆபிரிக்காவில் லிபியாதான் அதிக தனி நபர் வருமானம் கொண்ட நாடு. தனி நபர் வருமானம் என்பது தேசத்தின் மொத்த உற்பத்தியை மக்கள் தொகையால் வகுக்க வருவது. ஆனால் லிபிய மக்களின் வாழ்க்கைத் தரம் மற்ற எண்ணெய் வள நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்ததே. அங்கு தேச வருமானம் சரியான முறையில் பங்கிடப் படவுமில்லை் பாவிக்கப்படவுமில்லை. லிபிய மக்களின் கல்வித்தரம் மிகவும் பிந்தங்கியது. மற்ற அரபு நாடுகள் நகர நிர்மாணம் தெரு நிர்மாணம் என்பவற்றில் அதிக ஈடுபாடு காட்டிய போது லிபியா என்ன செய்தது என்ற கேள்வி உண்டு.

லிபியாவில் மக்கள் கடாஃபிக்கு எதிரான கிளர்ச்சியை பெப்ரவரி 2011இல் ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் கிளர்ச்சிக்காரர்களின் கைகள் ஓங்கி இருந்தன. பின்னர் கடாஃபியின் படைகள் தாம் இழந்த பிரதேசங்களை மீளக் கைப்பற்றத் தொடங்கிய போதே பிரான்ஸ் ஐநா பாது காப்புச் சபைக்குப் பிரச்சனையை எடுத்துச் சென்றது.

### முன்னணியில் பிரான்ஸ்

லிபியா மீதான படை நடவடிக்கைக்கு பிரான்ஸ்தான் முன்னின்று செயற்பட்டது. பிரான்ஸில் லிபியாவிற்கு எதிரான படை நடவடிக்கைகளுக்கு பலத்த ஆதரவு நிலவுகிறது. எதிர்கட்சியான சோஸலிசக் கட்சியும் ஆதரவு தெரிவித்துள்ளது. லிபியாவிற்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பது பற்றி பல நாடுகள் பரிசில்தான் கூடி ஆலோசித்தன. லிபியாவிற்குள் பிரவேசித்து தாக்குதல் நடாத்தியவை பிரெஞ்சு விமானங்களே. சீனா லிபியாமீதான தாக்குதலைக் கடும் வார்த்தைகள் பாவித்துக் கண்டித்தது. சில நாடுகள் இப்போதும் பனிப்போர் மனப்பாங்கில் இருப்பதாக சீனா தெரிவித்தது. இரசியா ஒரு படி மேல் சென்று லிபிய அதிபர் கடாபியின் இருப்பிடம் மீதான தாக்குதல் ஒரு சிலுவைப் போர் போன்றது என்றார். இந்தியா லிபியா மீதான தாக்குதலை எதிர்த்துள்ளது. பாதுகாப்புச் சபையில் லிபியாவிற்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பொருளாதாரத் தடையும் ஒன்று. இரசியாவிற்கு லிபியாவுடன் இரண்டு பில்லியன் பெறுமதியான ஆயுத வர்த்தகம் இருந்தும் இரசியா அத் தீர்மானத்தை எதிர்க்கவில்லை.

### தப்புக் கணக்கு

நேட்டோப்படைகள் லிபியாவின் மீது பொருளாதாரத் தடையை விதித்து கடாஃபியின் படை நிலைகளை தமது நவீன விமானங்கள் மூலம் மூர்க்கத்தனமாக தாக்கி வருகின்றன. தனக்கு எதிராக சதி செய்து தன்னைக் கவிழ்த்து விடுவார்கள் என்ற அச்சத்தில் கடாஃபி தனது படையினருக்கு போதிய பயிற்ச்சிகளோ ஆயுதங்களோ வழங்கவில்லை. அவரது படை பலமற்றபடை. என்றெல்லாம் ஆரம்பத்தில் கூறப்பட்டன. இன்றும் கடாஃபி தனது படை பலமிழந்து நிற்பது போன்ற சமிக்ஞைகளை வேண்டுமென்றே நேட்டோவைக் குழப்புவதற்காக அனுப்பிக்கொண்டே இருக்கிறார். அத்துடன் லிபிய அதிபர் தளபதி மும்மர் கடாபி தான் பதவி விலகப்போவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கின்றார். பிரித்தானிய் அரசி எலிசபெத்-2 பதவியில் இருக்கும் வரை தானும் பதவியில் இருப்பேன்? தன்னிலும் அதிக காலம் எலிசபெத்-2 பதவியில் இருக்கிறார் என்கிறார்.

### லிபியாவிலும் கொத்தணிக் குண்டுகள்

2007இல் கொத்தணிக் குண்டுகளுக்கு எதிரான பன்னாட்டு உடன்படிக்கையில் கையொப்பம் இட முன்னர் ஸ்பெயின் தன்னிடம் இருந்த கொத்தணிக் குண்டுகளை லிபியாவிற்கு விற்பனை செய்துவிட்டது என்று கூறப்படுகிறது. மற்-120 எனப்படும் இக் கொத்தணிக் குண்டுகள் லிபியக் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக கடாஃபியால் பயன்படுத்தப்படுகின்றன.

### கடா:பியைக் கைது செய்ய உத்தரவு.

பன்னாட்டு நீதி மன்றம் ஜூன் 27-ம் திகதி போர்க்குற்றம் புரிந்தமைக்காக கைது செய்யும் உத்தரவைப் பிறப்பித்தது. இலங்கைப் போர்க் குற்றம் பற்றி அறிந்தவர்களை பன்னாட்டு சமூகத்தின் இரட்டை வேடம் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. பன்னாட்டு நீதிமன்ற உத்தரவை லிபியக் கிளர்ச்சியாளர்கள் ஆராவாரித்து வரவேற்றனர்

### காடா:பியின் கடிதங்கள்

ஜீன் 9-ம் திகதி கடாஃபி அமெரிக்க காங்கிரசுக்கும் மூதவைக்கும் போர் நிறுத்தம் வேண்டிக் கடிதம் அனுப்பினார். பின்னர் ஜூன் 23-ம் திகதி லிபியப் பிரதம மந்திரி அல் முகமாடி அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவிற்கு பேச்சுவார்த்தை வேண்டியும் அமெரிக்காவில் முடக்கப்பட்டுள்ள நான்கு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான லிபியச் சொத்துக்களை விடுவிக்க வேண்டியும் கடிதம் எழுதினார். இவை எதுவும் எடுபடவில்லை. மேற்குலகம் கடாஃபியினுடனான அமைதிப் பேச்சுவார்த்தியிலும் பார்க்க காடாஃபியை கொன்று அமைதியை உருவாக்குவதையே விரும்புகிறது. அமெரிக்க நிர்வாகம் லிபியாவில் இருந்து கடிதங்கள் வந்தது போல் காட்டிக் கொள்ளவில்லை. லிபியாவில் இருந்து தான் தப்பிச் செல்வதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்து தரும்படியும் தன்மீது போர்குற்றம் சுமத்துவதற்கு எதிரான பாதுகாப்பு வழங்கும் படியும் கடாஃபி திரைமறைவுப் பேச்சுவார்த்தைகளைச் செய்து பார்த்தார் சரிவரவில்லை. தன்னைக் கொல்வதுதான மேற்குலகின் நோக்கம் என்றுணர்ந்த கடாஃபி இப்பொது சீறத் தொடங்கிவிட்டார். தனது விசுவாசிகள் மேற்குலகின் வீடுகளையும் பணிமனைகளையும் இலக்க்கு வைத்து குழவிகள் போலவும் வெட்டுக்கிளிகள் போலவும் தாக்குதல் நடத்துவார்கள் என்று எச்சரித்துள்ளார்.

### கடா:பியின் கௌரவம் சதுரங்க நடுவிலே

கடாஃபிக்கும் இரசியாவிற்கும் இடையிலான தொடர்பாளராக பன்னாட்டு சதுரங்க ஒன்றியத்தின் தலைவர் கிர்சான் இலுயும்சினோவ் செயற்படுகிறார். அவர் கடாஃபிக்கு ஒரு கௌரவ மான முடிவை ஏற்படுத்த முனைகிறார். அவர் இரண்டு தடவை திரிப்போலி சென்று கடாஃபியைச் சந்தித்துப் பேசினார். அவர் கடாஃபியுடன் சதுரங்கம் ஆடிய படியே கடாஃபி பதவியில் இருந்து விலகி வேறு நாடு ஒன்றுக்கு செல்வது பற்றி உரையாடிப்பார்த்தார். ஆனால் கடாஃபி மசியவில்லை. பதவி விலகி வேறு நாட்டிற்கு செல்வதிலும் தான் தனது சொந்த மண்ணில் இறப்பதையே விரும்புகிறேன் என்றார் கடாஃபி சதுரங்க ஆட்டத்தில் கடாஃபியை செக் மேற் ஆக்காமல் ஆட்டத்தை வெற்றி தோல்வி இன்றி முடித்துக் கொண்டார் கிர்சான் இலுயும்சினோவ். காடாஃபியின் ஆட்சி ஏற்கெனவே செக் மேற்றில் உள்ளது. ஜூலை 4-ம்திகதி இரசியா தனது நேட்டோவுடனான உரையாடலில் காடாஃபிக்கு ஒரு கௌரவ முடிவை ஏற்படுத்தும் தனது விருப்பத்தைத் தெரிவித்தது. ஆபிரிக்க ஒன்றியத் தலைவர் ஜேக்கப் ஜூமோ தனது ஒன்றிய நாடுகளுக்கு கடாஃபியின் மீதான பன்னாட்டு நீதிமன்றப் பிடியாணையை கருத்தில் கொள்ள வேண்டாம் என்று அறிவித்துள்ளார். கடாஃபி ஆபிரிக்க நாடொன்றில் தஞ்சம் புக அது வசதியாக இருக்கும் என்றே இந்த ஏற்பாடு. ஆபிரிக்க ஒன்றியம் லிபியாவில் ஒரு இடைக்கால அரசை அமைக்க விரும்புகிறது.

### கைகொடுக்குமா கடா:பியின் அனுபவம்?

தொடரும் நேட்டோ கூட்டமைப்பின் தாக்குதல்களும் எண்ணெய்த் தாகமெடுத்துத் துடிக்கும் மேற்குலக அரசுகளும் உள்ளூர் கிளர்ச்சிக்காரர்களும் மும்மர் கடாஃபியின் அதிகாரத்திற்கும் உயிருக்கும் பலத்த ஆபத்தை ஏற்படுத்துகின்றன. இவற்றுக்கு மத்தியில் மும்மர் கடாஃபி தனது காய்களை தந்திரமாக நகர்த்துகிறார். கடாஃபியின் தாக்குப் பிடித்தலின் இரகசியம் அவர் அழுத்தங்களுக்கு மசியாதவர், அழுத்தங்களை எதிர் கொண்ட அனுபவம் நிறைய உடையவர். தன்னை கொல்வதற்கு எதிரான சதியை எப்படிக் கையாள்வது என்ற அனுபவம் நிறைய உடையவர். ஆனால் ஆட்டம் ஏற்கனவே செக் மேற் ஆகி விட்டது.

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....



seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ

creative artwork from concept to design

# கோவில்களும் கேள்விகளும்!

இதை வாசிக்கத் தொடங்கும் நீங்கள் என்னை ஒரு நாஸ்திகனாக நினைத்துவிடக் கூடாது. நான் ஆன்மீகத்தில் மிகவும் பற்றுள்ளவன். ஆதி சிவனை எனது குலதெய்வமாக வணங்குபவன். அன்பே சிவம் என்னும் வாக்கியத்தை மூல மந்திரமாகக் கொண்டு வாழ்பவன்.

இன்று ஐரோப்பிய நாடுகளில் இந்துசமயத் திருக்கோவில்கள் அநேகம் நிர்மாணிக்கப்படுவதை அறியமுடிகிறது. இவை யாவும் உண்மையிலேயே எமது சமயத்தை நிலைநாட்டவும், சமயத்தைப் பரப்புவதற்காகவுமே ஏற்படுத்தப் படுகின்றனவா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இருப்பினும் அவை அந்த நோக்கங்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளன என ஏற்றுக் கொள்வோம். அப்படியானால் எமது சமயம், கலை, கலாச்சாரம் காப்பாற்றப் படுகின்றன என்பது மகிழ்ச்சியே.

இங்கே நான் எடுத்துக்கொள்ள விரும்பும் விடயம், சில கோவில்களில் கண்மூடித்தனமாக நடைபெறுகின்ற சடங்குகள் பற்றியதாகும். இறைவனுக்கு அபிஷேகம், ஆராதனை, பட்டு முதலியவற்றைச் சாற்றுதல் மூலம் நம்முடைய பிரார்த்தனைகளை நிறைவேற்றி மனச்சாந்தி அடைகிறோம். அது தவறல்ல.

ஆனால் எந்த ஒரு விடயத்தையும் கையாழும் போது அதைச் சரியானமுறையில் கையாழுகிறோமா என்று கவனித்தல் மிக அவசியமானது. உதாரணமாக பால் அபிஷேகத்தை எடுத்துக்கொள்வோம். இறைவன் திருமேனியாக எழுந்து நிற்கும் சிலைமீது நாம் பாலைக் குடம் குடமாகக் கொட்டுகிறோம். அது நேராக கழிவு நீர்க்கால்வாயைச் சென்றடைகிறது. இவ்வாறு குடம்குடமாகப் பாலைக் கொட்டி அபிஷேகம் செய்வது அவசியம்தானா என சிந்தித்துப் பாருங்கள். இறைவனுக்கு அபிஷேகம் செய்ய ஓரிரு குடம் பால் போதாதா? ஊரிலே இப்படிக் குடம் குடமாகக் கொட்டி அபிஷேகம் செய்யும் வழக்கம் நடைமுறையில் இருந்ததா? வசதி இருக்கிறது என்பதற்காக இப்படி வீணாகச் செலவு செய்தல் தகுமா? தருமமா? இது அவசியந்தானா? ஓரிரு குடம் பால்கொண்டு அபிஷேகம் செய்து பூசித்த பின் மிஞ்சியுள்ள பணத்தைச் சேகரித்து எமது தாய்நாட்டில் ஒருவேளைக் கஞ்சிக்கே அல்லலுறும் குழந்தைகள், அங்கவீனர்கள், விதவைகள் ஆகியோரின் பசிபோக்க நீங்களே அனுப்பி வையுங்கள். அவர்களின் சிரிப்பில் நீங்கள் இறைவனைக் காணலாம்.

அடுத்து, இறைவன் இறைவிக்கு பட்டுச் சாத்தி பிரார்த்தனை செய்கிறோம். ஆனால் 50 பவுணிற்கு வாங்கும் வேஷ்டி, சேலை ஆகியவற்றை சிறிது குறைவான விலையில் (30 அல்லது 20 பவுணில்) வாங்கி மீந்துள்ள தொகையைச் சேகரித்து நம் தேசத்தில் துன்புறும் மக்களுக்கு அனுப்பி வைக்கலாமே.

ஒரு சில ஆலயங்களினால் அவ்வாறு பணம் அனுப்பப்படுவது மன நிறைவைத் தருகிறது. கோவில்களில் சேரும் பாலில் ஓரிரு குடங்களை எடுத்துக்கொண்டு மிகுதியை கடவுளின் அடியார்களுக்கு குறைந்த விலையில் விற்று அதில் கிடைக்கும் பணத்தைச் சேகரித்து நம்மவர்களுக்கு உதவமுடியாதா? சில ஆலயங்கள் தற்போது அவ்வாறு செய்வது மனமகிழ்வைத் தருகின்றவேளை பல ஆலயங்கள் அதைச் செய்வதில்லையே. ஏன்?

கோவில்களில் இறைவன் மற்றும் இறைவிக்குச் சாற்றிய பட்டுவேட்டி, சேலைகள் ஆகியன குறைந்த விலைக்கு விற்பனையாவது வரவேற்கப்படவேண்டியதே. அப்பணம் நம் உறவுகளின் வேதனையைக் குறைக்க உதவுமானால் அதுவே மிகச் சிறந்த சேவையாகும். கோவில்களில் பட்டுத்துணிகளைச் சாத்துகிறோமே, இவை எப்படி உருவாகின்றன என்று எப்போதாவது யோசிக்கிறோமா?

பல பட்டுப்பூச்சிகளை கூட்டுடன் வெந்நீரில் போட்டுக் கொன்று அதன் கூடுகளிலிருந்து பிரித்தெடுக்கும் நூலிலிருந்து நெய்த பட்டுத் துணிகளை இறைவனுக்கு அர்ப்பணிக்கிறோமே, அப்போது இறைவனுக்குக் காணிக்கை கொடுப்பதற்காக இறைவனின் இன்னொரு படைப்பினை அழித்தே அதைச் செய்கிறோம் என்று யோசித்திருக்கிறோமா?. எம்மையும் பட்டுத் துணியினால் அலங்காரம் செய்யும் போதும் அதற்காக எத்தனை உயிர்கள் பலிபோயின என்று யோசித்திருக்கிறோமா? பருத்தித் துணிகளை இறைவனுக்குச் சாத்தினால் இறைவன் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்து விடுவானா? பருத்தி உடைகள் பஞ்சிலிருந்து நெய்யப்பட்ட துணிகளால் ஆனது. பஞ்சினை அறுவடை செய்வதால் எந்தப் பிராணியும் கொல்லப் படுவதில்லை. சமயக் குரவர்கள், நாயன்மார்கள் யாராவது இறைவனுக்கு பட்டுச் சாத்துவதே சரியென எங்கேயாவது கூறியுள்ளார்களா? திருப்பாவை பாடிய ஆண்டாள் நாச்சியார் பாமாலையும் பூமாலையும் மாத்திரம் கொண்டு இறைவனை வணங்கி இறைவனுடன் சங்கமித்ததை நாம் கேள்விப்படவில்லையா?

விஞ்ஞானம் வளர்ந்துள்ள மேலைநாடுதரும் அறிவின் உச்சத்தில் நின்றுகொண்டு இன்னமும் பத்தாம்பசலி நம்பிக்கைகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் இன்னும் பகிர்த்துணரமுடியாத மனப் பக்குவத்தில் ஆழ்ந்து கிடக்கிறோம்.

1அல்லது 2பவுணிற்கு சீட்டைப்பெற்று அர்ச்சகருக்கே வெறுப்பேறும் வகையில் சந்ததி முழுவரினதும் பெயர், ராசி, நட்சத்திரம் கூறி அர்ச்சனை செய்விப்பவர்களின் அறிவினை என்ன சொல்வது? நாம் சொல்லித்தானா கடவுளுக்குத் தெரிய வைக்கவேண்டும்? நாமே எம்மைப்பற்றி இறைவனுக்கு நினைவூட்டுவது சின்னத்தனமாகத் தெரியவில்லை?

இவற்றைப் பார்க்கும்போது, ‘நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்’ என்ற பாரதியின் வேதனை எனக்கும் உண்டாகிறது.

இதற்குத் தகுந்த விளக்கத்தை சைவசமய அறிஞர்கள் யாராவது விளக்குவார்களாக இருந்தால் அது எனக்கும் என்போன்றவர்களுக்கும் சைவசமயத்தை விளங்கிக் கொள்ள மிகவும் உதவியாக இருக்கும்.

*- விசித்திரப் பிரியன்.*

# நினைத்து நினைத்து நெஞ்சம் உருகுதே...!

ஆண்டுகள் இரண்டு ஆனாலும் இன்னும் எத்தனை வருடங்கள் உருண்டு ஓடினாலும் விடுதலை இயக்கத்தின் முடிவு இப்படியாகி விட்டதெயென்று நினைக்க நினைக்க நெஞ்சுருகி மாயும்.

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. தமிழரின் சுதந்திரம் பறிபோகத்தொடங்கியது. அதிலிருந்து தமிழரடைந்த இன்னல் எழுத்திலடங்கா. ஏட்டிலடங்கா. மீளப்பெறமுடியாத இழப்புக்களை அளவிடயாராலும் முடியுமா? போராளிகளின் உயிர்த்தியாகங்களை வர்ணிக்க வார்த்தைகள் உண்டா? எத்தனையோ கனவுகளுடன் வயித்தில் சுமந்து பெற்றெடுத்து வளர்த்த பெற்றோரின் துன்பத்திற்கு எல்லையுண்டோ? பதினைந்து வயதளவில் சேர்ந்து 21 வயது ஆக முன் பல போராட்டங்களை சந்தித்து வெற்றியீட்டி விடுதலைக்கு வித்திட்டோமென மனநிறைவாய் விண்ணுலகம் சென்ற வீரத்தலைவர்களின் அர்ப்பணிப்பை என்னவென்பது. முப்படைகளையும் உருவாக்கி வழிநடத்தி எத்தனையோ போராட்டங்களில் வியத்தகு வெற்றியீட்டி சிங்களத்தை நிலைகுலையச் செய்த தன்னிகரற்க எம் தலைவரின் வீர பராக்கிரமம் என்ன? தமிழீழம் கைக்கெட்டிய தூரத்தில் தான் என்று உலகத்தமிழரை மகிழ்வில் மயங்கவைத்தது.

கனவு கண்டு கொண்டிருந்த தமிழீழம் கண்ணீரில் முடிந்தது என்று எண்ணி ஏங்குகிறது மனம். புலம் பெயர் நாட்டில் வாழ்வோர் எல்லாம் அந்தந்த அரசாங்கத்திற்கு எத்தனை விதமாக எடுத்துரைத்தும் அவையாவும் செவிடன் காதில் ஊதிய சங்காகிப்போச்சே.

வல்லரசெல்லாம் மகிந்தவின் பொய்யுரையைச் செவியுற்று தலைதாழ்த்தி வணங்க வேண்டிய தலைவரையும் விடுதலை இயக்கத்தையும் அழித்து ஒழித்ததே. ஈழத்தமிழர் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் இதனை மறப்பாரா? மன்னிப்பாரா?

*- தவம்*

## அநாமதேயனின் நிஜமுகம்

# கூட்டமைப்பு வேட்பாளர்களை மிரட்டும் ஆயுததாரி விதுல் சிவராசா!



பளை பிரதேச சபையில் த.தே.கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை போட்டியிலிருந்து ஒதுங்கிக் கொள்ளுமாறும் அவ்விதம் செய்யாவிடில் விபரீத விளைவுகள் ஏற்படும் எனவும் உயிருக்கு ஆபத்துவரும் என்றும் ஈபிடிபி அமைப்புடன் இணைந்து செயற்படும் ஆயததாரி கருணாகரன் என்பவர் மிரட்டி வருவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

*யாரிந்த கருணாகரன்?*

இயக்கச்சியை சேரந்த சிவராசா கருணாகரன் என்பவர், முன்பு விடுதலைப்புலிகளின் கலைபண்பாட்டுக் கழகத்தின வெளியீடான வெளிச்சம் இதழின் ஆசிரியராக இருந்தவர். விடுதலைப்புலிகளினால் தமீழீழ தேசியத் தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டபோது அதன் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

விடுதலைப்புலிகளின் உத்யோகபூர்வ ஏடான விடுதலைப்புலிகள், சுதந்திரப்பறவைகள், ஈழநாதம் ஆகிய பத்திரிகைகளில் வெளிவாசல் பாலன், மக்ஸ்வெல் மனோகரன், பிரகலாத கேமந் என்ற பெயர்களில் ஏராளமான கட்டுரைகளையும், கவிதைகளையும் எழுதிக் குவித்தார். ஆனையிறவுச்சமரை நினைவு கொள்ளும் வகையில் வெளிவந்த ஆனையிறவு கவிதை நூலை உருவாக்குவதிலும் இவரது கணிசமான பங்கிருந்தது. .

இயக்கச்சி கருணா என்ற பெயரில் அறியப்படாத ஒருவராக இருந்த இவரை விடுதலைப்புலிகள் தமிழ்இலக்கிய உலகத்திற்கு அறிமுகப்படுத்தினார்கள். ஆனால் 2008 ஆண்டில் விடுதலைப்புலிகளை பகைத்துக் கொண்ட இவர் அன்றிலிருந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக மறைமுகமாக செயற்பட்டுவந்தார். 2009 ஏப்பிரல் மாதத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்த கருணாகரன் தென்மராட்சியில் உள்ள அல்லாரை என்னுமிடத்திலுள்ள இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டார். அங்கிருந்து விடுதலைப்புலிகளை கடுமையாக விமர்சித்து ‘அநாமதேயன்’ என்ற பெயலில் இவரால் எழுதப்பட்ட கட்டுரைகள் தமிழகத்திலிருந்து வெளிவரும் ‘காலச்சுவடு’ இலக்கிய சஞ்சிகையில் வெளியாகியிருந்தன.

ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினரான முருகேசு சந்திரகுமார் என்ற இவரது உறவினர் மூலமாக ஈபிடிபியில் இணைந்து செயற்படும் கருணாகரனும், முன்னர் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்டவரான அன்ரன் அன்பழகன் என்பவரும் யாழ்ப்பாணத்திலிருந்து செயற்படும் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டுடைய ஊடகவியலாளர்கள், மற்றும் ஆக்க இலக்கியவாதிகளை அச்சுறுத்திவருவதாக பெயர்குறிப்பிட விரும்பாத ஆனால் தமிழ் இலக்கியப்பரப்பில் நன்கு அறியப்பட்ட இலக்கியவாதி ஒருவர் தெரிவித்தார்.

நோர்வேயிலிருந்து இயக்கப்படும் ‘பொங்கு தமிழ்’ இணையதளத்தில் விதுல் சிவராஜா, சிவ. பாக்கியராஜா, வெண்ணிலா எனப் பல புனைபெயர்களில், அடிபணிவு அரசியலை ஆதரித்து ஊதியம் பெற்று எழுதி வருகிறார். இதுதவிர வெவ்வேறு பெயர்களில் இணைய ஊடகங்களிலும் எழுதி வருகிறார். தினக்குரல் பத்திரிகையில் கிருஸ்ணமூர்த்தி அரவிந்தன், ஈபிடிபியின் தினமுரசு பத்திரிகையில் யோசப் தயாளன் ஆகிய பெயர்களிலும் இவர் கட்டுரைகளை எழுதிவருகிறார்.

‘பொங்கு தமிழ்’ தான் இப்படியென்றால், எதுவித கொள்கையுமற்ற, பணத்திற்காக எழுதிக்குவிக்கிற எழுத்து விபச்சாரியான கருணாகரனை மக்கள் வானொலி என தன்னை அழைத்துக் கொள்கிற ‘அனைத்துலக உயிரோடை’ (ஐ.எல்.சி தமிழ்) போன்ற ஊடகங்களும் அணைத்துக் கொள்வதுதான் விந்தையாக இருக்கிறது. இந்த விபச்சாரியின் எழுத்துக்களுக்கு வானொலியில் குரல் வடிவம் கொடுக்கிற பெருமதிப்புக்குரிய தாசீசியஸ் ஐயா அவர்கள் தயை கூர்ந்து இதை கவனத்தில் எடுப்பாரா?

*-கரிகாலன்*

*(இதுவும் ஒரு புனைபெயர்தான்)*

## மில்லியன் டொலர் கேள்வி...

ஒரு ஊரில ஒரு பாட்டி இருந்தாவாம்... கதையில் வரும் வடையை சுட்டது யார்?

1. பாட்டி 2. காகம் 3. நரி

சரியான விடையை
சொல்பவர்களுக்கு நமீதாவின்
பெரிய சைஸ்
(அதாவது படம் பெரிய சைஸ்)
தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

## நடந்தேறிய நிகழ்வு

### சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வாழ்வியற்பணிகள் நூல் வெளியீட்டு விழா

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 26.06.2011 சைவ முன்னேற்றச் சங்கத்தினரால் மேற்குறிப்பிட்ட நூல் வெளியீட்டுவிழா இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய மண்டபத்தில் சிறப்பாக நடந்தேறியது. இந்நூலின் தொகுப்பாசிரியர் திரு. ஐ.தி.சம்பந்தராகும். சைவமுன்னேற்றசங்க முக்கிய உறுப்பினர்கள் மங்கள விளக்கேற்றினார்கள். நால்வர் தமிழ் கலைநிலைய மாணவர்களின் இசையுடனும் திருமதி செ.வாமானந்தனின் திருமுறை ஓதுதலுடன் விழா ஆரம்பமானது.

சிவஸ்ரீ கயிலை நாகநாதக்குருக்களும் யாழ்ப்பாணம் நல்லையா ஆதீன முதல்வர் ஞான சம்பந்த பரமாச்சாரியாரும் ஆசியுரை வழங்கினர். ஸ்ரீ ஸ்ரீ ஞான சம்பந்த பரமாசாரியார் ஆரம்பகாலத்திலிருந்தே அம்மையாரின் பணியை நன்கறிந்தவர். அதில் ஒன்று 1997 யாழ்ப்பாணத்தை விட்டு மக்கள் எல்லோரும் கையெலெடுத்த ஒரு சில பொருளுடன் கால் நடையாகப் புறப்பட்டது எல்லோருக்கும் தெரியும்.

அவ்வேளையில் அம்மையார் தாம் வளர்த்த முந்நூறு பிள்ளைகளுடன் வந்து கொண்டிருந்தார். கைதடி முதியோர் இல்லத்தில் அவர்களைத் தங்க வைத்தார். அத்துடன் அம்மையார் நாங்கள் கையேந்தினாலும் பிராமணர்களைக் கையேந்த வைக்கக்கூடாது. என்று சொல்லிக் கோயில் நிதியிலிருந்து சிறுதொகையை எடுத்துப் பிராமணர்களுக்கு கொடுத்தாராம் என்று நல்லை ஆதீனத்தலைவர் அம்மையாரைப்பற்றி உருக்கமாகக் குறிப்பிட்டார். தலைமையுரையை திரு.க.இராஜமனேகரன் வழங்கி விழர்வை நடாத்தினார். நூல் வெளியீட்டு உரையை நூலகவியலாளர் திரு.என்.செல்வராஜன் வழங்கினார். நூலை ஆய்வு செய்தார் அறிஞர் திரு.செ.ஸ்ரீஸ்கந்தராஜா இன்னும் பலர் உரையாற்றினர். அன்றையநாள் ஐ.தி.சம்பந்தரின் 75 ஆவது பிறந்தநாளாக அமைந்துவிட்டதால் அவருக்கு வாழ்த்துக்களை வழங்கியம் பொன்னாடை போர்த்தியும் ஆசீர்வதித்தனர்.



BULLDOG™
Energy Drink
with Taurine
THE QUEEN'S AWARDS FOR ENTERPRISE: INTERNATIONAL TRADE
THE QUEEN'S AWARDS FOR ENTERPRISE: INTERNATIONAL TRADE 2010
THE QUEEN'S AWARDS FOR ENTERPRISE: INTERNATIONAL TRADE
SHEER ENERGY
35p
Power to topple any Bull!
BULLDOG SHEER ENERGY
ENERGY DRINK WITH TAURINE
Regular
Sugar Free
Sun Mark Limited
World Class Products
ROBUST
Gluco-Max
Max Energy
PURE HEAVEN
OUT OF THIS WORLD
ROYALTY
Taste of Distinction
BULLET
ENERGY DRINK
Golden Country
BULLDOG
SHEER ENERGY
summer fine
smoother spread
Anmol
LASER
NO CHOLESTEROL
the freshness of an English Breeze
Flower Garden
freshness at a touch of a button
SUMO
TOUGH ON GERMS
TOILET GUARD
FIRST LINE OF DEFENCE
Comfi
Soft & Strong
www.sunmark.co.uk

# தமிழ்த் தேசியத்துக்கு எதிராக பல்லாயிரக் கணக்கில் திரண்ட லண்டன் வாழ் தமிழர்கள்!




இலண்டனில் நியுமோல்டன் பகுதியில் மா.க.மாணிக்கம் ஒன்று, தமிழ்த் தேசியவாதி ஒருவரினால் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவென்று, நேற்று முந்தினம் (யூன் 26) தமிழ்த் தேசியத்திற்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துமாறு, லண்டனிலுள்ள இலங்கை தூதரகம், அதன் சம்பள பட்டியலில் உள்ள சிலருக்கு அவசர வேண்டுகோள் விடுத்தது.

இதற்கு துணையாக தமிழ் பேசும் புலனாய்வுத் துறையனாகிய கேபிக்கள், மாற்றுக்கருத்து ஒட்டு மாமணிகளின் பாரிய ஏற்பாடுகளில் 'வன்னியன் கடை' முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக் கணக்கானோர் திரண்டனர் என மா.க.மாக்களின் ஊடகங்கள் தகவல் தந்தன. அங்கு திரண்ட பல்லாயிரக் கணக்கானோரை மேலுள்ள படங்களில் பார்க்கிறீர்கள் ...

பல்லாயிரக்கணக்கானோரை கட்டுப்படுத்த பாரிய லண்டன் மெற்றொபொலிற்றன் பொலிஸ்படை அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாம், ஆனால் அதற்கு முன் நாலு படங்களை எடுத்து விட்டு, அப்பன்னிருவரும் எஸ்கேப் ஆகிவிட்டார்களாம்..

-யாழில் நெல்லையன்

*வாசகர் கருத்து: சும்மா புழுகாதீங்கோ, உவயள் பஸ்ஸுக்கு நிக்கிற ஆக்கள். (சித்தன்)*


# விஜய ரீ.ஆரைக் கேளுங்கள்...!



*''முதிர்ந்த தலைவரான கருணாநிதி இத்தனை இக்கட்டுக்கு ஆளாகித் தவிப்பதை அவருடைய முன்னாள் தொண்டரா எப்படி தாங்கிக்கிறீங்க?''*

"அவருக்கு இருப்பது இக்கட்டுன்னா, இலங்கையில திக்கெட்டுத் தவிச்சவங்க யாரு? செங்கோல் சாய, சிங்களவன் பாய, செங்குறுதி ஓட, ஈழத்திலே வீசியது ரத்த வாடை! சில்லறையைக் கரைக்க, சிந்தையை மயக்க, செம்மொழியைப் பாட, கோவை யிலே போட்டார்கள் மேடை. இதை எல்லாம் சகித்துக்கொள்ள தமிழன் ஆகி விட்டானா சோடை? அவர்கள் சாதித்து விட்டார்கள் காரியம்... சாக்குக்காகப் பேசக் கூடாது ஆரியம்... சக்தி இழந்து விட்டது வேதியம்... சத்தியமா இல்லை வீரியம்!"

துவைத்துக் காயப்போடுவது என்பது இதுதானா...



# Hounslow - Heathland School மாணவர்களின் Eastern Evening கலை நிகழ்ச்சி








மேற்கு லண்டன் Hounslow பகுதியிலுள்ள Heathland School மாணவர்களால் நடாத்தப்பட்ட Eastern Evening கலை நிகழ்ச்சியின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

ஆசிய நாடுகளின் கொடிகளுடன் தமிழீழ தேசியக் கொடியும் தொங்க விடப்பட்டுள்ளமையை படங்களில் காணலாம்.

# மும்பைக் குண்டு வெடிப்பும் இந்தியச் சாதியும்.



மும்பையில் 14-ம் திகதி ஜீலை வெடித்த மூன்று குண்டுகளுக்கும் உலகின் மூலை முடுக்கெங்கிலுமிருந்து கண்டனக் குரல்கள் வந்தன. பாக்குநீரிணையில் தமிழ் மீனவர்கள் கொல்லப்பட்டபோது மௌனமாக இருந்தவர்கள் வரிந்து கட்டிக்கொண்டு மும்பைக் குண்டு வெடிப்புக்கு எதிராக வாஷிங்டனில் முதல் பீஜிங் வரை கண்டனக் குரல்கள் ஒலிக்கின்றன. முள்ளி வாய்க்கால் பல்லாயிரக்கணக்கானவர்கள் இறந்து கொண்டிருந்தபோது நியூயோர்க்கில் நிலக்கீழ் அறையில் விவாதித்தவர்கள் மும்பைக் குண்டு வெடிப்புக்கு பகிரங்க கண்டனம் தெரிவிக்கின்றனர்.

மும்பை என்பது ஒரு புனித பூமியல்ல. இந்தியாவில் எந்த மூலையில் இளம் பெண்கள் காணாமல் போனாலும் அவர்கள் கொண்டு செல்லப்படும் இடம் மும்பைதான். இனக் கலவரங்கள், மதக் கலவரங்கள், தாதாக்கள் அட்டகாசம் எனப் பல பெருமைகள் நிறைந்த நகரம் மும்பை. அங்கு குண்டு வெடிப்பது இது முதல் தடவையல்ல. கடைசித் தடவையுமல்ல. முனபு நடந்த குண்டு வெடிப்புக்களுக்கு பிரபல இந்தி நடிகர்கள் கைது செய்யப்பட்டதுமுண்டு.

முமபைக் குண்டு வெடிப்புக்கு இனிப் பத்திரிகைகள் 13/7 என்று பெயர் சூட்டி எழுதி விற்பனையைப் பெருக்கிக் கொள்ளும். குண்டு வெடிப்பின் முதல் சந்தேகம் இசுலாமியப் பயங்கரவாதிகள் மேல் விழுந்தது. அதுவும் பாக்கிஸ்த்தானிய இசுலாமியப் பயங்கரவாதிகளல்ல! உள்ளூரில் உருவாக்கம் பெற்ற முஜாஹ்தீன் அல்லது லக்சதர்-இ-தைபா இயக்கங்கள் இவற்றைச் செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

### இந்தியா தொடர்பான தமிழர்களின் பட்டறிவு.

இந்தியாவின் கள்ளத்தனம், கபடம், நயவஞ்சகம் போன்றவை தொடர்பாக உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு நல்ல பட்டறிவு 1987 இற்குப்பின்னர் கிடைத்துள்ளது. சிலருக்கு அதற்கு முன்னரும் தெரியும். இலங்கையில் போர் நடந்து கொண்டிருக்கும் போது பகிரங்கமாக போர் நிறுத்தம் வேண்டும் என்று சொல்லிக் கொண்டு திரைமறைவில் போரை நடத்திய இயக்குனர் இந்தியா என்பதை நாம் அறிவோம். எத்தனை ஆயிரம் படைகள் எந்த நாட்டில் இருந்து பின்கதவால் வந்து ஈழ மண்ணில் இறங்கின என்பதையும் நாம் அறிவோம். 2009 ஆகஸ்ட்டில் இலங்கை முடிக்க இருந்த போரை 2009 மே மாதத்தில் அப்பாவிகளின் இறப்பைக் கருத்தில் கொள்ளாது யார் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து என்பதையும் நாம் அறிவோம். இந்தியாவின் உண்மை நிறத்தை இப்போது பாக்கு நீரிணைக்கு வடக்கே வாழும் தமிழர்களும் உணரத் தொடங்கிவிட்டார்கள்.

### தமிழர்கள் நாம் மாற்றி யோசிப்போமாக.

மும்பைக் குண்டு வெடிப்பை நாம் இந்தியா தொடர்பான எமது பட்டறைவக் கொண்டு பார்த்தால் எமக்குப் பல சந்தேகங்கள் எழலாம். இந்திய ஆளும் கட்சி இப்போது தனது செல்வாக்கை சிறிது சிறிதாக மாநிலக் கட்சிகளிடம் இழந்து வருகிறது. சோனியா அக்காவிற்கு மாயா அக்கா, மம்தா அக்கா, ஜெயா அக்கா என மூன்று அக்காகள் ஏற்கனவே நண்ணிகாட்டி விட்டார்கள். தேசத்துகு எதிரிகளால் அச்சுறுத்தல் என்றால் தேசத்தை ஆள்பவர்களுக்கு செல்வாக்குக் கூடும். இந்நிலையில் இப்படி ஒரு குண்டு வெடிப்பு ஆட்சியாளருடன் மக்களை நெருக்கமாக்கும். ஆளும் கட்சியின் ஊழல்களை மறைக்க ஆளும் கூட்டணிக் கட்சிகளின் ஆட்களை திஹாரில் அடைத்துவிட்டாயிற்று. பாருங்கடா அக்கா தோழமைக் கட்சி என்றும் பாராமல் ஊழல்காரர்களைப் பிடித்து சிறையில் போட்டுட்டா என்று சோனியா அக்காவின் கட்சியின இனிக் கூவலாம்.

### காசுக்காரர்களில் கைவைகிறார்கள்

தயாநிதிமாறன் மந்திரிப் பதவியில் இருந்து விலக்கப்பட்டார். அவர் மிகவிரைவில் கனி மொழியுடன் களி சாப்பிடலாம். இதையும் கொஞ்சம் நாங்கள் யோசிக்க வேண்டும். மாறன் குடும்பம் ஊடகத் துறையில் பார்ப்பன ஆதிக்கத்துக்கு பெரும் சவாலாக இருக்கிறது.

### சிஐஏ என்று ஒன்று இருக்கிறது.

அரசியலில் நாம் எதையும் நாம் யோசிக்கும் போது சிஐஏயை மறக்கக் கூடாது. அமெரிக்க பாக்கிஸ்தானிய உறவு இப்போது மிக மோசமான நிலையை அடைந்துள்ளது. பின் லாடன் கொலைக்குப் பின்னர் பாதிப்படையத் தொடங்கிய அமெரிக்க பாக்கிஸ்தானிய உறவு பாக்கிஸ்தானிய ஊடகர் கொலைக்கு பாக் உளவுத் துறையை அமெரிக்க அட்மிரல் குற்றம் சாட்டியமையும் அமெரிக்கா பாக்கிஸ்தானிற்கு வழங்கி வந்த பண உதவிகளில் 800மில்லியன் டொலர்களை இடை நிறுத்தியமை பாக்கிஸ்த்தான் பாதுகாப்புத் துறை அமைச்சர் தாம் தமது படைகளை ஆப்கானிஸ்த்தான் எல்லையில் இருந்து விலக்கப் போவதாக அமெரிக்காவை மிரட்டியமை போன்றவற்குப் பிறகு மோசமான நிலையை அடைந்துள்ளது. பின் லாடனின் மாளிகைக்குள் இருந்து அமெரிக்க சீல் படைப் பிரிவினர் எடுத்துச் சென்ற கணனிகளும் கைப்பேசிகளும் பாக்கிஸ்த்தான் அரச படைகளிற்கும் உளவுத்துறைக்கும் தீவிரவாத அமைப்புக்களுடன் உள்ள தொடர்புகளை அமெரிக்காவிற்கு நன்கு புலப்படுத்தியுள்ளன.

**தயாநிதி மாறன் மந்திரிப் பதவியில் இருந்து விலக்கப்பட்டார். அவர் மிகவிரைவில் கனி மொழியுடன் களி சாப்பிடலாம்.**

பாக்கிஸ்த்தான் திவிரவாதிகளுக்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களுக்கும் எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என அமெரிக்க அரசுச் செயலர் ஹிலரி கிளிண்டன் பின் லாடன் கொல்லப்பட்ட சில நாட்களில் ஒரு திடீர் பாக்கிஸ்தான் பயணம் மேற்கொண்டு பாக்கிஸ்தானிய அரசை வற்புறுத்தினார். அவ்வாறு எல்லாம் செய்தால் பாக்கிஸ்தானிய அரசின் இருப்பிற்கே ஆபத்து. மூன்று ரில்லியன் டொலர்கள்($3000,000,000,000) கனிம வளம் கொண்ட ஆப்கானிஸ்த்தானும் பாக்கிஸ்த்தானும் இசுலாமியத் திவிரவாதிகளின் கையில் செய்வதை பெரியண்ணன் விரும்பவில்லை. பாக்கிஸ்தானிய அரசிற்கு நெருக்கடி கொடுக்க அமெரிக்காவிற்கு இந்தியாவும் அவசியம் தேவை. இதற்காகவும் மும்பையில் குண்டு வெடித்திருக்கலாம். குண்டு வெடித்தவுடன் ஹிலரி அக்கா சோனியா அக்காவிற்கு சொன்னது: நாம் முன்பு இருந்ததிலும் பார்க்க இந்தியாவுடன் நெருங்கி இருக்க வேண்டியது இப்போது அவசியம். ஹிலரி அக்கா வேறு அடுத்த வாரம் இந்தியா செல்லவிருக்கிறா. பின் லாடன் கணனிகளில் இந்தியா தொடர்பான அல் கெய்தாவின் நிலைப்பாடும் தாக்குதல் திட்டங்களும் பரிமாறப்படுமா?

*- வேல் தர்மா*

# விடுப்பு


பார்ப்பவர்: **இழுவைக்காரன்**

## வாரம் ஒரு வார்த்தை



சரத்பொன்சேகாவை மகிந்த அரசு அடைத்து வைத்திருப்பது வெலிகடைச்சிறையில். வாரமொரு முறை நீதிமன்றத்திற்கு அவரை அழைத்து வரும்போது அவர் தானும் பெரிய அரசியல் வாதியோ அல்லது அதைவிடப் பெரியவர் என்ற நினைப்பில் அங்கே நிற்பவர்களிடம் எட்டியெட்டி ஏதாவது ஒன்றை அரசுக்கெதிராக சொல்லிவிட்டு திரும்பவும் மாமியார் வீட்டுக்கு போய்விடுவார். ஆனால் அண்மையில் மகிந்த மனம் வருந்தினாராம். சரத் பொன்சேகாவை பகைத்தது தான் செய்த தவறு என்று. அதன்பிறகு சரத் வெளியில் வந்தால் தமிழர்கள் அதிகம் ஆசைப்படக்கூடாது கிழக்கில் பயங்கரவாதம் என்றெல்லாம் கூறி மகிந்தவைக் கூல் பண்ணுகிறார்.

## சமூகத்துடன் இணைப்பு



அண்மையில் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளி ஒருவரை சந்திக்க நேர்ந்தது. அப்போது என்னையும் அறியாமல் தம்பி உம்மையும் சமூகத்துடன் இணைத்துவிட்டார்களா? என்று கேட்டுவிட்டேன். அவருக்கு கோபம் வந்துவிட்டது. அண்ணை நாங்கள் புலிகளாக இருக்கும்போது சமூகத்துடன் இல்லாமல் சவுக்காலையில் இருந்தமாதிரி இவர்களின் பேச்சு. நாங்கள் போராளிகளாக இருந்த காலங்களில் தான் சனங்களோடு சந்தோசமாக கதைத்தோம். சிரித்தோம். ஆனால் இப்போதுதான் எங்களை விடுதலை என்ற பெயரில் வெளியில் விட்டுவிட்டு நாங்கள் யார் யாரோடு பேசுகிறோம் எங்கெல்லாம் போகிறோம் என்று அவதானித்து எங்களைத் தனிமைப்படுத்துகிறார்கள் பாவிகள் என்று புலம்பினார்.

## விளையாட்டு மைதானத்தில் வீரக்கொடி




இலங்கையில் பல சிங்கள பத்திரிகையில் ஒரு இளைஞனை இரண்டு பொலிசார் தரையில் வைத்து அமர்த்திப்பிடிக்கும் படத்தைப்போட்டு புலிக்கொடியுடன் இலங்கை கிரிக்கெட் அணி இலண்டனில் விளையாடிய மைதானத்தில் ஓடினார் என்று எழுதியிருந்தது. ஆனால் வேறொரு தமிழ்பத்திரிகையில் அந்த இளைஞன் புலிக்கொடியுடன் ஓடுவதைப் போட்டிருந்தார்கள். எத்தனையோ தமிழ் மக்கள் இதை பெரிது படுத்தி பேசுவதை காணக்கூடியதாக இருந்தது. அது மட்டுமல்ல அவர்களுக்குள் ஒரு மான உணர்வு கொந்தளிப்பதையும் காணக்கூடியதாக இருந்தது.

## வவுனியாவில் சிங்களப்பெண்கள்



வவுனியா நகர்ப்பகுதியில் விபச்சாரம் தலைவிரித்தாடுகிறது. தெற்கிலிருந்து வரும் சிங்களப் பெண்களும் சில தமிழ்ப்பெண்களும் சேர்ந்து தனித்தனியாக விபச்சாரத்தில் ஈடுபடுகிறார்கள். இவர்களுக்கு ஒரு மணித்தியாலத்திற்கு இவ்வளவு என்று விலை பேசப்படுகிறது. கடைகளின் பின்னறைதான் இவர்களின் படுக்கையறையாக பயன்படுகிறது. இதை பொலிசார் கண்டும் காணாமல் இருக்கிறார்கள்.

## எட்டு வயது சிறுமியிடம் இச்சையை தீர்த்தார் ஒரு E.P.D.P



அண்மையில் வவுனியாவில் ஒரு Studio க்குள் நுழைந்து தண்ணீர் தாங்கோ மாமா தாகமாய் இருக்கிறது என்று ஒரு எட்டுவயது சிறுமி அந்த மாமாவிடம் கேட்க உள்ளே வாம்மா என்று அந்தக் குழந்தையைத் தூக்கிப்போய் அந்த மாமாப் பன்னாடைப் பரதேசி வேலை பாத்திருக்கிறான். அந்தப் பரதேசியை யார் என்று விசாரித்தால் அது முன்னர் E.P.D.P. இல் இருந்து கொஞ்சம் பணம் சேர்ந்ததும் அந்த குழுவில் இருந்து பிரிந்து Studio வைத்திருப்பதாக அறிந்தேன்.

## டக்ளஸ் மாமாவுக்கு கடும் எச்சரிக்கை



02.07.2011 அன்று வட மாகாண முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு நடந்தது. இதில் பசிலும் சில அமைச்சர்களும் கலந்து கொண்டார்கள். அந்த மேடையின் பின் திரையின் நடுவில் பெரிதாக டக்லஸின் பெரிய உருவப்படமும் இருமருங்கிலும் மகிந்த, பசிலின் உருவப்படமும் வைத்திருந்தார்கள். இதைப்பார்த்த பசிலுக்கு ஆத்திரம் வந்து நேரடியாகவே டக்லஸிடம் எச்சரித்திருக்கிறார். உடனே டக்லஸ் மன்னிப்புக்கேட்டு இனி மகிந்த மாத்தையாவின் படம் மட்டும் தான் நடுவில் இருக்கும் என உறுதி கூறினாராம்.

## கிழக்கு மக்களின் ஆதங்கம்



அண்மையில் பிள்ளையான் கூறும்போது வடக்கு கிழக்கை இணைப்பது என்பது T.N.A. மட்டுமல்ல இந்தியா, அமெரிக்கா, ஏன் கடவுளே நினைத்தாலும் வடக்கையும் கிழக்கையும் இணைக்கமுடியாதென்று. இதைக் கேட்ட படித்த மற்றும் பாமர மக்கள் கூட இந்த சிறுபிள்ளைத்தனமான பேச்சைக்கேட்டால் வெட்கப்பட வேண்டியிருக்கிறது என்றார்கள். இவர்களெல்லாம் ஒரு காலத்தில் விடுதலைப்புலிகளோடு இருந்தார்கள் என்பதை நம்பமுடியாமல் இருக்கின்றது என்றார் ஒரு ஆசிரியர்.

## தோள்பட்டை வலியால் கனிமொழி அவதி

கழுத்து வலி மற்றும் தோள்பட்டை வலியால் கனிமொழி அவதிப்படுகிறாராம். இதற்கு நிவாரணம் தேடுவதற்காக மருத்துவ முறையிலான தலையணை மற்றும் படுக்கை தருமாறு கோரி அவர் சிறப்பு சிபிஐ கோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளார்.

செய்த குற்றத்திற்கு தண்டனை அனுபவிக்கவே, கனிமொழியை சிறையில் வைத்திருக்கிறார்கள். அங்கு எல்லாக் கைதிகளுக்கும் உள்ளமாதிரியே, கனிமொழியை நடத்த வேண்டும். கருணாநிதியின் மகள் என்றபடியால்.... பெட்சீட், தலையணை எல்லாம் குடுக்கக் கூடாது. சிறையில் ஹோட்டல் வசதிகளை எதிர்பார்க்கக் கூடாது. சிறைக்கு செல்ல இருக்கும் கருணாவின் குடும்பத்தினரும், இப்பவே கட்டிலில் படுக்காமல் நிலத்தில் படுத்து ட்ரெயினிங் எடுத்தால்.... நல்லது.

*- தமிழ் சிறி*

தந்தை தலையணை ஏதுமின்றி தண்டவாளத்திலேயே தலை வைத்துப் படுத்தவர்..! ஆதலால் மகளும் அத்தகைய வசதிகளை எதிர்பார்க்கக் கூடாது..!

*- இசைக்கலைஞன்*

உனக்கு தோள்பட்டை வலி....... தமிழினத்தின் வலி என்னவென்று தெரியாவிட்டால் உங்கள் தந்தையாரை அணுகுங்கள்.

*- குமாரசாமி*

கனி மொழிக்குச் சிறை வாழ்வு புதுப்பழக்கம்! பாகப்போகச் சரியாகிவிடும்!!! ஒரு மூன்று நிமிடம், பின்வருமாறு செய்யுங்கள்! தோள் பட்டை வலி, ஒரு வாரத்தில் இருந்த இடம் தெரியாமல் போய் விடும்!

*- புங்கையூரான்*

முதலில் மருத்துவ ரீதியிலான படுக்கை மற்றும் தலையணை, அடுத்து வெயில் அதிகமாக இருப்பதால் ஒரு குளிரூட்டி என்று கோரிக்கைகள் நீண்டு கொண்டே போகக்கூடும். பிழை செய்தல் தண்டனையை அனுபவிக்கத் தானே வேணும்!!

*- குட்டி*

அக்கா இதுக்கு மேலேயும் பட வேணும், என்னைப் பொறுத்தவரை கனி குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டு ஒரு 20 வருடமாவது சிறையில் வாட வேண்டும், குற்றவாளியாக நிருபிக்கப்பட்டால் இப்ப இருக்கிற சலுகைகளும் கிடையாது,

அதை விட சிறைச்சாலை சீருடை தான் அணிய வேண்டும். சிறையில் இருந்து மீண்டு வரும் போது கனி அழுகின பழமாக இருக்க வேண்டும்

ஆனால் இந்திய அரசியலில் எதுவும் நடக்கலாம் அவ 20 வருடம் சிறையில் இருந்து போட்டு வெளிய வர கருணாநிதி மீண்டும் முதலமைச்சராகியும் இருக்கலாம். உவள் அந்த மகிந்தவை பார்த்து விட்ட லுக்கு இருக்கே 4ம் கட்ட ஈழப் போரில் உயிர் நீத்த 150 000 ஆத்மாக்களில் ஒன்று கூட உவளை மன்னிக்காது,

*- சுவி*

சிறையில் இன்னும் வேலை குடுக்கேல்லைப் போல, நல்ல வேலை குடுத்தால் தலைகாணியும், பாயும் தேவைப் படாது.சன்னலால் வரும் காத்துக்கே தூக்கம் சொக்க வைக்கும்!

*கந்தப்பு*

*(நன்றி யாழ்)*

## சிறகிருக்கு வானமில்லை..!

சிறகிருக்கு வானமில்லை–இதை
சிந்திக்க எவருக்கும்
ஞானமில்லை!

உயிரிருக்கு உறவில்லை.– இதை
உணரதான் உலகில்லை!

பசியிருக்கு கஞ்சியில்லை – இந்த
பவத்த எங்கு சொல்ல!

சின்னக் கூடாரமே
எல்லையாச்சு – இங்கே
சிங்கள முள்வேலி
தொல்லையாச்சு!

சிறகிருக்கு வானமில்லை–இதை
சிந்திக்க எவருக்கும்
ஞானமில்லை!!!

– நர்மதா

*( மூச்சு விட அனுமதிக்கும் – முள்வேலிக்குள் நம்முறவு.)*




தாயகத்து உணவுகளைத் தரமாகவும் சுவையாகவும் உடனுக்குடன் பெற்றுக் கொள்ள நாடுங்கள்....

**Star Restaurant**

100 இடியப்பம் சொதி சம்பல் £10

புரியாணி கொத்து ரொட்டி Fried rice Buy two get one free

2, Morden Court Parade, London Road, Morden, SM4 5HJ.

அழையுங்கள்:020 8640 1908

Free Delivery from 5.30 to 10:30 (minimum order £12)

Chicken curry and three vegetable curries are £2.50 each if you order over 100 of any main meal.

# சென்று வாருங்கள் பேராசானே...!



சென்றவாரத்தில் ஒருநாள் ( 06.07.2011) பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் மரணித்துவிட்டார் என்ற செய்தி வந்துசேர்ந்தது.பேராசிரியரிடம் கல்வி கற்றவனோ அல்லது விரிவுரைகளை கேட்டவனோ அல்ல என்றாலும் கூட மிக எட்ட இருந்தே அவரை பார்த்து கற்றுக்கொள்ள முயற்சித்த ஒரு ஏகலைவன் என்ற முறையில் சில நினைவுக்குறிப்புகளை பதியமுடியும் என நினைக்கிறேன்.(கட்டை விரல் காணிக்கை கேட்காத துரோணராச்சாரியார் அவர்)

அதுவரையும்புத்திசீவிகளைப்பற்றியும்,பேராசிரியர்கள் பற்றியும் எங்கள் மனங்களுக்குள் இருந்த விம்பங்களையும் கற்பிதங்களையும் தகர்த்து எறிந்து தவிடு பொடியாக்கியவர் பேராசிரியர் சிவத்தம்பி ஆவார்.அவருடன் கதைப்பதற்கு முன்னர் பேராசிரியர்கள், புத்திசீவிகள் என்றால் தங்களுடன் கதைப்பவர்களைவிடவும் ஒரு அடி மேலாக நின்று அந்தரத்தில் உலாவிக்கொண்டே கருத்துச் சொல்பவர்கள்,சாதாரணமக்களுக்கு புரியாமலேயே ஏதேதோ வார்த்தைகளை பேசும்போது புகுத்துவார்கள் என்றே நினைத்துக்கொண்டிருந்தோம்.

முதலாவது சந்திப்பிலேயே மிக அந்நியோன்னியமாக நட்பாக, தோழமையுடன் கருத்துச் சொல்லவும், கருத்துகளை கேட்கவும் அவரால் முடிந்ததை பார்த்தபோது இருந்த மலைப்பு இன்றளவும் தொடர்கிறது.

அவரைப்போல நவீன இலக்கியம், சமூக ஆய்வு அறிவு, ஆங்கிலப்புலமை, நுண்கலைகள்பற்றிய ஆழ்ந்தபேரறிவு, நடப்புஅரசியல் பற்றிய துல்லியமான பார்வை,என்பனவற்றுடன் மரபு இலக்கியங்களிலும் மிகமிக விரிந்த தேடலும், ஆற்றலும் கொண்டவராக இன்னுமொருவர் வந்துவிடமுடியாது என்று சொல்லுமளவுக்கு அவர் அனைத்து தளங்களிலும் மிகுந்தபரந்து விரிந்த புலமை கொண்டவராக இருந்திருக்கிறார்.

அவரால் மட்டுமே பல்கலைக்கழகங்களில் துறைசார் பேரறிஞர்களுடன் தரவுகளை எடுத்துப்போட்டு மிக ஆழமாக விவாதங்களில் ஈடுபடவும் அதே நேரத்தில் முதன் முதலாக எழுதவேண்டும் என்ற ஆவலில் உள்ளவர்களுடனும் அதேஈடுபாட்டுடன் கதைக்கவும் முடிகிறது.எல்லோருக்கும் அவரை எட்ட இருந்து பார்க்கும்போது ஒரு தமிழ்பேராசிரியராகவோ,நுண்கலைஅறிஞராகவோதான் தெரியும்.ஆனால் அவருடன் கதைத்துக்கொண்டு இருக்கும் பொழுதுகளில் எந்த துறையானாலும் அவர் தனது ஆளுமையை அந்த துறையில் தனக்கு இருக்கும் அறிவாற்றலை,தேடலை மிகவும் தெளிவாக புரிய வைத்துவிடுவார்.

அவருடையபுத்தகங்கள் அனைத்தும் வாசகனுடன் மிக நெருக்கமான உறவை வாசிக்கும்போது கொண்டுவிடுகின்றன.நவீன இலக்கியம் முதல் தொல்பொருளியல் வரைக்கும் அவருடைய புத்தகங்கள் விலாவாரியாக பேசுகின்றன.

அதிலும் அவர் எழுதிய 'தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும்' என்ற புத்தகம் மிகவும் ஆழமாகவும் சுவாரசியமாகவும் மொழியில் மதங்களின் பங்களிப்பையும் பாதிப்பையும் சொல்லியது. இன்றுஅந்த புத்தகம் நான்காவது பதிப்புகூட வருமளவுக்கு நிறைந்தஒரு வாசகப் பரப்பை கொண்டிருக்கிறது.

,துவரை கண்டடையப்பட்ட எந்த சமூகமும் மதம் இல்லததாக இல்லை என்ற வரைபுடன் ஆரம்பிக்கும் அவரது ஆய்வு மதத்தை நிராகரிப்பது ஆதரிப்பது என்பதற்கு அப்பால் விலகி மதத்தின் வரலாற்றுப் பாத்திரத்தை மிகஅழகாக மிக எளிமையாக விளக்குகிறார். இதே புத்தகத்தின் 130ம் பக்கங்களில் பேராசிரியர் அவர்கள் திருக்குறளை தமிழில் ஒலித்த முதலாவது மானுடவிடுதலைக்கான குரலாக பார்ப்பதை காணலாம். இந்த கருத்து இந்த புத்தகம் எழுதப்பட்டு (1984) பத்து ஆண்டுகளுக்கு பின்னர் அவர் டென்மார்க்நாட்டுக்கு வந்திருந்தபோதும் அப்படியே மாறாமல் இருந்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

உலகத்தின் வடமுனையில் இருக்கும் சுவீடன் ஊப்சலா பல்கலைக்கழகம் முதல் அமெரிக்க, ஆபிரிக்க, ஆசிய, அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்கள் அவரை தமது பல்கலைக்கழகங்களுக்கு மரியாதைக்குரிய பேராசிரியராக,வருகைதரும் பேராசிரியாராக அழைத்து கவுரவித்தன.அத்தனை பல்கலைக்கழகங்கள் ஏறினாலும் அவர் ஏதோ ஒரு பொழுதில் அந்த நிகழ்வுமுடிந்ததும் தனது மண்ணுக்கே திரும்பும் ஒரு யாத்திரையைமேற்கொண்டு இருந்தார். அவர் அந்த மண்ணையும் அதன் மக்களையும் ஆழமாக நேசித்தவர்.

நாம்வாழும் காலத்தின் மிகப்பெரும் அறிஞர் அவர் என்ற மதிப்பும் மரியாதையும் அவரிடத்தில் இன்றும் இனி வரும் எப்போதும் இருந்துகொண்டே இருக்கும். தமிழில் ஆய்வுகளையும்,விமர்சனங்களையும் ஒரு கருத்து இயக்கம் போலவே நடாத்திக்கொண்டு இருந்தவர் பேராசிரியர் சிவதம்பிஆவார்.

இன்று அந்த அறிவு அமைப்பு கண்ணை மூடிவிட்டது. அவருக்கு மரணம் வரும் நேரத்தில்கூட எங்காவது சங்க காலப்பாடல்களில், அல்லது சைவசித்தாந்த பாடல்களில் மரணநேரம் பற்றிய பாடல்கள் இருக்கின்றதா என்றே நினைத்திருப்பார்.அல்லது மார்க்சிம் கோர்க்கியோ, டால்ஸ்டாயோ மரணத்தை பற்றி என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றே இறுதிக்கணத்திலும் யோசித்திருப்பார். அவரின் மனம், மூளை, ரத்தம், செல்கள், எங்கும் இலக்கியம்தான் புகுந்திருக்கிறது. அவரே அவரின் ஒரு புத்தகமான 'இலக்கியமும் கருத்துநிலையும்' என்பதில் சொல்லியிருக்கிறார் 'இலக்கியம் என்பது ஒரு சமூக அழகியல் நிகழ்வு' (பக்கம்28) என்று.

ஆனால் தமிழ்சமூகம் இப்போது சிவத்தம்பி என்ற இலக்கிய பிதாமகரை இழந்து தனது அழகு அற்று நிற்கிறது. பேராசான் சிவத்தம்பி அவர்களின் 'தமிழில் இலக்கிய வரலாறு' என்ற நூலுக்கு அவர் எழுதிய முன்னுரையின் இறுதியில் சொல்லியிருப்பதுபோல

*'நிகழ்வுகள் நினைவுகளாகி,அந்த நினைவுகளின் நினைப்பிலே வாழ்வது மனிதனின் மானுடத் தன்மைக்கு வலுவும் ஆழமும் வழங்குகிறது'*

என்பதைப்போலவே பேராசானின் நினைவுகள் வலுவும் ஆழமும் வழங்கும்.

சென்றுவாருங்கள் பேராசானே....

*-ச.ச.முத்து*

# கம்யூனிஸ்டுகளின் ஆதரவு..

*(18ம் பக்க தொடர்ச்சி)*

அழைத்துக் கொள்ளும்போது எம்மாற் சமாளிக்க முடியாது போய்விடும் என்ற அடுத்த பக்கத்தைச் சரிவரப்புரிந்து கொள்ளாததுதான் இன்றைய எமது வீழ்ச்சிக்குக் காரணமாகும். எவ்வளவுதான் நாம் சொந்தக்காலில் நின்று போராடினாலும் எதிரியின் செல்வாக்கை உயர விட்டிருக்கவே கூடாது. அதற்கான யதார்த்த நடைமுறைகளில் எமது போராட்டம் வழிப்படுத்தப்படாதது மிகவும் வருந்தத்தக்கதாகும். புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்த போராளிகளின் தொடர்பு வட்டங்கள் ஜனநாயகப் பண்புகளற்ற மிகவும் இறுக்கமான கட்டமைப்புகளாகச் செயல்ப்பட்டதால் அறிவுஜீவிகளின் பங்களிப்பு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்பட்டது. எதிரி எம்மை முந்திக்கொண்டு போனதற்கு இதுவே காரணமாகும். சரியான வழிப்படுத்தல் நடைபெறவில்லை. நாம் பயங்கரவாதிகளாக வேறு முத்திரை குத்தப்பட்டோம். உலக ஆதரவை முற்றாக இழந்து போனோம்.

ஆனால் இன்று நிலைமை வேறாகிக் கொண்டு வருகின்றது. உலக ஆதரவு எம்மை நோக்கித் திரும்பியிருக்கிறது. இந்தியக் கம்யூனிஸ்டுகள் எமக்காகக் குரல் கொடுக்கிறார்கள். அதுவே உலகக் கம்யூனிஸ்டுகளின் ஓங்கிய குரலாக வடிவெடுக்கும் வாய்ப்புகள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. இந்நிலையில் எம்மை ஆதரித்துக் குரல் கொடுக்கும் அனைத்துத் தரப்பினருக்கும் எமது நன்றிகளையும் நல்லெண்ணத்தையும் நிறுவன ரீதியாகத் தெரிவித்து, அவர்களின் செயற்பாடுகளுக்கு நாமும் துணைபோகவேண்டியதே இன்று நாம் செய்யவேண்டிய கடமையாகும்.

புலம் பெயர்ந்த ஈழ ஆதரவுக் குழுக்கள், நாடு கடந்த தமிழீழ அரசு, இலங்கையிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற சகல தரப்பினரும் ஒன்றுபட்ட குரலில் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியினரின் ஈழச்சார்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தல் அவசியமாகும். கம்யூனிஸ்டுகளை ஊக்குவிப்பதன்மூலம், இன்று எமது அரசியல் அபிலாசைகள் நிறைவேறத் தடைக்கல்லாயிருந்து இலங்கையின் இனவிரோதச் செய்ல்பாடுகளைக் கண்டும் காணாமலிருக்கும் சீனா ரஸ்யா போன்ற நாடுகளை எம்பக்கம் ஈர்க்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படலாம்.

ஈழத் தமிழர்கள் கம்யூனிஸ்டுகளுக்கு உரிய மதிப்பினை அளிக்கவில்லை. சரித்திரத்தில், பருத்தித்துறைத் தொகுதியில் கந்தையாவென்ற ஒரேயொரு தமிழ் கம்யூனிஸ்டு பாராளுமன்ற உறுப்பினர் மட்டும் முன்பொரு தடவை தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இன்று கம்யூனிஸ நாடுகளே எம்மைப் புறந்தள்ளி விட்டிருக்கின்றன. இனி வருங்காலங்களில் எமது ஈழப்போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளின் ஆதரவும் பெறப்படவேண்டியது அவசியமாகும். அதற்கான காலம் கனிந்து வருகின்றது.

*தொடருவம்.....*



## குண்டு செய்.....!

இன விடுதலைக்கெதிராய் போராயுதங்கள்
தந்த புண்ணியவான்களே!
போர்முடிந்தது – அங்கே பொழுது
விடிந்ததா?

மண்ணையுண்டு காற்றைவிழுங்கி
மனிதன் வாழ வழியுண்டா?
எங்கள் துயரை எடுத்துரைக்க
எங்கேனும் மொழியுண்டா?

முள்வேலி நரகத்தில் மூச்சு திணருது, மூன்று
லட்ச உயிர்களென எந்த நாடு உணருது!!

ஓ! நாட்டாமை நாடுகளே!
இருக்கும் உயிரைஞ் காப்பாற்ற தொண்டு
செய் இல்லயேல் எல்லா உயிருக்குமென
ஒரே ஒரு "குண்டு செய்".!

**- சித்தன்**

MASS GLOBAL SHIPPING
MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing , Serving all the Sri Lankan Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers
• Packers • Movers • Shippers
We Offer the Best Services than all the Other in the trade!
Special rates for Containers and Machinery
4 Collection Points : Harrow, Warford, Knightsbridege, Croydon
FREIGHT ONLY £10.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)
Wooden boxes from £9.00
Call 0208 3862314
Contact : Das - 07852266400
Hot Line 24/7- 079 4010 8177
Local Collection Charge £5.00 upto Hounslow. Within M1 collection charge £15.00 upto Conventry All other area's we will offer the best rates
MASS GLOBAL SHIPPING
Warehouse, 652, Victoria Road Ruslip, HA40LN
E-Mail: Info@massshipping.com,
Web : www.massshipping.com
*Condition Apply Warming
No hidden charges
No bnognus promotions

ஒரு பேப்பர்
ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!
SUBSCRIPTION FORM
Name:
Address:
Postcode:
Telephone:
மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, LOMBARD HOUSE, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

| பிரித்தானியா: | கனடா: |
|---|---|
| Tel: 020 7043 4315 | Tel: 647-724-4188 |
| Fax: 020 7043 4312 | Fax: 416-438-7855 |

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. Age 23, 5' 4", British Citizen, Graduate degree,We are expecting doing full time work,Ref 3455.

2. Age 24, 5' 5", British Citizen, Graduate degree, Ref 3436.

3. Age 25, 5' 3", UK, Graduate degree, Ref 1243.

4. Age 29, 5' 4",UK(student visa), Medical Sector,Ref 3461.

5. Age 29, 5' 6",UK(student visa), Graduate degree,Divorced and looking for a groom in UK or Europe.,Ref 3404.

6. Age 25, 5' 3",london,Graduate degree, Ref 3392.

7. Age 29, 5' 5", British citizen, Doctor, looking for a qualified person,Ref 3390.

8. Age 30, 5' 3", British citizen, Engineer, Looking for a qualified person like accountant, Doctor and engineer,Ref 3389.

9. Age 24, 5' 5",British citizen, Administrative Service,Ref 3388.

10. Age 29, 5' 2",British citizen , Financial Sector, Ref 3382.

11. Age 29, 5' 4", UK(student visa), Graduate degree,Ref 3381.

12. Age 27, 5' 5", uk citizen, Accountants, Looking for a graduate person, Ref 3371.

13. Age 27,5' 6",London,PhD / Post Doctoral,Ref 3370.

14. Age 31, 5' 6",british citizen, Accountants, looking for a professional person,Ref 3365.

15. Age 26, 5' 8",british citizen, Medical Sector,looking for vellalar educated bride living in uk,Ref 3359.

16. Age 42, 5' 6",Canadian PR, Graduate degree, Looking for a Doctor, Engineer ,Ref 3358.

17. Age 20, 5' 2", A/L, UK,looking for a suitable groom with uk pr or citizen., Ref 3348.

18. Age 34, 5' 5",canada citizen, Graduate Degree,we are ready to sponsor student visa and the graduate people are fine,Ref 3342.

19. Age 29, 5' 6", UK, A/L, Looking for a UK Resident, Ref 3335.

20. Age 28,5' 5",UK,A/L,Ref 3326.

21. Age 29, 5' 5",British Citizen, Accountants, looking for who has been born or raised in the West,Ref 3316.

22. Age 30, 5' 3",UK,A/L, Looking for a suitable groom with UK PR or citizenship,Ref 3314.

23. Age 30, 5' 3",UK,ooking for a people those who finished atleast A level, Ref 3313.

24. Age 32,5' 2",British citizen, Graduate Degree,Looking for a well educated person settled in UK or US,Ref 3309.

25. .Age 27,Hight'5' 3", British Citizen, Doctor,looking for a suitably educated groom, Ref 3308.

26. Age 33,5' 2",British Citizen,PhD / Post Doctoral, Ref 3307.

27. Age 30, 5' 4", Australia,PhD / Post Doctoral,Ref 3232.

28. Age 32,5' 4",UK, Graduate degree, Ref 3227.

29. Age 28, 5' 3", India, Graduate degree, Looking for a british citizen groom, Ref 2996.

30. Age 26,5' 3",Norway,A/L, looking for a groom who live in Europe countries,Ref 2749.

31. Age 29, 5' 6",Sri Lanka,software engineer, Ref 3434.

32. Age 42,5' 2",Sri lanka, Graduate degree, Looking for a suitable groom in Europe countries,Ref 2622.

33. Age 30,5' 6", British Citizen, Doctor, Looking for a doctor,Ref 3423.

34. Age 31, 5' 6", British Citizen, Accountant, Looking for an educated groom,Ref 3365.

35. Age 28, 5' 8", British Citizen, Engineer, seeing suitable groom, Ref 865.

36. Age 32, 5' 4", UK(student visa), Doctor, looking for a matching groom in uk, Ref 3243.

37. Age 25,5' 6",French Citizen, Account student,looking for an educated groom,Ref 881.

38. Age 25, 5' 6", British Citizen, Graduate degree, Looking for an educated boy between age of 25-32 years,Ref 2495.

39. Age 29, 5' 5",Sri lanka, Lawyer, looking for a roman catholic groom from in Sri lanka/ UK,Ref 2224.

40. Age 33,5' 5",Sri lanka,Medical Secto, Looking for Europe Citizenship, Ref 2166.

41. Age 26,5' 6",Sri Lanka,Graduate degree, looking for a educated groom in uk,Ref 3299.

42. Age 31,5' 2",Sri lanka,A/L, looking for PR or Citizenship in uk,Ref 3402.

43. Age 27,5' 6",India,Graduate degree, looking for uk or other countries,Ref 3451.

44. Age 39,5' 3",Sri lanka, Engineer, seeking educated groom,Ref 3453.

45. Age 29,5' 0",UK, Graduate degree, well educated groom.Ref 866.

46. Age 27,German citizen(live in uk), Graduate degree,Ref 897.

47. Age 29,5' 2",British Citizen,A/L, Ref 963.

48. Age 31,5'10", Australia, Accountants, Ref 1120.

49. Age 23,5' 2", British Citizen, Doctor, looking for a suitable and a qualified groom,Ref 1408.

50. 26 வயது லண்டனில் வாழும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை Ref: 3425

51. 49 வயது 5'6" லண்டனில் வாழும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை Ref: 3432

52. 32 வயது 5'6" லண்டனில் MSc படித்துக் கொண்டிருக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகள் லண்டனில் தேவை Ref: 3433

53. 32 வயது 5'6" லண்டனில் MSc படித்துக் கொண்டிருக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகள் லண்டனில் தேவை Ref: 3433

54. Age 32 5'7", Living in London, Degree in bio medical, pharteutical company project manager and uk citizen, Ref: 575

## மணமகன் தேவை

1. Medical Professional, 5' 7", Christian, in UK since childhood, seeks matching groom. Ref : 3440

2. Age 43, 5' 8", British Citizen, Graduate degree, Ref 3446.

3. Age 27, 5' 7", uk (PSW Visa), Graduate degree, looking for suitable bride , Ref 3428.

4. Age 30,5' 5",UK (Student visa), Graduate degree, looking for vellalar educated bride living in uk,Ref 3447.

5. Age 29, 6' 1", uk, Graduate degree, Ref 3437.

6. Age 32,5' 5",UK,Looking for a suitable girl , Ref 3438.

7. Age 30, 5'8",UK, Engineer, Looking for a suitable woman, Ref 3441

8. Age 27,5' 6", UK(permit Visa), Information Technology, Ref 3454.

9. Age 33, 5' 9",UK,A/L,Ref 3456.

10. Age 42, 5' 3", British Citizen,A/L, Ref 3457.

11. Age 32,5' 11",British Citizen, Engineer, Looking for an educated Tamil woman from UK,Ref 3407.

12. Age 29,5'5", UK, Information Technology, looking for a girl with british citizen, Ref 3397.

13. Age 30, 6' 0", UK(student visa), Financial Sector,Ref 3376.

14. Age 29, 5' 9", French citizen (live in UK), Graduate degree, Ref 3374.

15. Age 31, 5' 8", UK(HSMP visa), Engineer, Ref 3373.

16. Age 35, 5' 10", France, A/L, Ref 3372.

17. Age 40, 5' 3", UK PR, A/L, Looking for a girl anywhere, Ref 3368.

18. Age 33, 5' 7",Canada PR, Information Technology, looking for a graduate person relating to computer or accouting field,Ref 3367.

19. Age 27, 5'8", UK, Graduate degree, Ref 3361.

20. Age 33,6' 2",UKPR, Engineer, Looking for a life partner, educated person.Ref 3360.

21. Age 37, 5' 6", british citizen, A/L, Ref 3355.

22. Age 30,5' 6",UK(PSW), Engineer, Looking for a Europe PR, Ref 3352.

23. Age 29, 6' 1", UK,Looking for a UK PR or citizen, Graduate degree, Ref 3349.

24. Age 35, 5' 5",British citizen, Graduate Degree,Ref 3346.

25. Age 30, 5' 8",UK,Administrative Service, Looking for a catholic family, Ref 3344.

26. Age 30, 5' 6", UK(PSW) , MBA, Ref 3341.

27. Age 37, 5' 6",UK (Student Visa), Graduate Degree, Looking for a europe citizen,Ref 3339.

28. Age 24, 5' 4", UK (Student Visa), Graduate Degree, looking for a british citizenship girl,Ref 3338.

29. Age 36, 5' 9",UK PR, MBA, looking for a educated bride, age 25 - 28,Ref 3337.

30. Age 33, 5' 4", UK PR, Public Service, Ref 3329.

31. Age 30, 5' 9", UK(PSW), Graduate Degree, looking for a british citizen girl, Ref 3325.

32. Age 27, 5' 11", UK(PSW), Graduate Degree, Ref 3321.

33. Age 32, 5' 1",UK,Graduate Degree, Ref 3312.

34. Age 32, 6' 0", UK PR, A/L, looking for a educated girl, Ref 3310.

35. Age 29, 5' 6",British Citizen, Information Technology,Looking for a girl undergraduate or diploma holder,Ref 3306.

36. Age 34,5'10", Qatar,Engineer,Ref 3412.

37. Age 30,5' 6",UK(PSW), Engineer, Looking for a girl with UK PR,Ref 3352.

38. Age 29, 5' 8", British Citizen, Finacial sector,Ref 3301.

39. Age 33, 5' 4", UK PR, Public Service,Ref 3329..

40. Age 26, 5' 8" , UK , Graduate Degree,Ref 3234.

41. Age 31,5' 9",UK(HSMP Visa), Engineer, looking for a lived in uk or europe,Ref 3233.

42. Age 27, 5' 6", Norway(student), Engineer, Ref 3229.

43. Age 27,5' 6",Norway,Graduate degree,Ref 3229.

44. Age 32,5' 10",Canadian PR,PhD / Post Doctoral, Looking for a bride in UK or Canada,ref 3228.

45. Age 36, 6' 0", UK, A/L, Ref 3205.

46. Age 37,5' 9",UK,A/L,Looking for a bride in Europe countries with PR or Citizenship,Ref 2937.

47. Age 38,6' 0",UK PR,A/L,looking for a catholic bride. age between 29–31,Ref 2916.

48. Age 29,5' 10",UK(work permit Visa), Engineer,Ref 2728.

49. Age 29,5' 9", British Citizen, Engineer, Looking for a matching woman, Ref 2557.

50. Age 32,5' 8",UK(student visa), Graduate degree, Looking for a British PR or Citizenship,Ref 2440.

51. Age 25,6'0", UK PR,A/L,seeking homely educated girl,Ref 2327.

52. 32 வயது லண்டனில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3413

53. 32 வயது சுவீடனில் வசிக்கும் மணமகள் தகுந்த மணமகனை பிரித்தானியாவில் தேருகின்றார். Ref: 3414

54. 24 வயது 5'2" யாழில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3416

55. 28 வயது 5'3" லண்டனில் வசிக்கும் விவாகரத்துப் பெற்ற குழந்தையுடன் வாழும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3418

56. 32 வயது லண்டனில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3420

57. 30 வயது 5'6" லண்டனில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3420

58. Age 30, 5'6", Doctor, British citizen, looking for a Doctor. Ref: 3423

59. 41 வயது கனடானில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3431

60. 46 வயது லண்டனில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3425

61. 29 வயது கொழும்பில் வாழும் IT பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3434

62. 24 வயது 5'5" லண்டனில் வாழும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை Ref: 3436

63. வயது 25, 5'3", Student Visa London இல் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 3392

64. வயது 31, 5'2", இலங்கையில் வசிக்கும் மணமகளுக்கு London PR உள்ள மணமகனைத் தேடுகின்றனர். Ref: 3402

65. வயது 29, 5'6", London இல் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 3404

66. வயது 25, BSc, இலங்கையில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 3406

67. வயது 24, 5'4", BSc London இல் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 3410

68. வயது 32, London இல் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 3413

69. வயது 32, Swiss இல் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 3414

70. Age 30, 5'3", British Citizen, Chemical Engineer, looking for a professional groom. Ref: 3389

71. Age 29, 5'5", British Citizen, Doctor, looking for a well-educated groom. Ref: 3390

72. Age 28, 5'8", British Citizen Engineer, seeking suitable groom. Ref: 865

73. வயது 29, 5'4", Graduated, இலண்டனில் Student Visa,ல் வசிக்கும் மணமகள் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனை தேடுகின்றார். Ref: 3381


74. வயது 23, 5'2", இலங்கையில் வசிக்கும் A/L படித்த பெண்ணுக்கு தகுந்த துணையை தேடுகின்றனர். Ref: 3378

75. Age 29, 5'2", A/L finished, Living in Sri Lanka, looking for a suitable groom with PR. Ref: 3377

76. Age 27, 5'5", British Citizen, working as a Commercial Financial Analyst, looking for a well-educated groom. Ref: 3371

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# சீதனப் பேய்!



அண்மையில் நடந்த ஒரு மத்திய அலை வரிசை வானொலி நிகழ்வு இது. வாழ்க்கையில் ஏற்பட்ட சவாலும் அதனை எதிர் கொண்டு வெற்றிபெற வழிமுறையும் என்ற தலைப்பிலான நேயர் நேரடி கருத்து நிகழ்வு அது. புலம்பெயர்ந்த வாழ்வில் இங்கு நண்பனை நம்பி கோழிக்கடைக்கு முதலிட்டு அறுபதினாயிரம் பவுண்வரை இழந்து பின் கடும் உழைப்பில் கடனை திருப்பிய கதையுடன் நிகழ்வை ஒரு நேயர் ஆரம்பித்து வைத்தார்.

அந்த உரையாடலைத் தொடர்ந்து இங்கு வாழும் ஒரு பெண் தன் கருத்தைத் தெரிவித்தார். தனக்கு திருமணம் இங்கு வாழும் ஒருவருடன் பேசி நிச்சயிக்கப்பட்டதையும் ஊருக்கு வந்து திருமணம் செய்துகொண்ட அவர் இலண்டன் திரும்பியபின், திருமணத்துக்கு பேசப்பட்ட சீதனப் பணம் இரண்டு இலட்சம் வழங்கப்படாததால் தன்னை அழைக்க மறுத்ததையும் தெரிவித்தார்.

சிறிய கடையை ஊரில் நடத்திக் கொண்டிருந்த தன் தந்தை போராட்ட காலத்தில் வியாபார வருவாய் குறைந்த காரணத்தால் குறித்த பணத்தை வணங்க முடியவில்லையாம். இங்கு வாழ்ந்த கணவரிடம் அந்தப் பணத்தைச் சிலவருடங்கள் பொறுத்து வாங்கும்படி கூறுமாறு தான் கேட்டுக்கொண்டதாகவும் அது பெரியவர்கள் பேசிய விடயம் தான் தலையிட மாட்டேன் பணத்தைக் கட்டியபின் உன்னை அழைக்கின்றேன் என்று அவர் பதில் சொன்னதாகவும் கூறினார். கடுமையான உழைப்பில் சிக்கன வாழ்வினோடு கண் மேற்கொண்டு அந்தப்பணத்தைச் சிறிது சிறிதாக சேமித்ததாகவும் இருவருடங்கள் நிறைவேறிய நிலையில் தன் கணவன் பணத்தைப் பிறகு கொடுக்கலாம் நீ உடன் இலண்டனுக்கு வா எனக் கேட்டுக்கொண்டபோதும் தான் மறுத்து மூன்றாண்டுகள் நிறைவேறிய நிலையில் முழுப்பணத்தையும் ஊரில் வாழ்ந்த தன் கணவனின் வீட்டாருக்கு கொடுத்து விட்டே இங்கு வந்ததாகவும் கூறினார்.

அந்த சீதனப்பிரச்சினை மூன்றாண்டுகள் தன் குடும்ப வாழ்வை தள்ளிப்போட வைத்துள்ளது என்ற எண்ணம் அவரின் மனதை வெகுவாகப் பாதித்து உள்ளது. இங்கு வந்து குடும்ப வாழ்வை ஆரம்பித்தபோதும் தான் அதிசயப்பட்டதாகத் தெரிவித்தார். கணவர் மிக வசதியாக வாழ்வதைக் கண்டதாகக் கூறினார். ஒவ்வொரு மாடிப்படிகளுமே பணத்தால் நிறைந்திருந்ததாக விலைமதிப்பு மிக்க அலங்காரப் பொருட்கள் வீட்டில் நிறைந்திருந்ததை அவர் குறிப்பிட்டார். ஊரில் இருந்தபோது இங்கு அவர் ஓரளவு வசதியாக வாழ்வதாக அறிந்திருந்த போதிலும் இவ்வளவு வசதியுடன் இருப்பாரென தான் எண்ணவில்லை என்றார்.

இவ்வளவு வசதிகளுடன் இருந்த அவர் இரண்டு இலட்சம் ரூபா சீதனப் பணத்துக்காக தன் மூன்று ஆண்டு குடும்ப வாழ்க்கையை ஒத்தி வைத்ததை அவர் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயினும் குடும்பவாழ்வைத் தொடர்ந்தார். ஒரு ஆண் மகவு பிறந்த நிலையில் கணவர் ஒரு விபத்தில் இறந்து விட்டார். சீதனப் பணம் ஏற்படுத்திய மனவெறுப்பு அந்த வீட்டிலும் அவருக்கு வெறுப்பை ஏற்படுத்தியிருந்தது. அதை வாடகைக்கு வழங்கிவிட்டு இப்போ நிம்மதியாக தான் தன் மகனுடன் இன்னொரு வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு எடுத்து வாழ்வதாகத் தன் கதையைக் கூறிமுடித்தார்.

சீதனப்பிரச்சினையில் மாமிமார் கொடுமை கணவன்மாரின் சீதனச்சித்திரவதை குடும்பப் பெண்களின் தற்கொலை, என்பன காலா காலமாக அன்றாடம் வரும் செய்திகள் தான். ஒப்பீட்டளவில் தமிழ் நாட்டை விட யாழ்ப்பாணத்தில் சீதனக் கொடுமை குறைவு என்றாலும் அது இன்றும் தொடர்கதை தான். இந்த சகோதரியின் கதை என் மனத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியது. போராட்டச் சூழலில் புலம்பெயர்ந்த வாழ்வில் சீதனம் ஏற்படுத்தும் மாறாத சோகம். நான றிந்த நாற்பதாண்டுகளுக்கு முற்பட்ட ஊரில் நிகழ்ந்த இன்னொரு பரிதாபக்கதை இது.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

வன்னி குடியேற்றத் திட்டத்தையொட்டிய ஒரு குடும்பத்தில் நடந்த கதை. ஐந்து பெண்பிள்ளைகளின் தந்தை அந்த விவசாயி பத்திரிகையில் வந்த மணமகள் தேவை விளம்பரத்தைப் பார்த்து தன் மூத்த மகளுக்குத் திருமணம் பேசினார். மலையகத்து மாப்பிள்ளை, தேயிலைத் தோட்ட முகாமையாளர் என்ற உத்தியோகத் தராதரம். சீதனமாக வயற்காணி வேண்டாம் அதை விற்று பணமாகக் கொடுங்கள் என்பது மணமகன் பகுதி நிபந்தனை. உத்தியோக மாப்பிள்ளை வாய்த்துள்ளார் தன் ஏனைய நாலு பெண்களையும் ஏற்ற இடங்களில் சீதனம் கொடுத்து திருமணம் செய்ய அவர் உதவியாக இருப்பார் என்பது அந்த ஏழை விவசாயியின் நப்பாசை. இன்னொருவரின் வீட்டுக்கு வழங்கப்பட்ட ஒரு ஏக்கர் காணியில் ஒரு மூலையில் கொட்டில் அமைத்து நான்கு பெண் பிள்ளைகளோடு வாழ்ந்து கொண்டு தன் குடியேற்றக்காணியை விற்று சீதனமாகக் கொடுத்தார். மாப்பிள்ளை ஒரு தடவை பெண்ணையும் கூட்டிக்கொண்டு மலையகம் போனார். மறுமுறை மாமனார் வீட்டுக்கு வந்து வயிற்றுப் பிள்ளையோடு இருந்த மனைவியை விட்டுவிட்டுப் போன மாப்பிள்ளை போனவர் போனது தான் எங்கு தேடியும் காணக் கிடைக்க வில்லை.

இந்த நிலையில் அந்த ஏனைய பெண்களுக்கு திருமணத்தை ஏற்படுத்த அந்தப் பெற்றோர் கடும் உழைப்போடு வாழ்வை நிமிர்த்தி திரும்ப பொருத்தமான இடங்களில் அந்தப் பெண்களுக்குத் திருமணம் செய்து முடித்தார்கள்.

இலங்கையில் தேசவழமைச்சட்டமென்ற சிறப்புச்சட்டப் பிரிவு யாழ்ப்பாணச் சீதன வழங்கலுக்கு சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தலுக்கு துணை புரிந்திருக்கின்றது. தன் தராதரத்திலும் பார்க்க உயர்ந்த இடத்தில் தன் பிள்ளைக்குத் திருமணம் பேசி நல்ல வாழ்வு அமைத்துத் தரவேண்டுமென்ற பேராசை சீதனப் பேய் வியாபாரமாகி அசுர வளர்ச்சிபெறக் காரணமானது. கல்யாணத் தரகர்மாருக்கும் தொழிலைத் தந்தது.

பெண்களுக்கான ஒழுக்கம் கலாச்சாரம் என்ற பெயரில் திணிக்கப்பட்ட வாழ்க்கை முறையும் காதல் என்ற உணர்வையும் ஒழுக்கமீறல், சமுதாயக் குற்றம் என்ற கண்ணோட்டத்துக்குள் அடக்கியது. 'பொம்பிளை சிரித்தால் போச்சு புகையிலை விரித்தால் போச்சு' போன்ற வழமை மொழிகளும் சாதி சமயம் சம்பிரதாயம் என்ற வேலிகளும் சீதனப் பேயின் வளர்ச்சிக்கு அறியாமலேயே துணைபோயின.

விளைவு இன்றும் தொடரும் விபரீதங்கள். திருமண நேரத்தில் சீதனம் கேட்டு தாலி கட்ட மறுப்பது கல்யாண எழுத்து என்ற சடங்கில் அழைக்கப்பட்டவர்கள் முன்னிலையில் சீதனம் கேட்டு அடம்பிடித்தல் என்பது அங்கும் இங்குமாக நடந்த நடக்கின்ற சங்கதிகள் தான்.


அதுவே இன்றும் சினிமாக் கதைகளிலும் கதைகளிலும் காட்சிகளாகின்றன. மகளுக்கோ அல்லது சகோதரிக்கோ சீதனம் கொடுக்க வேண்டும் என்பதற்காக சீதனம் கேட்க வேண்டிய நியாயப்படுத்தல்களையும் இந்தச் சீதனப் பேய் ஏற்படுத்தி விடுகின்றது.

தாயகம் தேசியம் தன்னாட்சி என்று போராடுகின்றோம். பெண் சமத்துவம் பெண்கள் விடுதலை மகளிர் தினம் என்று கொண்டாடுகின்றோம். எல்லையை மீறி பேயாட்டம் போடும் இந்தச் சீதனக்கொடுமையை அகற்ற என்ன செய்து கிழித்தோம்? கேள்வி தான்.

---

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கராடிச், மிலாடிச்...



ஆனால் அதன் அரச அதிபர் ஓமர் ஹசன் அஹ்மட் அல் பசீர் (Omar Hassan Ahmad Al Bashir) மீது அனைத்துலக குற்றவியல் நீதிமன்றினால் கைதாணை (பிடியாணை) பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### சூடான்

சூடானில் இஸ்லாமிய ஆட்சியாளர்களுக்கும், பூர்வீகக் கறுப்பின மக்களிற்கும் இடையில் 50 வருடங்களாக இடம்பெற்ற உள்நாட்டு போரில் ஒன்றரை மில்லியன் (15 இலட்சம்) மக்கள் உயிரிழந்துள்ளனர். கடந்த 9ஆம் நாள் (09-07-2011) தெற்கு சூடான் சுதந்திரப் பிரகடனம் செய்யப்படும்வரை பழங்குடி மக்கள் டார்ஃபூரில் இடம்பெயர்ந்து அவலப்பட்டதும், கறுப்பின மக்கள் மீது இடம்பெற்ற படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள் பற்றி நாம் நாளாந்தம் செய்திகளில் அறிந்திருந்தோம்.

இவை பற்றி கவனம் செலுத்திய ஐக்கிய நாடுகள் சபை, குறிப்பான அதன் அப்போதைய செயலாளர் நாயகம் கொபி அனான் (Kofi Annan) டார்ஃபூருக்கான அனைத்துலக விசாரணை ஆணைக்குழுவை (The International Commission of Inquiry on Darfur) 2004ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நியமித்திருந்தார். இந்த அணைக்குழு சரியாக மூன்று மாதங்களில், 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தனது அறிக்கையை கொபி அனானிடம் சமர்ப்பித்திருந்தது.

கொபி அனான் அறிக்கையைப்பெற்று இரண்டு மாதங்களில் (31-03-2005) ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் டார்ஃபூர் பற்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், அனைத்துலக சட்ட விதிகள் மீறப்பட்டு போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இன அழிப்பு இடம்பெற்றதால், அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் இதுபற்றி விசாரணை நடத்த வேண்டும் எனப் பரிந்துரை செய்தது.

இந்த விசாரணையை தாம் நடத்த வேண்டுமா என அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் நடத்திய முன்னாய்விற்கு பல அரசாங்கங்கள், ஆபிரிக்க ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபை, அதன் இதர அமைப்புக்கள், உள்நாட்டு - வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்நாட்டு - வெளிநாட்டு ஊடகங்கள், மற்றும் பல நிபுணர்கள் சாதகமாகப் பதில் வழங்கியதால், இந்த விசாரணை இடம்பெற்று, சூடானின் முன்னாள் உள்துறை அமைச்சர் அஹ்மட் முஹமட் ஹருன் (Ahmad Muhammad Harun), அலி முஹம்மட் (Ali Muhammad Ali Abd-Al-Rahman) ஆகியோர் மீது 2007ஆம் ஆண்டும் அரச தலைவர் ஓமர் ஹசன் அஹ்மட் அல் பசீர் (Omar Hassan Ahmad Al Bashir) மீது 2009 மார்ச், பின்னர் 2010 ஜூலையில் இரண்டாவது தடவையாகவும் கைதாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

படுகொலை, இடம்பெயர வைத்தமை, வதை, பாலியல் வல்லுறவு போன்ற மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் (Crimes against humanity), பொதுமக்களிற்கு எதிரான தாக்குதலை வழி நடத்தியமை, போன்ற போர்க்குற்றங்கள் (War crimes), படுகொலை, காயங்களை ஏற்படுத்தியமை, உள ரீதியான தாக்கத்திற்கு உட்படுத்தியது, சமூக, கலாசார கட்டுமானங்களை அழித்தமை போன்ற இன அழிப்பு (Genocide) ஆகிய 10 குற்றங்கள் ஓமர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

### என்ன செய்யலாம்?

சூடானை இங்கு உதாரமாக எடுத்துக்கொண்டதற்குக் காரணம் அதுவும் சிறீலங்கா போன்று அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றில் இணைந்து கையெழுத்திடாத நாடு என்பதால், சூடானில் இடம்பெற்றதற்கும், தமிழீழத்தில் எமது மக்கள் மீது இடம்பெற்ற பேரவலத்திற்கும் உயிரிழந்த மக்கள் எண்ணிக்கையைத் தவிர வேறெந்த வித்தியாசமும் இல்லை.

ஆனால் லிபியாவுடன் ஒப்பிடும்போது எமது தாயகத்தில் உயிரிழந்த மக்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகமாகும். லிபியாவில் சில நூற்றுக்கணக்கான மக்களே கொல்லப்பட்டுள்ள போதிலும், அந்த நாட்டின் அரசாங்கம் மீதான விசாரணை, மற்றும் கைதாணை பிறப்பிக்கப்பட்ட வேகம் என்பன, அனைத்துலகப் பொறிமுறை பற்றிய சந்தேகத்தையும், சோர்வையும் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றன என்பது உண்மையே காரணம் இவ்வருடம் பெப்ரவரி 26ஆம் நாளே லிபியா மீது விசாரணை நடத்த வேண்டும் என ஐ.நா பாதுகாப்புச் சபை தீர்மானம் நிறைவேற்றியது.

லிபியா மீதான நேட்டோ படைகளின் தாக்குதல்கள் ஆரம்பித்து 100வது நாளான கடந்த மாதம் 27ஆம் நாள் (27-06-2011) லிபிய அரச அதிபர் கேணல் முவம்மர் கடாபி, அவரது மகன் சயிப் அல்-இஸ்லாம், அரச புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் அப்துல்லா அல்-சனூசி ஆகியோர் மீது அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் கைதாணையைப் பிறப்பித்தது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை பரிந்துரை செய்த இரண்டு விசாரணைகளும் (சூடான், லிபியா) மிக வேகமாக நடந்தேறியுள்ள நிலையில், தமிழ் மக்கள் மீதான இன அழிப்புக்கான சான்றுகளை ஐ.நா நிபுணர் குழு தனது அறிக்கையில் உள்ளடக்கிய போதிலும், தமிழ் மக்கள் மீது இடம்பெற்றது இன அழிப்பு என்று சொல்வதற்கும், அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் ஐ.நா தயக்கம் காட்டுவது ஏன்?

ஐ.நா செயலாளர் பான் கி-மூன் இலங்கை பற்றிய அறிக்கையை கிடப்பில் போட்டுவிட்டு அதன் மேல் அமர்ந்திருக்கின்றார் என அனைத்துலக மன்னிப்புச் சபை, பிரித்தானிய, பிரான்ஸ் முன்னாள் வெளிவிவகார அமைச்சர்கள் டேவிட் மிலிபான்ட், பேர்ணாட் குஸ்ணர் (இவர்களும் தமது பதவிக் காலத்தில் உரிய முறையில் செயற்படவில்லை என்பது வேறு கதை) ஆகியோர் கூறியும், நவம்பர் மாதம் வெளிவர இருக்கும் கற்றுக்கொண்ட பாடங்களும், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஐ.நாவும், மேற்குலகும் பார்த்துக் காத்திருப்பதாகவே உணரப்படுகின்றது.

15 நாடுகளைக் கொண்ட ஐ.நா பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு, வீற்றோ அதிகாரம் கொண்ட ஐந்து நாடுகளில் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் தவிர சீனா, ரஸ்யா போன்றன சிறீலங்காவிற்கு ஆதரவாக இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

சூடான், லிபியா போன்ற நாடுகளின் விடயத்தில் இந்த இரண்டு நாடுகளின் ஆதரவைப் பெற்று தீர்மானம் நிறைவேற்றிய மேற்குலகம், ஈழத்தமிழ் மக்கள் விடயத்தில் மட்டும் ஏன் செய்ய முடியாது?

டார்ஃபூரிலும், பென்காசியிலும், பொஸ்னியாவிலும் அக்கறைகொள்ளும் உலகம் முள்ளிவாய்க்காலை மறக்கவும், மறைக்கவும் முற்படுவதும் ஏனோ? உலகையும், உலகின் மனங்களையும் வெல்லும் ஒரேயொரு சக்தி, தற்பொழுது புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடமே!

# தமிழ்த் திரைபடங்களில் காதலும் சாதியும்.



*சென்ற வாரத் தொடர்ச்சி......*

*அங்காடித் தெரு*

சிறப்பாக அமைக்கப்பட்ட திரைக்கதையினூடே, நிறுவனம் (முதலாளித்துவம்) எவ்வாறு தொழிலாளர்களை சுரண்டுகிறது என்பதை பட்டவர்த்தனமாக சித்தரிக்கிறது இப்படம். முற்போக்கு முகவரியுடன் வந்திருக்கும் எவ்வளவு தூரம் முற்போக்கானது என்பதை காண்போம்.

இதன் இயக்குனரின் முந்தைய படமான 'வெயிலில்' கதாநாயகனின் தந்தையை அறிமுகப்படுத்தும்போது, சாதிப்பெயரை வெளிப்டையாகவே குறிப்பிட்டு, பெருமையாக அறிமுகப்படுத்தப்படுவார். அது, சாதியின் மீதான சாய்வு இயக்குனருக்குள்ளது என்பதை தெளிவுபடுத்தும் காட்சி. அப்படத்தின் வில்லன் அண்ணாச்சி எனக் குறிப்பிடப்படுவார். அவர் (வில்லன்) சார்ந்த சாதியைப்பற்றி வெளிப்டையாக படம் எதுவும் கூறாது, எனினும் பார்வையாளர்களால் புரிந்து கொள்ள இயலும்.

அங்காடித் தெருவில் காட்டப்படும் நிறுவனம், ஒரு பெரிய துணிக்கடை. அது தமிழகத்தில் புகழ் பெற்ற ஒரு கடையைத்தான் குறிப்பால் உணர்த்துகிறது. இதில் காதலர்களுக்கான எதிரி, மற்றைய தமிழ் படங்களை போலல்லாமல், வறுமையும், முதலாளித்துவமும் ஆகும். முதலாளித்துவத்தின் கையாளாக இருப்பது, அண்ணாச்சி என அழைக்கப்படும் கண்காணிப்பாளராகும். அவர், கருங்காலி என, அனைத்து தொழிலாளர்களாலும், பட்டப் பெயரால் அழைக்கப்படுகிறார். இக்கதாபாத்திர சித்தரிப்பு மூலம், மறைமுகமாக ஒரு சாதிக்கு எதிரான ஒரு நிலையை இப்படம் எடுத்துள்ளது, என எண்ணத் தோன்றுகிறது. அவர் (வில்லன்) சார்ந்த சாதியைப்பற்றி வெளிப்டையாக படம் எதுவும் கூறாது, எனினும் பார்வையாளர்களால் புரிந்து கொள்ள இயலும்.

முதலாளித்துவத்தின் கொடுமைகளை உணர்த்த, மறைமுகமாக ஒரு சாதியை பயன்படுத்தியிருப்பது, எவ்வளவுதூரம் முற்போக்கானது எனத் தெரியவில்லை. இயக்குனர் சாதியை தாண்டி சிந்திக்கவில்லை, என்பதை தெளிவாக, அவரது இரு படங்களும் உணர்த்துகின்றன.

*பாரதி கண்ணம்மா*

இங்கு உயர் சாதி பெண்ணுக்கும், அவர்கள் வீட்டில் வேலை பார்க்கும் தாழ்த்தப்பட்ட சாதி பையனுக்கும் உள்ள காதல் மிக அழகாக சொல்லப்படுகிறது. சாதி வெறி கொண்ட அவளின் தந்தைக்கு பயந்து, அவரிடம் சொல்லாமல் படம் முழுதும் மறைத்து விடுகிறாள். ஆனாலும், அவள் காதலிக்காமலில்லை. தனது காதல் நிராகரிக்கப்படும், மேலும் காதலன் கொல்லப்படுவான் மற்றும் அவனது குடுப்பத்தினர், சாதியினர் அனைவரும் துன்புறுத்தப்படுவர், மேலும் ஊரைவிட்டு துரத்தப்படுவர், என்பதை நன்கு அறிந்தும், அவள், தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த, வீட்டு வேலைக்காரனை காதலிக்கின்றாள். தான் செய்வதை நன்கு அறிந்துள்ளாள். அவள் நம்புவதெல்லாம், காதலையும், காதலனையுமே. தனது காதலை, சாதிக்கு பயந்து வெளிப்படுத்தாமல் இருக்கும் நாயகன், அவளை காதலை மறக்கும்படி அறிவுறுத்துகிறான். அவளோ காதலை கைவிடுவாதாயில்லை.

இவளுக்கும், காதல் பட நாயகிக்கும் உள்ள வேறுபாடு இதுதான். இவள் சாதியை எதிர்த்து போராடுகிறாள். அவள் (காதல்) சாதியைப்பற்றி அறியாதவள்? வெறும் காதல் உணர்வு பீடிக்கப்பட்டவள். மிகவும் இளம் பருவத்தினள்? பக்குவமற்றவள். பருத்திவீரன் நாயகி காதலால் கண்கள் மறைக்கப்பட்டவள். அவள் காதலனின் கெட்ட குணங்களைப்பற்றிக்கூட கவலைப்படாதவள். அவளுக்கு காதல் தான் எல்லாமுமே. அங்காடித்தெரு நாயகிக்கோ இது போன்ற பிரச்சினைகள் ஏதுமில்லை. அவள் கிராமத்தைச் சார்ந்தவள். அவ்வளவே. நகரத்தைச் சார்ந்த பெண்கள் குறித்த ஒரு அசிங்கமான சித்தரிப்பைப் பற்றி, காலச்சுவடு இதழில் வந்த, இப்பட விமரிசனத்தில், குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது, பாரதி கண்ணம்மா நாயகி உயர்ந்து நிற்கிறாள். அவள் காதலிக்கிறாள். தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த பையனை தெரிந்தே காதலிக்கிறாள். சாதிக்குப் பயந்து, காதலை எக்கணத்திலும் காட்டிக் கொடுப்பவள் இல்லை. காதலை இறந்தும் கைபிடிப்பவள். அவள் மவுனமாக, சாதி வெறி பிடித்த, தனது தந்தைக்கு எதிராக ஒரு போராட்டம் நடத்துகிறாள். இறுதியில் வெற்றியடையவும் செய்கிறாள்.

இயக்குனர் சேரனின் முதல் படம் இது. அவர் பக்கம், பக்கமாக வசனம் பேசி, அவளது தந்தையை மனம் மாற்றியிருக்கலாம் (விக்கிரமனின், விஜய் நடித்த புகழ் பெற்ற 'பூவே உனக்காக' என்ற படத்தில் இப்படிதான் தீவிர மதப் பற்றாளர்களை மாற்றுவதாக காட்டப்பட்டுள்ளது). ரஜினி படங்களைப் போல ஒரு பெரிய சண்டைக் காட்சியில், கதாநாயகனை வெற்றி பெறச் செய்து, காதலர்களை சேர்த்து வைத்திருக்கலாம். விஜயகாந்த் படங்களில் வருவது போன்ற காதல் பாதுகாவலர் ஒருவரையும் பயன்படுத்தியிருக்கலாம். இப்படி, எந்தவித திரைப்பட பாணியிலான முடிவையும் எடுக்காமல், இயக்குனர் மிக இயல்பான ஒரு முடிவை எடுத்துள்ளார். தென் மாவட்டங்களில், இப்படிப் பட்ட காதலுக்கு, இது ஒரு சாத்தியமான முடிவுதான். மேலும், தென் மாவட்டங்களில் சாதி விட்டு சாதி காதலிப்பவர்கள் அனுபவிக்கும் பயம், பதட்டம் மிக இயல்பாக படத்தில் பதிவாகி உள்ளது. நாயகியின் தந்தை, காதலர்களின் இறப்பிற்குப் பிறகு தனது சாதீய உணர்வை கைவிடுவதாக காட்டப்பட்டுள்ளது திரைப்பட பாணியிலானது எனக் கூற இடமுள்ளது.

இப்படத்தின் நாயகனின் பாத்திரமும் மிக இயல்பாகவே சித்தரிக்கப்பட்டுள்ளது, உள்ளூர (உயர்சாதிப் பெண்மீது) காதல் வயப்பட்டவன், முன்னுள்ள சாத்தியங்களில் ஒன்றைத்தான் இயக்குனர் இப்படத்தில் பதிவு செய்துள்ளார். மேலும், இயக்குனரின் பார்வை திணிக்கப்பட்ட படைப்பு அது. அங்காடி தெரு நாயகன் காதல் வயப்பட்ட ஒரு பையன் அவ்வளவே.

எப்படியிருப்பினும் நாம் சாதியை மீறி படமெடுக்க பல வெளிப்புற தடைகள் உள்ளன. நம் இயக்குனர்களுக்கு அகத் தடைகளும் இல்லாமலில்லை. இவைகள் களையப்படும்வரை, நம் திரைப்படங்களில் சாதி நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆதரிக்கப்பட்டு வருவதை தவிர்க்க இயலாது. இக்கட்டுரையில் ஆய்வு நோக்கில்தான் இப்படங்கள் அணுகப்பட்டுள்ளது. மேலும் எந்த சாதிக்கும் ஆதரவாளராகவும் இல்லை, எதிர்ப்பாளரும் இல்லை. வாசகர்கள் ஆய்வு நோக்கில் மட்டுமே இக்கட்டுரையை அணுகினால் சிறந்தது.

*- நமசிவாயம் அகிலன்*

திரை விமர்சனம்

# Transformers 3 : Dark of the Moon



Transformers எனும் உருமாறிகள் சைபர்ட்ரான் எனும் வெளிகிரகத்தைச் சார்ந்தவர்கள். அவர்களில் டிசெப்டிகான், பிரைம் என இரண்டு இனத்தவர்கள் இருக்கிறார்கள். டிசெப்டிகானைச் சார்ந்தவர்களின் தலைவன் மெகட்ரான், பிரைம் இனத்தைச் சார்ந்தவர்களின் தலைவன் ஆப்டிமஸ் பிரைம். இவர்களுக்குள் நிகழும் போரினாலும் விளைவுகளினாலும் பூமி சம்பந்தப்படுவதாக அல்லது பாதுகாப்பிடமாக முந்தைய படங்கள் காட்டுகின்றன. மற்ற படங்களைப் பார்த்தவர்களுக்கு ஒரு விஷயம் புரிந்திருக்கும். டிசெப்டிகான்கள் தங்களுக்காக ஒரு உலகை நிர்மாணித்து அதில் வாழ நினைக்கிறார்கள். ப்ரைம்களோ உயிர் வாழத் தகுதியுள்ள கிரகத்தை பாதுகாக்க அல்லது அழிக்காமலிருக்க நினைப்பவர்கள்.

1961ல் சைபர்ட்ரானில் போர் நிகழ்கிறது. விண்வெளிப்பாலம் அமைக்கும் தூண்களை ஒரு விண்வெளிக்கப்பலில் சுமந்துகொண்டு அக்கிரகத்தை விட்டு வெளியேறுகிறது 'செண்டினல் பிரைம்' எனும் உருமாறி. ஆனால் டிசெப்டிகான்களின் குண்டுகளால் தாக்குதலுற்று சேதமடைய அந்த விண்வெளிக்கப்பல் நிலவில் வந்து விழுகிறது. நிலவின் மறுபக்கம் பூமியிலிருந்து பார்க்கமுடியாத ஒரு இருண்ட பக்கமாகவே இருந்து வருகிறது. ஏதோ ஒரு வெளிக்கிரக கப்பலொன்று நிலவில் விழுந்துவிட்டதாக உணர்ந்த அமெரிக்க விண்வெளித்துறையான நாசா அங்கே முதன்முறையாக மனிதனை அனுப்பி சோதனையிட முயலுகிறது. நிலவில் முதன்முதலாகப் பயணித்த நீல் ஆம்ஸ்ட்ராங்கும் அந்த கப்பலை சோதனையிடுகிறார்கள். ஆனால் அளவில் மிகப்பெரியதாக இருப்பதால் வெறும் பார்வையை மட்டும் பதித்துவிட்டு திரும்பிவிடுகிறார்கள். எனினும் பிறிதொரு காலகட்டத்தில் 'செண்டினல் பிரைம்' உருமாறி பூமிக்குக் கொண்டு வரப்பட்டு உயிர் கொடுக்கப்படுகிறது

இதேவேளை வேலை தேடிக் கொண்டிருக்கும் கதாநாயகன் சாமுக்கு நிலவில் கப்பல் விழுந்த ரகசியம் தெரியவருகிறது. அதனுடன் விண்வெளிப் பாலம் அமைக்கப்போகும் தூண் பற்றியும், அதனால் மனித குலத்திற்கு ஏற்படப் போகும் பிரச்சனை பற்றியும் தெரிந்து கொள்கிறான். அதேவேளை மெகட்ரான் அமெரிக்க அரசிடம் பிரைம்களான ஆட்டோபாட்களை வெளியேற்ற மிரட்டுகிறது. அதன்படி ஆட்டோபாட்கள் ஒரு ராக்கெட்டில் வைத்து அனுப்பப் படுகின்றனர். டிசெப்டிகானின் திட்டப்படி அந்த ராக்கெட் அழிக்கப்பட்டு ஆட்டோபாட்கள் அனைத்தும் ஆப்டிமஸ் பிரைம் உட்பட அழிகிறார்கள்.

மெகட்ரானும் செண்டினல் பிரைமும் விண்வெளிப் பால்ம் அமைக்க பூமியெங்கும் தூண்களை நிறுவுகிறார்கள். அவர்களின் முயற்சி வெற்றியானதா? ஆப்டிமஸ் பிரைம் போன்ற உருமாறிகள் இல்லாத நிலையில் சாம் எப்படி சமாளித்து தன் காதலியையும் உலகையும் காப்பாற்றப் போகிறார் என்பது மீதிக் கதை !!யப்பா? எழுதிய எனக்கே குழப்பமாக இருக்கும் பொழுது சத்தியமாக இந்நேரம் இந்த வரிகளை நீங்கள் படிப்பீர்களா என்பதே சந்தேகமாகத்தான் இருக்கிறது. முந்தைய இரண்டு படங்கள் பார்க்காதவர்கள் இப்படத்தைப் பார்க்க நேர்ந்தால் யார் வில்லன், யார் ஹிரோ என்றே தெரியாமல் 'ஙே' என்று முழித்துக் கொண்டுதான் பார்க்கவேண்டியிருக்கும்.

சமீப காலங்களில் வரலாற்று நிகழ்வுடன் புனைகதையை இணைத்து (பொன்னியின் செல்வனைப் போல) படமெடுப்பது சகஜமாகி வருகிறது. நிலவில் அமெரிக்காவின் முதல் மனிதப் பயணமான அப்போலோ 11 ஐயும், செர்நோபில் அணு உலைக்குக் காரணம் எது என்பதையும் இணைத்து திரைக்கதை உருவாக்கியிருக்கிறார்கள். பார்ப்பவர்கள் நம்பும்படியாக அமைந்திருக்கிறது. ஒரு எலக்ட்ரானிக்ஸ் மனிதர்களின் இனப்போராட்டம் அது வடிவமைக்கப்பட்டிருக்கும் கிராஃபிக்ஸுக்காகவும், மற்றும் முப்பரிமாண பார்வைக்காவும் ஒருமுறை பார்க்கலாம் !

*- ஆதவா*


NAG & Co.
SOLICITORS
Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Email : nagandco@yahoo.co.uk
Unit 3 Holles House, Myattsfield south, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

✓ CRIME
✓ CONVEYANCING
✓ MATRIMONIAL
✓ IMMIGRATION
✓ TRAFFIC MATTERS
✓ LANDLORD & TENANTS
✓ POLICE STATION MATTERS
✓ EMPLOYMENT MATTERS
✓ WORK PERMITS

திரை விமர்சனம்

# வேங்கை



*நடிகர்கள்: தனுஷ், தமன்னா, ராஜ்கிரண்*

*ஒளிப்பதிவு: வெற்றி*

*இசை: தேவி சிறீ பிரசாத்*

*இயக்கம் : ஹரி*

சிங்கத்தின் பெருவெற்றியைப் பார்த்து இருக்கிற பெரிய ஹிரோக்கள் எல்லாம் ஹரியுடன் அருவாள் சகிதம் ஒரு ரவுண்ட் வந்தால் அடுத்த நாலு படத்தை தேத்தி விடலாம் என்ற கனவுடன் இருந்த நேரத்தில் தனுஷ்க்கு அந்த வாய்ப்பு அடித்தது. ஆனால் சிங்கம் போல இதுவும் மிரட்டுமா? என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்திய படம். சன் பிக்சர்ஸ் வாங்கி, பின்பு சில பல பிரச்சனைகளாலே மீண்டும் தயாரிப்பாளர்களிடமே கொடுத்துவிட்டதாக சொன்னாலும் பின்னணியில் ஜெமினி தான் ரிலீஸ் செய்திருப்பதாய் சொல்கிறார்கள். சரி படத்துக்கு வருவோம்.

என்ன பெரிசா இருந்திடப் போகுது. ஒரு கிராமம். ஒரு ஊரு அந்த ஊருக்கே தலைவரா ஒருத்தர் இருப்பாரு. அவர் சொன்னாத்தான் வாக்குப் போடுவாங்க. அவருக்கு ஒரு பிள்ளை இருக்கும். அது அங்க இங்க அட்டகாசம் பண்ணினாலும், வீட்டுல அப்பா பேச்சை தட்டாம இருக்கும். ஊர்ல செஞ்ச சில்லுண்டி வேலையினால அப்பா ஊரை விட்டு வெளியே வேலை பாக்க சொல்வாரு. அங்க போனா.. ஒரு ஆளோட மோதுவாரு.. ஆங்.. இங்க ஒரு சின்ன டுவிஸ்டுக்கு அப்புறம் அது போல ஒரு விஷயம் வருது. நடுவுல காதல், காமெடி இத்யாதி. அப்புறம் வில்லனோட ஒரு மோதல். பத்து நாள், இருபது நாள்ன்னு டேட் குறிச்சிட்டா, படம் ஸ்பீடாப் போறாப்புல ஒரு எண்ணம் நம்மளுக்கு வந்துரும். அங்க இங்க ஒரு சின்ன ட்விஸ்டு அப்புறமென்ன ஒரு சூப்பர் மசாலாக்கதை ரெடி. அவ்வளவு தானே. என்று அடுத்தடுத்த காட்சிகளை நேற்று.. சாரி. . இனி பிறக்க போகிற குழந்தை கூட சொல்லிவிடக்கூடிய திரைக்கதையில் வேங்கையாய் பதுங்கி எலியாய் பாய்ந்திருக்கிறது.

யாராவது ராஜ்கிரணை ஊர் தலைவர், நல்லவர் வேஷத்தில் நடிக்க தடை போட்டால் நன்றாக இருக்கும். அடுத்த ரியாக்ஷன் என்ன செய்வார் என்பது கூட மனப்பாடமாய் கண் முன் தெரிகிறது. காமெடி என்கிற பெயரில் கஞ்சா கருப்பு செய்கிற விஷயங்கள் படு சொதப்பல். எரிச்சல் தான் வருகிறது.

தனுஷுக்கு பெரியதாய் வேலையில்லை. மொத்தமாய் அருவாள் சைஸில் இருந்து கொண்டு, சடசடவென மரத்தில் ஏறி அருவாளை மரத்தின் மீது பாய்ச்சி நிற்பது நன்றாக இருந்தாலும், ஒரு அருவாளே அருவாளை தாங்குகிறதே என்று கவிதை படிக்க தோன்றுகிறது. பட் நல்ல ஐடியா. காதல் காட்சிகளில் தனுஷ் தனியே தெரிகிறார். பிரகாஷ்ராஜுக்கு தூக்கத்தில் கூட ஈஸியா நடிக்கும் கேரக்டர். இவர்களை தவிர, ஹரியின் படங்களில் வரும் அத்துனை கேரக்டர் ஆர்டிஸ்டுகள், துணை நடிகர்கள், அம்பது டசின் அருவாள்கள், டாட்டா சூமோக்களும், சபாரிகளும், அணிவகுக்கிறது. நிறைய டாப் ஆங்கிள், வைட் ஆங்கிளில், மிட் ரேஞ்சில் சுமோக்களும், சபாரிகளும் நன்றாக நடித்திருக்கின்றன. ஊர்வசி, பறவை முனியம்மா, சார்லி போன்றவர்களும் இருக்கிறார்கள். தமன்னா அழகாய் இருக்கிறார். ஆனால் முகத்தில் ஏதோ ஒரு மென் சோகத்தை அப்பிக் கொண்டவாறு இருப்பது ஏன் என்று தெரியவில்லை. தமன்னாவை விட, அவருடன் வரும் தோழிகள் அழகாக இருக்கிறார்கள். தனுஷின் தங்கையாக வருபவர் கூட. பெயர் மறந்துவிட்டது.

வெற்றியின் ஒளிப்பதிவில் குறையொன்றுமில்லை. தேவி சிறீ பிரசாத்தின் இசையில் ஒரு பாடல் பரவாயில்லை. மற்றதில் எல்லாம் பெரிதாய் சுரத்தேயில்லை. வழக்கம் போல எடிட்டிங் பரபரவென இருக்கிறது.

சில படங்களின் கதைக்களம் நடிக்கும் நடிகர்களை வைத்து தெரிந்த, அரைத்த மாவுக் கதையாகவேயிருந்தாலும் எடுபட்டுவிடும். ஆனால் சில நடிகர்களுக்கு பெரிதாய் எடுபடாது. அந்த வகைதான் தனுஷ்க்கு இந்தப் படம்.

விக்ரம், சூர்யாவை வைத்து திரைக்கதையெழுதும் போது இருக்கும் விறுவிறுப்பு மற்ற நடிகர்களுக்கு எழுதும் போது ஹரிக்கு குறைந்து போவது என்ன காரணமோ?. வில்லனுக்கும் ஹிரோவுக்குமான காட்சிகள் எல்லாமே ஏற்கனவே பார்த்த மாதிரி வருவதால் போரடிக்கிறது. அதுவும் தனுஷின் அறிமுகக் காட்சி படு மொக்கை. ஆனால் இடைவேளைக்கு முன்னால் வரும் சேஸிங் காட்சியும், சண்டை காட்சியை செய்த விதமும் தீயாய் வேலை செய்திருக்கிறார்கள். சிங்கத்தில் ஆகட்டும், சாமியில் ஆகட்டும் என்ன தான் லொஜிக் இலலாவிட்டாலும் யோசிக்க விடாத படி அடுத்தடுத்து வில்லனுக்கு ஹிரோவுக்குமான கன்பர்ண்டேஷன் அடிதூள் பரத்தும். இதில் பத்து நிமிஷத்துக்கு ஒரு முறை வில்லன் செல் போனை தரையிலடித்து உடைப்பதை தவிர வேறேதும் பெரிதாய் இல்லை. படத்தில் ஆரம்பத்தில் வரும் காதல் காட்சிகள் கொஞ்சம் பரவாயில்லை. ஆனால் ட்விஸ்ட் வைக்கிறேன் பேர்விழி என்று தமன்னாவை வில்லி ஆக்குவது செம காமெடி.

தன்னை ஒரு கமர்சியல் டைரக்டர் என்று அறிவித்துக் கொண்ட ஹரியிடம் உலகச் சினிமா எதிர்பார்ப்பது நம் தவறு. சொன்னபடி கமர்சியல் படம் கொடுத்திருக்கிறாரா என்று பார்த்தால், சொல்லி அடித்திருக்கிறார். இதற்கு முன்னால் வந்த ஹரியின் படங்கள் எல்லாம் எப்படியிருந்ததோ அப்படித்தானே இருக்கும். இதில் வேறு என்ன எதிர்பார்த்தீர்கள்? என்று கேட்டால். நாம் எதிர்பார்த்தது படம் பார்க்கும் போது லாஜிக் எழவையெல்லாம் யோசிக்க முடியாதபடியான தீயாய் பரவும் திரைக்கதை. அது இதில் மிஸ்ஸிங் என்பதால் தான் புலம்பல்.

சன் டிவி வாங்கியிருந்தால் சூப்பர் ஹிட் படமாய் அலறியிருக்கும் ஆனால் எதுவும் நடக்கவில்லை.

வேங்கை - பாயும் எலி.

*- சங்கர் நாராயணன்*

# சினித்துளி

## சீமானின் அடுத்த 'ஈழப்படம்'!



நீண்ட இடைவெளிக்கு பிறகு 'உச்சிதனை முகர்ந்தால்' என்ற படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார் புகழேந்தி தங்கராஜ். இதில் சத்யராஜும் சீமானும் இலங்கை பிரச்சனை குறித்து குரல் கொடுக்கக் கூடிய படமாக உருவாகிக் கொண்டிருக்கிறதாம்.இலங்கை ராணுவத்தை சேர்ந்தவர்கள் பதிமூனு வயது சிறுமியை கற்பழித்துவிட அந்த பெண்ணின் அம்மா அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிடுகிறார். அதன் பின் அந்த குடும்பத்திற்கு நேர்வது தான் கதை!

எனினும் ஈழ பிரச்சனையை உள்ளப்பூர்வமாக, உணர்வு ரீதியாக போராடுவதை விடுத்து தமிழகத்தில் வியாபாரமாக்கிவிட்டார்கள் என்று இது தொடர்பாகக் கருத்துக் கூறியிருக்கிறார் பாரதிராஜா.

## 16 இயக்குனர்கள் சேரும் 'ஞானி'!



தமிழ் திரையுலகின் புதிய முயற்சியாக 16 இயக்குனர்கள் சேர்ந்து ஒரு படத்தில் நடிக்கின்றனர்.தமிழ் திரையுலகில் இயக்குனர்கள் நடிப்பது புதிதன்று. ஆனால் தற்போது ஞானி என்ற படத்தில் 16 இயக்குனர்கள் சேர்ந்து நடிக்கின்றனர். இயக்குனர்கள் எஸ்.எஸ்.ஸ்டன்லி, பிரபு சாலமன், தம்பி ராமய்யா, சரவண சுப்பையா, சிங்கம் புலி, ரவிமரியா, அரவிந்த்ராஜ், சித்ராலட்சுமணன், சசி மோகன், கேயார், செல்வபாரதி, பிரவின்காந்தி, சஞ்சய் ராம், ஆர்த்திகுமார் உள்ளிட்ட 15 பேர் நடிக்கின்றனர்.

படத்திற்கு கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் என்று பெரிய பொறுப்பை ஏற்றிருக்கிறார் ஆர்த்தி குமார்.

## மீண்டும் பாடகி சித்ரா!!



இசையுலகில் சின்னக்குயில் என்று ரசிகர்களாலும், இசை விமர்சகர்களாலும் அழைக்கப்படுபவர் சித்ரா. இதுவரை 6 தேசிய விருதுகள் வென்று இருக்கும் இவர் சமீபத்தில் தனது ஒரே மகள் உயிரிழந்ததை அடுத்து பாடுவதை தவிர்த்து வந்தார். இந்நிலையில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு சித்ரா மீண்டும் பாட ஆரம்பித்துள்ளார். மலையாள படத்துக்காக ஒரு தாய், தன் மகள் மீது கொண்டிருக்கும் பாசத்தைச் சொல்லும் பாடல் என்பதால் ஒத்துக்கொண்டுள்ளார்.

## போலிஸ் வேடத்தில் டாக்டர் விஜய்!!



விஜய் தற்போது நடித்து வரும் 'வேலாயுதம்', 'நண்பன்' படங்களை அடுத்து நடிக்கவிருக்கும் படம் 'பகலவன்'. இப்படத்தை சீமான் இயக்க தாணு தயாரிக்க இருக்கிறார். அரசாங்கம் அனைத்து துறைகளையும் தனியார் மயமாக்கம் செய்வதை எதிர்த்து போராடும் ஒரு துடிப்புமிக்க இளைஞனின் கதை தான் 'பகலவன்' கதையாம். 'போக்கிரி' படத்தை அடுத்து இப்படத்தில் விஜய் மீண்டும் காவல்துறை அதிகாரியாக நடிக்க இருக்கிறார் என்பது தான் புதுத்தகவல்.

படத்தின் கதைப்படி டாக்டராக இருக்கும் விஜய்க்கும் ஒரு போலீஸ் அதிகாரிக்கும் பிரச்னை வெடிக்கிறது. இதனால் கோபமடைந்த விஜய் ஐ.பி. எஸ் படித்து போலீஸ் அதிகாரியாக மாறி அவருடன் மோதுவாராம்.





'நாகம்மை திருநாமம் நூறுநூறாயிரம் நண்ணினால்
போகங்கள் சேருமே சுக நலன்கள் பெருகுமே'

# Thiruvarulmegu Enfield Nagapooshani Ambaal Temple

# திருவருள்மிகு என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

61 - 65 Church Lane, Edmonton, London N9 9PZ Tel: 020 8884 3333 Website:www.ambaal.org

## 7ம் வருட மகோற்சவ விஞ்ஞாபனம் 2011

(17.07.2011 ஞாயிற்றுக்கிழமை முதல் 03.08.2011 புதன்கிழமை வரை)


அம்பிகை அடியார்களே!
வட லண்டன் என்பீல்ட் பதியில் தன்னை நாடி வரும் அடியார்களின் இடர் களைந்து அருளாட்சி செய்யும் அன்னை நாகபூசணி அம்பாள் திருவருளால் 7ம் வருட மகோற்சவப் பெருவிழா 17.07.2011 பிள்ளையார் திருவிழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறும்.

## CHARIOT FESTIVAL (PUBLIC UBAYAM)
## 31st JULY 2011 SUNDAY

**The Chariot pocession of Enfield Nagapooshani Ambaal & Lord Ganesha will Proceed Via the streets around the temple from 10.00 am till 1.00 pm.**

05.30 am Abishegam Starts
08.30 am Vasanthamandapa pooja
10.00 am Ganapathy & Ambaal on Charits
10.30 am Chariot Festival starts
02.00 pm Navasakthi Archanai

தேர்த்திருவிழா 31.07.2011
ஞாயிறு காலை 10.00 மணி முதல்
மதியம் 1.00 மணி வரை நடைபெறும்.
பொது உபயம்



இவ்விழாவில் அடியார்கள் யாபேரும் விரதமிருந்து ஆசாரசீலர்களாக வருகைதந்து அம்பாளின் அருளைப்பெறும் வண்ணம் வேண்டுகின்றோம்.

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

ATOL PROTECTED 5553